# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 17 வியாழக்கிழமை (31.03.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 125




02

வாகா எல்லைக்கு பாகிஸ்தான்



04

அணித் தலைவர் கிளார்க்

AMNESTY INTERNATIONAL

16

விசாரணைக்கு சர்வதேச கட்டமைப்பு



30

அரசு தயக்கம் காட்டுவது ஏன்?

உள்ளே அப்ரிடியின் வர்ணப்படம் இணைப்பு



உங்கள் உதயனுடன் தொடர்ச்சியாய் வீரர்களின் வர்ணப் படங்கள் எதிர்பாருங்கள்

### தமிழ் இளம் யுவதியை வன்புணர்வு செய்து கொன்ற

# 3 சிப்பாய்களுக்கு மரண தண்டனை

### ரஜனி கொலை வழக்கில் 15 ஆண்டுகளின் பின் தீர்ப்பு

கொழும்பு, மார்ச் 31

1996ஆம் ஆண்டு உரும்பிராயில் தமிழ் இளம் பெண்ணைக் கடத்தி, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்த இராணுவத்தினர் மூவருக்கு உயர் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யும் உரிமை குற்றவாளிகளுக்கு ரத்துச் செய்யப்பட்டுள்ளதால் ஜனாதிபதி கையெழுத்திட்டதும் இவர்களுக்கான மரண தண்டனை நிறைவேற்றப்படும். (29ஆம் பக்கம் பார்க்)



சர்வமத சம்மேளனப் பிரதிநிதிகளுக்குத் தலைமை வகித்து யாழ்.வந்த கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் திருக்கரத்தை முத்தமிட்டு ஆசி பெறுகிறார் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க.

## விபத்தில் சிக்கி ஶ்ரீரங்கா எம்.பி காயம்

வவுனியா,மார்ச்31

நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. ஶ்ரீரங்கா பயணம் செய்த வாகனம் நேற்று மாலை வவுனியா செட்டிகுளம் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மெய்ப்பாதுகாவலர் (32 ஆம் பக்கம் பார்க்க)

### கிரிக்கெட் காரணமாகப் பிற்போடப்பட்ட

## 22 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் 6 மாதங்களுக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 31

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் காரணமாக பிற்போடப்பட்ட 22 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் மேலும் ஆறு மாதங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன எனத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ் ஆட்சிக் காலம் நீடிக்கப்பட்ட 22 உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிக்காலம் மேலும் ஆறு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

16 மாநகர சபைகள், ஒரு நகர சபை மற்றும் ஐந்து பிரதேச சபைகளுக்கான ஆட்சிக் காலமே மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

22 உள்ளூராட்சி சபைகளுக்கு மக்கள் (29 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தலையீடு அதிகம் அதனால் மக்கள் பயப்பீதியில்

### தெற்கிலிருந்து வந்த சர்வமதக் குழுவிடம் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் தலையீடு அதிகமாக உள்ளதால் மக்கள் மத்தியில் பய உணர்வு இன்னும் அகலவில்லை என்று, நேற்று யாழ். வந்த சர்வமதக் குழுவினரிடம் தெரிவித்தார் அருட்திரு போல் நட்சத்திரம்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் உள்ளிட்ட சர்வமதக் குழுவினர் வடக்கு நிலைமைகளை நேரில் கண்டறியும் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். நேற்று முன்தினம் வன்னிக்குச் சென்ற அவர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

அவர்களுக்கும் யாழ். மாவட்டத்தில் உள்ள சர்வமதக் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு நகரின் மத்தியில் உள்ள ரிம்மர் மண்டபத்தில் நடைபெற்றது. யுத்தத்தின் பின்னர் யாழ். மாவட்டத்தில் காணப்படும் நிலைமைகள் குறித்து இந்தச் சந்திப்பில் கொழும்பில் இருந்து வந்தவர்களுக்கு விளக்கப்பட்டது.

அங்கு கருத்துத் தெரிவித்த அமலமரித் தியாகிகள் சபையின் பகுதி முதல்வர் (29 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களின் காணி அபகரிப்புப் பெரும் விளைவை ஏற்படுத்தும்

### வடக்கு-கிழக்கு சிங்கள அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 31

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களின் காணிகள் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் ஊடாக அபகரிக்கப்படுவதால் இப்பிரச் சினை எதிர்காலத்தில் பயங்கரவாதத்தை விடப் பெரும் பிரச்சினையாக உருவெடுக்கும்.

- இப்படி வடக்கு, கிழக்கு சிங்கள அமைப்பின் தலைவர் சேனாதிபதி ஆனந்த தேரர் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பு பௌத்தாலோக மாவத்தையிலுள்ள விஜயவர்த்தன மன்றத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கையில் பயங்கரவாத யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் அதனை விட தற்போது பெரும் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இலங்கையில் பயங்கரவாத யுத்தம் இடம்பெற்ற 30 வருட காலப் பகுதியில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். யுத்தம் நிறைவடைந்த பின்னர் எமது கிராமங்கள் செழிப்படையும் (29 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர சபைக் கூட்டம் ஒத்திவைப்பு ஊழல் குற்றச்சாட்டுக்களால் பீதி?

யாழ்ப்பாணம், மார்ச் 31

இன்று நடைபெற இருந்த யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தொடர் பிற்போடப்பட்டுள்ளதாக திடீரென அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா கொழும்பு சென்றுவிட்டதால் கூட்டம் பிற்போடப்பட்டதாக உத்தியோகபூர்வமாக உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

ஆனால், யாழ். நகரில் மாநகர சபை கட்டுவதற்கு முயலும் 5 மாடிக் கட்டட ஒப்பந்தம் வழங்கப்பட்டதில் முறைகேடுகள் இடம்பெற்றதாகக் கூறப்படும் விடயத்தை எதிர்க்கட்சிகள் இந்தக் கூட்டத்தில் கிளப்பிப் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தும் என்ற அச்சம் காரணமாகவே (29 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவைப் பிளவுபடுத்த சதிகாரருக்கு ஒருபோதும் இடம் கொடுக்கமாட்டேன்

### உறுப்பினர் சத்தியப்பிரமாண நிகழ்வில் ரணில் கூறுரை

கொழும்பு, மார்ச் 31

ஐக்கிய தேசிய கட்சியைப் பிளவுப்படுத்த எந்தச் சதிகாரருக்கும் நான் இடங்கொடுக்கமாட்டேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் மிக மோசமாக தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு அரசு வெற்றி பெற்றது; அரச சொத்துகள் அனைத் தும் அதிகம் பாவிக்கப்பட்டன; வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டன.


அரசின் இத்தகைய பிரச்சினைகளையும் தாங்கிக்கொண்டு ஜனநாயகரீதியில் நாம் தேர்தலில் ஈடுபட்டோம். (29 ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வாகா எல்லைக்கு பாகிஸ்தானை திருப்பியது இந்தியா!



வெற்றிபெற்ற தருணத்தில்....



பரபரப்பான எதிர்பார்ப்பு. பலமில்லாத பாகிஸ்தான் ஆட்டத்தில் எதிர்பார்ப்பில்லாது அடங்கியது. இரண்டாவது அரையிறுதியில் மோதிக் கொண்டன பரம வைரிகளான, இந்தியாவும்-பாகிஸ்தானும். இதைப் பார்ப்பதற்கு வந்தனர் பெரும் அரசியல் தலைகள். அரங்கம் நிறைந்திருந்தது ரசிக வெள்ளத்தில். போராட்டம் ஆரம்பிக்கும் முன் சுழற்றிப் பார்த்தனர் நாணயத்தை. ஆரம்பமே இந்தியாவுக்கு வெற்றி. துடுப்பாட்ட தாக்குதல் நடத்த இந்தியா தீர்மானம். அதிரடி நாயகன் சேவாக்குடன் மாஸ்ட பட்ஸ்மன் சச்சினும் இந்திய ஆட்டத்தை ஆரம்பிக்க களத்துக்குள் நுழைவு. சேவாக் நேற்றும் பவுண்டரியுடன் கணக்கு ஆரம்பம். உமர் குல்லின் ஓவரில் சேவாக்கின் துடுப்பு சுழன்று தாக்கியது பந்தை. அடிக்கப்பட்டது 5 பவுண்டரிகள் மூன்றாவது ஓவரில். தொடங்கியது இந்தியாவின் ஓட்ட வேட்டை. எல்லையை நோக்கி சென்று கொண்டேயிருந்தன பந்துகள். தவழ்ந்து தவழ்ந்து பந்துகளை தவற விட்டது பாக். வீரர்கள்.

மாற்றம் செய்யப்பட்டது பந்து வீச்சு. வகாப்றியாஸ் பந்து வீச அழைப்பு. சேவாக் எல்.பி.டபிள்யூவில் வெளியேற்றம். 2 ஓட்டங்களால் எட்டத்தவறியது ஆரம்ப விக்கெட் இணைப்பு அரைச்சதத்தை. கம்பீர் களத்துக்கு வந்து இணைந்தார் சச்சினுடன். சச்சின் ஆட்டம் சிறப்பாய் தொடர்ந்தது. கம்பீர் நிதான ஆட்டம். இறங்கியது ஓட்ட வேகம். பாகிஸ்தானின் களத்தடுப்பு வியூகம் வாய்ப்பில்லை. ஒற்றை ஓட்டங்களுக்கு வாய்ப்பளித்தது பாக். முன்னேறி வந்து தாக்க திட்டமிட்டார் கம்பீர். தவறியது அவர் கணிப்பு. சஜிட் அஜ்மல் பந்தில் ஸ்ரொம் செய்து வெளியேற்றப்பட்டார் கம்பீர்.

வந்தார் ஹோக்லி. இணைந்தார் சச்சினுடன். நீடித்து ஆடுவார் என எதிர்பார்த்தனர் ரசிகர்கள். இருந்தும் சச்சினை தனிமையில் விட்டு வெளியேறினார் ஹோக்லி. வகாப்பின் சிறப்பான பந்து வீச்சில் உமர் அக்மலிடம் பிடியைக் கொடுத்தார். 141 ஓட்டங்களில் மூன்று விக்கெட்டுக்கள் இழப்பு.

வந்தார் யுவராஜ். சொந்த மண் அவருக்கு. தொடர்ச்சியாய் கலக்கி வருகிறார். இவரது தாக்குதலில் பாகிஸ்தானே கலங்கப் போகின்றது. எதிர்பார்ப்புக்கள் இப்படியிருக்க வந்தவர் முதல் பந்தில் வாலை சுருட்டிக் கொண்டு வெளியேற்றம். வகாப் றியாஸ் ஹட்றிக் சாதனைக்கு நெருக்கமானார். அடுத்தடுத்து இரு சரிவுகள். ஆட்டிப்போட்டது இந்தியாவை. வந்தவர் டோனி. சளைக்காமல் நின்றாட்டம். சச்சின் மறுமுனையில் அரைச்சதம் கடந்து ஆட்டம். சதத்தில் சதம் நெருங்கினார் சச்சின். விடவில்லை பாக். 15 ஓட்டங்கள் சதத்துக்கு தேவை. 85 ஓட்டங்களில் தனித்து நின்று இந்தியாவை மீட்கப் போராடிய சச்சின் அஜ்மல் பந்தில் வெளியேற்றம். வகாப்றியாஸ் பந்தில் தொடர்ந்து டோனி வெளியேற்றம். தடுமாறியது இந்தியா. 205/6.

ரெய்னா-ஹர்பஜன் களத்தில் நின்றனர். எடுத்தனர் பட்டிங்பவர்பிளே. பெறப்பட்டது ஓட்டங்கள் வேகமாய். பாகிஸ்தானும் அள்ளி வழங்கியது ஓட்டங்களை. தடுமாற்றத்திலிருந்து தப்பிப் பிழைத்தது இந்தியா.

ரெய்னாவின் இறுதி ஆட்டத்தால் இந்தியா எட்டியது 260 ஓட்டங்கள். கலக்கலாய் பந்து வீசிய வகாப் கைப்பற்றினார் 5 விக்கெட்டுக்கள்.

பதிலுக்கு பாகிஸ்தான் தனது ஆட்டத்தை தொடக்கம். திரும்பி தாக்குவதற்கு திரட்டிய பலத்துடன் இறங்கியது களத்துக்குள். கம்ரான் அக்மல் களத்தடுப்பில் இந்த முறையும் சொதப்பல். இருந்தும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராய் ஹபீஸ் உடன் வந்தார் களத்துக்கு. சற்றும் சளைத்தவர்கள் அல்லர் இந்தியாவுக்கு நாமும். அதிரடி ஆட்டம் ஆரம்பம். பவுண்டரிகள் பறந்தன எல்லைக்கு. இவர்களின் ஆரம்பத்தால் திணறியது இந்தியா.

சொந்த மண்ணில் தோற்பதற்கு இந்தியா தயாரில்லை. மாற்றியமைத்தது வியூகத்தை. சகீர் மீண்டும் பந்து வீச அழைக்கப்பட்டார். வந்தவர் டோனியின் எண்ணத்தை ஈடேற்றினார். அதிரடியாய் ஆடிய கம்ரான் அக்மல் ஆட்டத்துக்கு முடிவுகட்டி விட்டார். முதல் சரிவை பெரிதாய்க் கணக்கெடுக்கவில்லை பாகிஸ்தான். அஷாட் வந்தார் களத்துக்கு. சரிவால் மெதுவாக ஆட்டம் தொடக்கம். பின்னர் களத்தடுப்பில் இந்தியா தவறவிட்டது ஓட்டங்களை. மெதுவாய் சுதாகரித்து அதிரடியாய் ஆடத் தொடங்கியது இந்த ஜோடி. விசித்திர ஆட்டத்துக்கு ஹபீஸ் முனைந்தார் முனாப் பட்டேல் பந்தில். வீணாய் வீழ்த்தப்பட்டது பாகிஸ்தான் விக்கெட். யுனிஸ்கான் நிதானமாய் ஆடினார். மறுமுனையில் அஷாட் சிறப்பான ஆட்டம். யுவராஜ் அவரது ஆட்டத்துக்கு விடை கொடுத்தார். தொடர்ந்து சாதித்தார் யுவராஜ். யுனிஸ்கானையும் வெளியேற்றினார் யுவராஜ். படுத்தது பாக். [illegible] ஆடி[illegible] ஆட்டம். வந்த உமர் அக்மல், யுவராஜின் பந்து வீச்சுக்கு ஒரு காட்டு காட்டினார். சிக்ஸர்கள், பவுண்டரிகள் பறந்தது எல்லைக்கு. பாகிஸ்தான் கைக்கு வெற்றி மெல்லச் சென்றது. மாற்றப்பட்டது பந்து வீச்சு. வீழ்த்தப்பட்டது உமர் அக்மல் விக்கெட். வீழ்த்தியவர் ஹர்பஜன். பின் வரிசையினர் களத்துக்கு நுழைவதும் வெளியேறுவதுமாய் இருப்பு. அதிரடிக்கு பெயர் போன அப்ரிடியும் அடங்கிவிட்டார். இறுதி வரை களத்தில் நின்ற மிஷ்பா பெற்றார் அரைச்சதம். இருப்பினும் 29 ஓட்டங்களால் தவறியது பாகிஸ்தானின் வெற்றி. •

இந்தியாவை மீட்டெடுத்த சச்சின் ஆட்டநாயகன்.

யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் இலங்கையும் இந்தியாவும் இறுதியில் மோதுமென்று. தந்தவனுக்கே திருப்பிக் கொடுப்பார்களா? ஏப்ரல் 2 இல் தெரியும் முடிவு.

-டிலீப்-



டோனியின் விக்கெட்டை வீழ்த்திய மகிழ்ச்சியில் வகாப் றியாஸ்

## 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண இரண்டாவது அரையிறுதி ஆட்டம்

ஆட்டம்: இந்தியா Vs பாகிஸ்தான்
நாணயச் சுழற்சி: இந்தியா
முடிவு: 29 ஓட்டங்களால் இந்தியா வெற்றி
ஆட்டநாயகன்: சச்சின்

**இந்தியா**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சேவாக் | lbw b வகாப் றியாஸ் | 38 | 25 | 9 | 0 |
| டெண்டுல்கார் | c அப்ரிடி b சயிட் அஜ்மல் | 85 | 115 | 11 | 0 |
| கம்பீர் | st கம்ரான் அக்கமல் b மொஹமட் ஹபீஸ் | 27 | 32 | 2 | 0 |
| ஹோக்லி | c உமர் அக்மல் b வகாப்றியாஸ் | 09 | 21 | 0 | 0 |
| யுவராஜ்சிங் | b வகாப்றியாஸ் | 00 | 01 | 0 | 0 |
| டோனி | lbw b வகாப்றியாஸ் | 25 | 42 | 2 | 0 |
| ரெய்னா | ஆட்டமிழப்பில்லை | 36 | 39 | 3 | 0 |
| ஹர்பஜன்சிங் | st கம்ரான் அக்கமல் b சயிட் அஜ்மல் | 12 | 15 | 2 | 0 |
| சகீர்கான் | c கம்ரான் அக்மல் b வகாப்றியாஸ் | 09 | 10 | 1 | 0 |
| நெஹ்ரா | run out(கம்ரான் அக்மல் /வகாப்றியாஸ்) | 01 | 02 | 0 | 0 |
| முனாப்பட்டேல் | ஆட்டமிழப்பில்லை | 00 | 00 | 0 | 0 |
| உதிரிகள் | (lb 8,w 8, nb 2) | 18 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| உமர்குல் | 08 | 69 | 0 | 0 |
| அப்துல் ரஷாக் | 02 | 14 | 0 | 0 |
| வகாப் றியாஸ் | 10 | 46 | 5 | 0 |
| சயிட் அஜ்மல் | 10 | 44 | 2 | 0 |
| அப்ரிடி | 10 | 45 | 0 | 0 |
| மொஹமட் ஹபீஸ் | 10 | 34 | 1 | 0 |

TOTAL - 260/9 (50)

1-48 (சேவாக்), 2-116 (கம்பீர்), 3-141 (ஹோக்லி), 4-141 (யுவராஜ்சிங்), 5-187 (டெண்டுல்கார்), 6-205 (டோனி), 7-236 (ஹர்பஜன்), 8-256 (சகீர்கான்), 9 - 258 (நெஹ்ரா)

**பாகிஸ்தான்**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கம்ரான்அக்மல் | c யுவராஜ் b சகீர்கான் | 19 | 21 | 3 | 0 |
| மொஹமட்ஹபீஸ் | c டோனி b முனாப்பட்டேல் | 43 | 59 | 7 | 0 |
| அஷாட் | b யுவராஜ் | 30 | 39 | 2 | 0 |
| யுனிஸ்கான் | c ரெய்னா b யுவராஜ் | 13 | 32 | 0 | 0 |
| மிஷ்பாஉல்ஹக் | c ஹோக்லி b சகீர்கான் | 56 | 76 | 5 | 1 |
| உமர்அக்மல் | b ஹர்பஜன் | 29 | 24 | 1 | 2 |
| அப்துல்ரஷாக் | b முனாப்பட்டேல் | 03 | 09 | 0 | 0 |
| அப்ரிடி | c சேவாக் b ஹர்பஜன்சிங் | 19 | 17 | 1 | 0 |
| வகாப்றியாஸ் | c டெண்டுல்கார் b நெஹ்ரா | 08 | 14 | 1 | 0 |
| உமர்குல் | lbw b நெஹ்ரா | 02 | 03 | 0 | 0 |
| சயீட்அஜ்மல் | ஆட்டமிழப்பில்லை | 01 | 05 | 0 | 0 |
| உதிரிகள் | (w 8) | 08 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சகீர்கான் | 9.5 | 58 | 2 | 0 |
| நெஹ்ரா | 10 | 33 | 2 | 0 |
| முனாப்பட்டேல் | 10 | 40 | 2 | 1 |
| ஹர்பஜன்சிங் | 10 | 43 | 2 | 0 |
| யுவராஜ்சிங் | 10 | 57 | 2 | 1 |

TOTAL - 231/10(49.5)

1-44 (கம்ரான்), 2-70 (மொஹமட் ஹபீஸ்), 3-103 (அஷாட்), 4-106 (யுனிஸ்கான்), 5-142 (உமர் அக்மல்), 6-150 (அப்துல்ரஷாக்), 7-184(சயிட் அப்ரிடி), 8- 199 (வகாப்றியாஸ்), 9- 208 (உமர்குல்), 10-231(மிஷ்பா)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்ரிடியின் தம்பிக்கு அனுமதி மறுப்பு

இந்திய - பாகிஸ்தான் அரையிறுதிப் ஆட்டத்தைப் பார்க்கச் சென்ற பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரிடியின் சகோதரர் தடுத்து நிறுத்தப்பட்டு பின் அனுமதிக்கப்பட்டார்.

இந்திய - பாகிஸ்தான் அரையிறுதி ஆட்டத்தை நேரில் பார்க்க உலகம் முழுவதிலும் இருந்து ரசிகர்கள் மொஹாலிக்குப் படையெடுத்தனர்.

பாகிஸ்தானிலிருந்தும் நூற்றுக்கணக்கான ரசிகர்கள் இந்தியாவுக்குச் சென்றனர். பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரிடியின் தம்பி முஸ்தாக் நேற்று முன்தினம் காலை இரண்டு நண்பர்களுடன் மொஹாலி புறப்பட்டுச் சென்றார்.

முஸ்தாக்கும் கிரிக்கெட் வீரராவார். வாகா எல்லையில் அவர்களிடம் இந்திய அதிகாரிகள் சோதனை நடத்தினார்கள். அப்போது முஸ்தாக் அப்ரிடியிடம் மொஹாலி கிரிக்கெட் போட்டிக்கான ரிக்கெட் மற்றும் ஆவணங்கள் இல்லாதது தெரியவந்தது. இதையடுத்து முஸ்தாக்கை அதிகாரிகள் தடுத்து நிறுத்தினார்கள். அவர்கள் இந்தியாவுக்குள் அனுமதிக்கப்படவில்லை.

இதுபற்றித் தகவல் அறிந்ததும் பாகிஸ்தான் கிரிக்கெட்சபை உயர் அதிகாரி ஒருவர் 3 ரிக்கெட்டுகளுடன் மொஹாலியிலிருந்து வாகா எல்லைக்குச் சென்றார். முஸ்தாக்கிடம் ரிக்கெட்டுகளை ஒப்படைத்தார். அதன் பிறகு நேற்று முன்தினம் மாலை முஸ்தாக்கும் அவரது இரு நண்பர்களும் இந்தியாவுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டனர்.


# 10ஆயிரம் கோடி ரூபாவுக்குச் சூதாட்டம்

இந்திய - பாகிஸ்தான் அரையிறுதி ஆட்டத்தை வைத்து 10 ஆயிரம் கோடி ரூபாவரை (இந்திய ரூபா) வரை சூதாட்டம் நடந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகக் கிண்ணம் தொடங்கிய போது தென்னாபிரிக்கா அணி கிண்ணத்தை வெல்ல வாய்ப்பிருப்பதாக சூதாட்டம் நடந்தது. காலிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்கா தோல்வியடைந்ததும், சூதாட்டக்காரர்கள் அதிர்ச்சிக்கும் தவிப்புக்குமுள்ளனார்கள். இந்த நிலையில் தற்போது ஆசிய அணிகளை மையமாக வைத்து கிரிக்கெட் சூதாட்டம்களை கட்டியுள்ளது.

உலகக் கிண்ண கிரிக்கெட்டில் இந்தியா-பாகிஸ்தான் இடையே மொஹாலியில் நேற்று நடந்த அரை இறுதி ஆட்டத்தை மையமாக வைத்து உலகம் முழுவதும் சூதாட்டம் கொடி கட்டிப் பறந்தது. இந்தியாவுக்கே வெற்றி வாய்ப்பு அதிகமென சூதாட்டக்காரர்கள் கணித்திருந்தார்கள்.

இந்திய அணி வெற்றி பெறுவதாக 1 ரூபா கட்டினால் 62 பைசாதான் கிடைக்கும். ஆனால் பாகிஸ்தான் வெற்றி பெறுவதாக 1 ரூபா கட்டினால் ரூபா 1.50 கிடைக்கும். இந்திய அணியின் பந்து வீச்சு மோசமாக இருந்ததால் பாகிஸ்தான் முதலில் ஆடினால் 310 முதல் 320 ஓட்டங்கள் வரை குவிக்கும் என்றும் நாணயச் சுழற்சியில் வென்று இந்தியா முதலில் ஆடினால் 265 முதல் 275 ஓட்டங்கள் எடுக்குமென்றும் சூதாட்டக்காரர்கள் யூகித்திருந்தனர்.



இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ண கிரிக்கெட் அரையிறுத்திப் போட்டியை பார்வையிட மொஹாலி மைதானத்துக்கு வருகை தந்த இந்திய, பாகிஸ்தான் பிரதமர்கள், வீரர்களுடன்....

இதேபோல் சச்சின் டெண்டுல்கர் சர்வதேச அரங்கில் தனது 100 ஆவது சதத்தை எட்டுவாரா? மாட்டாரா? என்பதிலும் பந்தயம் கட்டப்பட்டது. டெண்டுல்கர் 50 ஓட்டங்கள் அடிப்பதாக 1 ரூபா கட்டினால் ரூபா 1.05 கிடைக்கும். ஆனால், அவர் சதம் அடிப்பார் என்று 1 ரூபா கட்டினால் ரூபா 4.05 கிடைக்கும். சச்சினின் செஞ்சரி கணிப்பில் மட் டும் 100 கோடி ரூபா வரை பந்தயம் நடந்துள்ளது.

இதேபோல் மற்ற இந்திய வீரர்களின் ஆட்டம் எப்படி இருக்குமென்ற வகையிலும் பந்தயம் நடந்துள்ளது. ஷேவாக் சதம் அடிப்பதாக 1 ரூபா கட்டினால் ரூபா 5.50 ஆம் சதமும் யுவராஜ்சிங் சதம் அடித்தால் 1 ரூபா கட்டியவர்களுக்கு 6 ரூபாவும் கிடைக்கும். பாகிஸ்தான் வீரர்களில் முகமது ஹபீஸ் சதம் அடிப்பாரென 1 ரூபா கட்டினால் ரூபா 5.60 வாங்கலாமெனவும் கூறப்பட்டிருந்தது.

''ஒன்லைன்' செல்போன் உள்ளிட்ட பல்வேறு வழிகளிலும் இந்த சூதாட்டங்கள் நடந்துள்ளன.

இந்தியா - பாகிஸ்தான் போட்டியை மையமாக வைத்து மட்டும் 6 ஆயிரம் கோடி ரூபா முதல் 10 ஆயிரம் கோடி ரூபா வரை சூதாட்டத்தில் புரண்டதாக சிரேஷ்ட சூதாட்டக்காரர் ஒருவர் தெரிவித்தார்.

# ரிக்கெட்டின் விலை 1.2 லட்சம்



இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் உலகக் கிண்ண, அரையிறுதி ஆட்டத்தின் ஒரு 'ரிக்கெட்டின்' விலை கறுப்புச் சந்தையில் ரூ. 1.20 லட்சம் வரை உயர்வடைந்தது. இதைத் தவிர, 250 ரூபா 'ரிக்கெட்டின்' விலை, 100 மடங்கு விலை உயர்த்தி 25 ஆயிரத்துக்கு விற்கப்பட்டது.

உலகக் கிண்ண கிரிக்கெட்டின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில், இந்தியா, பாகிஸ்தான் அணிகள், மொஹாலியில் நேற்று மோதின. இது கிரிக்கெட் உலகின், மிக முக்கியமான ஆட்டமாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆட்டம் இடம்பெற்ற மொஹாலி மைதானத்தில், மொத்தம் 28 ஆயிரம் 'ரிக்கெட்டுகள்' விற்பனைக்கு இருந்தன. இதில் ஐ.சி.சி மற்றும் பி.சி.சி.ஐ நிர்வாகங்களுக்கு 16 ஆயிரம் 'ரிக்கெட்டுக்கள்' கொடுக்கப்பட்டன.

மீதமுள்ள 12 ஆயிரம் 'ரிக்கெட்டுகள்' தான் பஞ்சாப் கிரிக்கெட் சங்கம் விற்பனையை மேற்கொண்டது. ஆனால், இவைகளில் பெரும்பாலானவை கறுப்புச் சந்தையில்தான் விற்கப்பட்டன. சில நாள்களுக்கு முன், 250 ரூபா 'ரிக்கெட்' ரூ. 2 ஆயிரத்துக்கும், ரூ. 500 டிக்கெட் ரூ. 4 ஆயிரத்துக்கும், ரூ. 1000 மதிப்புள்ள டிக்கெட், 6,500 முதல் 7000 ரூபா வரை உயர்த்தி விற்கப்பட்டது. ரூ. 10 ஆயிரம் மதிப்புள்ள டிக்கெட் ஒவ்வொன்றும் ரூ. 50 ஆயிரத்துக்கு விற்கப்பட்டது. அதிகபட்ச மதிப்புள்ள ரூ. 15 ஆயிரம் டிக்கெட்டின் விலை தான் 'ரொக்கெட்' வேகத்தில் உயர்ந்தது. இது ஒவ்வொன்றும் தலா ஒரு லட்ச ரூபாய் வரை விற்கப்பட்டது.

இதனிடையே, கறுப்புச் சந்தையில் 'ரிக்கெட்' விற்க முயன்ற, 18 முதல் 20 வயதுள்ள 3 மாணவர்கள் உட்பட நான்கு பேரை பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து இரண்டு 250 ரூபா, ஒரு 500 ரூபா 'ரிக்கெட்டுகள்' மற்றும் ரூ. 56 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர்.

இது குறித்து பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கூறுகையில், இரண்டு 250 ரூபாய், ஒரு 500 ரூபா 'ரிக்கெட்டுகளை' பிடிபட்ட நபர்கள் 56 ஆயிரத்து விற்றுள்ளனர். தவிர, 250 ரூபாய் 'ரிக்கெட்டை' ரூ. 25 ஆயிரத்துக்கு விற்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து ரசிகர் போல மாறுவேடத்தில் சென்று, இரண்டு 250 ரூபா 'ரிக்கெட்டுகளை' 50 ஆயிர ரூபாவுக்கு விற்ற, கடை உரிமையாளரையும் பிடித்துள்ளோம். இவர், கடந்த 21 ஆம் திகதியே 'ரிக்கெட்டை' வாங்கியுள்ளார் - என்றார்.



# சூதாட்டமா கவனமாயிருங்கள்! பாக். வீரர்களுக்கு கடும் எச்சரிக்கை

பாகிஸ்தான் வீரர்கள் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபடுகிறார்களா என்பதை தீவிரமாக கண்காணித்து வருகிறோம். யாராவது பிடிபட்டால் அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாக். உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் நேற்று முன்தினம் எச்சரிக்கை விடுத்தார். இந்திய அணியுடன் அரை இறுதியில் மோதவுள்ள நிலையில், அமைச்சரின் இந்த எச்சரிக்கையால் பாகிஸ்தான் அணி வீரர்கள் மிகவும் எரிச்சல் அடைந்துள்ளனர். முன்னாள் அணித் தலைவர் இம்ரான் கான் உட்பட நட்சத்திர வீரர்கள் பலரும் அமைச்சரின் இந்த கருத்துக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## உலகக் கிண்ணத் தரவரிசை

### அதிகூடிய ஓட்டங்கள்

| | M | R | 50'S | 100'S | H.S |
|---|---|---|---|---|---|
| டில்ஷான்(இலங்கை) | 8 | 467 | 2 | 2 | 144 |
| சச்சின்(இந்தியா) | 8 | 464 | 2 | 2 | 120 |
| ரொரட்(இங்கிலாந்து) | 7 | 422 | 5 | 0 | 92 |
| சங்கக்கார(இலங்கை) | 8 | 417 | 3 | 1 | 111 |
| தரங்க(இலங்கை) | 8 | 393 | 1 | 2 | 133 |
| சிசவாக்(இந்தியா) | 7 | 380 | 1 | 1 | 175 |
| வில்லியர்ஸ்(தெ.ஆபி) | 5 | 353 | 1 | 2 | 134 |
| யுவராஜ்(இந்தியா) | 8 | 341 | 4 | 1 | 113 |
| ஸ்ரோரஸ்(இங்கிலாந்து) | 7 | 334 | 1 | 1 | 158 |
| ஹடின் (ஆஸ்திரேலியா) | 7 | 332 | 4 | 0 | 88 |

### அதிகூடிய விக்கெட்டுகள்

| | M | W | Best |
|---|---|---|---|
| அப்ரிடி(பாகிஸ்தான்) | 8 | 21 | 5/16 |
| சகீர்கான்(இந்தியா) | 8 | 19 | 3/20 |
| சவுத்தீ(நியூஸிலாந்து) | 8 | 18 | 3/13 |
| பீற்றர்ஸன்(தெ.ஆபி) | 7 | 15 | 4/12 |
| முரளிதரன்(இலங்கை) | 8 | 15 | 4/25 |
| இம்ரான்தகீர்(தெ.ஆபி) | 5 | 14 | 4/38 |
| உமர்குல்(பாகிஸ்தான்) | 8 | 14 | 3/30 |
| றோச்(மே.தீவுகள்) | 6 | 13 | 6/27 |
| லீ(ஆஸ்திரேலியா) | 7 | 13 | 4/28 |
| பெயிட்வன்(கனடா) | 6 | 13 | 3/35 |

W - விக்கெட்டுக்கள்

# அணி வீரர்களுக்கு சங்கக்கார பாராட்டு

உலகக் கிண்ண கிரிக்கெட் ஆட்டத்தில் கொழும்பில் நடந்த முதல் அரை இறுதியில் இலங்கை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் நியூஸிலாந்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் விளையாடிய நியூஸிலாந்து அணி 48.5 ஓவரில் 217 ஓட்டங்களுடன் சுருண்டது. ஸ்ரைரிஸ் அதிகபட்சமாக 57 ஓட்டங்களும், குப்தில் 39 ஓட்டங்களும் எடுத்தனர்.

மலிங்க, மெண்டிஸ் தலா 3 விக்கெட்டும், முரளிதரன் 2 விக்கெட்டும் எடுத்தனர். இலங்கை அணி 47.5 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 220 ஓட்டங்கள் எடுத்தது. தில்சான் 73 ஓட்டங்களும், சங்கக்கார 54 ஓட்டங்களும் எடுத்தனர். சவுத்தி 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இந்த வெற்றி குறித்து இலங்கை அணித் தலைவர் சங்கக்கார கூறியதாவது:

வெற்றிக்கு 60 ஓட்டங்கள் தேவை என்று இருந்த போது 2 விக்கெட்தான் விழுந்தது. அதன் பிறகு 3 விக்கெட்டுகள் எளிதில் சரிந்ததுடன் பின்னால் வந்த மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர்களின் பொறுமையான ஆட்டத்தைப் பாராட்டுகிறேன்.

களத்தடுப்பின்போது மத்தியூஸுக்குத் தசை பிடிப்பு ஏற்பட்டது. அதையும் பொருட்படுத்தாமல் அவர் சிறப்பாக விளையாடினார்-இவ்வாறு கூறினார் சங்கக்கார.


இந்த தோல்வி குறித்து நியூஸிலாந்தின் அணித் தலைவர் வெற்றோரி கூறியதாவது:

கடைசி 10 ஓவரில் எங்களது விக்கெட்டுகள் மளமளவென்று சரிந்தது. மோசமான துடுப்பாட்டத்தால் தோல்வி அடைந்தோம். இது மிகுந்த ஏமாற்றம் அளித்தது. 25 முதல் 30 ஓட்டங்கள் வரை குறைவாக எடுத்து விட்டோம். ஒரு கட்டத்தில் நாங்கள் நெருக்கடி கொடுத்தோம்.

மத்தியூஸ் சிறப்பாக ஆடி அவர்கள் பக்கம் ஆட்டத்தை கொண்டு சென்று விட்டார். இவ்வாறு அவர் கூறினார். இலங்கை அணி 3 வது முறையாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. 1996 ம் ஆண்டு முதல் முறையாக நுழைந்தது. ஆஸ்திரேலியாவை வீழ்த்தி கோப்பையை வென்றது. அடுத்த 2007 ம் ஆண்டு இறுதிப் போட்டிக்கு நுழைந்து ஆஸ்திரேலியாவிடம் தோற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேகத்துக்கு விடைகொடுத்தது சர்வதேசம்


சர்வதேச ஒரு நாள் ஆட்டத்திலிருந்து ஆஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர் ஷோன் ரைட் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷோன் ரைட் (28 வயது). கடந்த 2005 இல் டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய இவர், 2007 இல் முதன்முதலில் சர்வதேச ஒருநாள் மற்றும் 'ரி-20' அரங்கில் காலடி வைத்தார். டெஸ்ட் போட்டியில் இருந்து சமீபத்தில் ஓய்வை அறிவித்த இவர், தற்போது ஒருநாள் போட்டிகளில் இருந்தும் ஓய்வை அறிவித்துள்ளார்.

இதுவரை இவர் 3 டெஸ்ட் ஆட்டங்கள் (5 விக்கெட்டுக்கள்), 35 ஒரு நாள் (62 விக்கெட்டுக்கள்), 19 சர்வதேச 'ரி-20' போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இவர் 'ரி-20' போட்டிகளில் தொடர்ந்து விளையாட இருப்பதாக தெரிவித்துள்ளார். தற்போது நடக்கும் உலகக் கிண்ணத் தொடரில், ஆஸ்திரேலிய அணி காலிறுதியோடு வெளியேறியது. இந்தத் தொடரில் இவர் பெரிய அளவில் சாதிக்கவில்லை.

இதுகுறித்து ரைட் கூறியதாவது:

ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்தது எளிதான முடிவல்ல. ஆனால் எனக்கான நேரம் வந்து விட்டது. தொடர்ந்து 'ரி-20' போட்டிகளில் ஆஸ்திரேலிய அணியின் வெற்றிக்குப் பாடுபடுவேன். கடந்த 2007 இல் உலகக் கிண்ணத்தை வென்ற ஆஸ்திரேலிய அணியில் இடம் பெற்றிருந்ததை எனது வாழ்நாளில் என்றும் மறக்க முடியாது. போட்டியில் சாதிக்க எனக்கு ஒத்துழைப்புத் தந்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை, சக மற்றும் எதிரணி வீரர்கள், ரசிகர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார். (15)



# முடிவுக்கு வந்தது பொன்டிங்கின் ஆட்டம்

ஆஸ்திரேலிய அணியின் ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அணித் தலைர் ரிக்கி பொன்டிங் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார்.


உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணியுடன் தோல்வியடைந்த பின்னர் ஆஸ்திரேலியா உலகக் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறப்பட்டது. இதனைத் தொடர்ந்து ரிக்கி பொன்டிங் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவார் என பரவலாகப் பேசப்பட்ட நிலையில் அணித்த தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் புதிதாக நியமிக்கப்படவுள்ள அணித் தலைவருக்குத் தான் பூரண ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாகவும் அணிக்காகத் தொடர்ந்தும் சிறந்த முறையில் விளையாட உள்ளதாகவும் ரிக்கி பொன்டிங் அறிவித்துள்ளார்.

ஸ்ரீவ்வோவுக்கு அடுத்தபடியாக ஆஸ்திரேலிய அணியின் டெஸ்ட் அணித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பொன்டிங் 77 போட்டிகளுக்குத் தலைமை வகித்து 48 போட்டிகளை வெற்றி கொண்டுள்ளார்.

அத்துடன் 228 ஒருநாள் போட்டிகளுக்குத் தலைமை வகித்துள்ள அவர் 164 போட்டிகளில் வெற்றி கண்டுள்ளார். இதில் தொடர்ச்சியாக இரு உலகக் கிண்ணங்களையும் கைப்பற்றிய சாதனை ரிக்கி பொன்டிங்கைச் சாரும் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

# இலங்கை மைதானங்களுக்கு விடைகொடுத்த முரளி....



இலங்கையின் கிரிக்கட் மைதானங்களிலிருந்து இலங்கையின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முரளிதரன் நேற்றுமுன்தினம் விடை பெற்றுக் கொண்டார்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியுடன் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளதாக முன்னதாகவே முரளிதரன் அறிவித்திருந்தார். அதன் காரணமாக நேற்றுமுன்தினம் அவர் விளையாடிய போட்டியே இலங்கை மண்ணில் அவர் விளையாடும் கடைசிப் போட்டியாகும்.

இந்த நியூஸிலாந்துடனான போட்டியில் ஸ்டைரிஸின் விக்கெட்டைக் கைப்பற்றியது அவர் இலங்கை மண்ணில் கடைசியாகக் கைப்பற்றிய விக்கெட்டாக பதிவாகியுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் இரண்டாம் திகதி மும்பையில் நடைபெறும் உல கக் கிண்ணக் கிரிக்கெட்டின் கடைசிப் போட்டிகளுடன் சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்தும் முரளிதரன் முழுமையாக ஓய்வுபெற்று விடுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (15)



# அணித் தலைவர் கிளார்க்

உலகக்கிண்ண போட்டியில் ஆஸ்திரேலிய அணி தோல்வியடைந்ததை அடுத்து அணியின் தலைவர் மற்றும் துணை அணித் தலைவர் புதிதாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

இதன்படி ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் போட்டிகளுக்கு அணித் தலைவராக மைக்கல் கிளார்க்கும் துணை அணித் தலைவராக ஷேன் வொட்ஸனும் நியமிக்கப்பட்டுள்ளனர். (15)

# கிண்ணம் ஜெயிக்கப் போராடும் கில்லாடிகள்

ஒரே தேசம் ஒரே கிண்ணம்
என்ற வாசகத்தோடு
உலகமெல்லாம்
களை கட்டும்
உலகக்கிண்ணக் கிரிக்கெட்டில்
தற்போது
உலக ரசிகர்களின் எதிர்பார்ப்புகள்
அத்தனையும்
ஒன்று குவிந்து இருக்கிறது.

கத்துக்குட்டி அணிகளால்
களையிழந்து போன
ஆட்டங்கள் ஒரு புறம்
பரபரப்போடு
பதிலுக்குப் பதில் என்ற
அடிப்படையில்
இறுதி வரை போராடி
பழிக்குப் பழி தீர்க்கும்
பலமான அணிகள் மறுபுறம்

ஊடகங்கள் எங்கும்
உலகக்கிண்ணம் பற்றியே
இப்போது பேச்சு
உலகமே இப்போது

கிரிக்கெட் மயமாய் ஆச்சு
கையில் கொடி பிடித்து
கன்னத்திலே பச்சை குத்தி
"வெற்றி" எங்களுக்கே என்று
வீரமுழக்கமிடும்
ரசிகர்களின் ஆரவாரம்
விண்ணைத் தாண்டி விட்டது!


தொண்ணூற்றாறில்
ஆஸ்ரேலியாவை
தோல்வி வலைக்குள் வீழ்த்திய
இலங்கையின் அதிரடி
இம் முறை மீண்டுமொரு
இமாலய வெற்றியைத்
தனதாக்குமா- இல்லை
இமயமலை இந்தியா
இம்முறை சாதிக்குமா?

பொறுத்திருந்து பார்ப்போம்
திறமை அதிர்ஷ்டம்
இரண்டும் சேர்ந்து
இம்முறை கிண்ணம்
ஜெயிக்கப் போகும்
கில்லாடிகள் யா[illegible]

செ.ரவிசாந்,
வீரமனை, குப்பிளான்.

## குடும்பமாகக் கொண்டாட்டம்....






[illegible] இடம்பெறவுள்ள இறுதி ஆட்டத்துக்கு புறப்பட்டுச் செல்லும் இலங்கை அணியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுக்கு மட்டும் ஏன் இப்படி?



பெயரைக் கேட்டாலே அதிர்கிற மாதிரி அமர்க்களமான அணி. துடுப்பாட்டம், பந்துவீச்சு மட்டுமல்ல அசத்தலான களத்தடுப்புக்கும் நல்ல தரச் சான்றிதழ் கொடுக்கலாம். இப்படி ஆயிரம் இருந்தும்... திறமைகள் இருந்தும் தென்னாபிரிக்காவுக்கு உலக கிண்ணம் தண்ணி காட்டி வருகிறது.

லீக் சுற்றில் 'சூப்பராக' விளையாடும் இந்த அணி 'நொக் அவுட்' என்றாலே தொடை நடுங்கி சொதப்பி விடுகிறது. ஒன்றல்ல... இரண்டல்ல 5 ஆவது முறையாக அந்த அணி 'நொக் அவுட்' சுற்றில் நாக்கு தள்ளி பரிதாபமாக வெளியேறி உள்ளது.

நடப்புத் தொடரின் 3 ஆவது காலிறுதியில் 'பி' பிரிவில் முதலிடம் பிடித்த தென்னாபிரிக்காவும், 'ஏ' பிரிவில் 4 ஆவது இடம் பிடித்த நியூஸிலாந்தும் மோதின. சமீபத்தில் பங்களாதேஷுடன் நடந்த ஒருநாள் தொடரில் 4 - 0 என்ற கணக்கில் பரிதாபமாக தோற்ற நியூஸிலாந்தை தென்னாபிரிக்கா ஊதித் தள்ளிவிடும் என்றே எல்லோரும் எதிர்பார்த்தனர். அதற்கேற்ப நியூசிலாந்தை 221 ஓட்டங்களுக்குள் தென்னாபிரிக்கா கட்டுப்படுத்தியதும், இந்த முறை விதி விளையாடுவதற்கு வாய்ப்பில்லை என்றே தோன்றியது.

துரத்தலின்போது கலிஸ், டி வில்லியர்ஸ் இருவரும் பொறுமையாக ஓட்டங்கள் சேர்த்து நம்பிக்கையை அதிகரித்தனர். ஜேக்கப் ஓரம் பந்துவீச்சில் விக்கெட்டுகள் சரிய, திடீர் நெருக்கடியால் தென்னாபிரிக்க வீரர்களுக்கு வழக்கம் போல் கை, கால் உதற ஆரம்பித்துவிட்டது. பலமான துடுப்பாட்ட வரிசை சீட்டுக் கட்டு போல சரிய 172 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. நியூசிலாந்து 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அதிர்ச்சி வெற்றி பெற்று அரை இறுதிக்குள் அடி வைத்தது. வரலாற்றை மாற்றி எழுதலாம் என்ற உறுதியுடன் வந்த தென்னாபிரிக்க வீரர்கள் நொறுங்கிய இதயத்துடன் உலகக் கிண்ணத்தில் இருந்து மீண்டும் பரிதாபமாக வெளியேறினர்.

செய்தியாளர்களைச் சந்தித்த அணித் தலைவர் ஸ்மித்துக்கு கொஞ்ச நேரம் பேச்சே வரவில்லை. அவரது வழக்கமான கம்பீரமான நடை, சிரித்த முகம், தன்னம்பிக்கை எல்லாமே 'மிஸ்ஸிங்'. தொங்கிய முகத்தோடு ஸ்மித் தழதழத்த குரலில் பேசியதாவது:

''இந்த தொடரில் பந்து வீச்சு அபாரமாக இருந்தது. ஸ்ரெய்ன், மோர்கல், பீற்றர்சன், போத்தா, இம்ரான் சிறப்பாகப் பந்து வீசி எதிரணிகளை கட்டுக்குள் வைத்திருந்தனர்.





ஆனால், வலுவான துடுப்பாட்ட வரிசை் இப்படிக் காலை வாரிவிட்டது வேதனையாக உள்ளது. காலிஸும், டி வில்லியர்ஸும் ஆடிய விதத்தைப் பார்க்கும்போது எளிதாக வெற்றி பெறுவோம் என்று நினைத்தேன். அவர்கள் ஆட்டமிழந்தவுடன் அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் சரிய தோல்வியை தவிர்க்க முடியவில்லை. அடுத்து வந்தவர்கள் ஓரளவு சிறப்பாக ஆடியிருந்தாலே வெற்றி பெற்றிருக்க முடியும்.

இந்த மாதிரி ஆடுகளத்தில் நிதானமாக விளையாடி, மோசமான பந்துகளை மட்டும் பவுண்டரிக்கு விரட்டி வந்தால் மட்டுமே வெற்றி பெற முடியும். ஆஸி.க்கு எதிராக இந்தியாவின் வெற்றி இதற்கு உதாரணம். சர்வதேச போட்டியில் வீரர்கள் பதற்றத்துடன் விளையாடுவதை தவிர்க்க வேண்டும். அரை இறுதிக்கு எளிதாக முன்னேறுவோம் என்று நினைத்தேன். ஆனால், அதிர்ஷ்ட தேவதை இந்த முறையும் எங்களுடன் இல்லை. தோல்வி குறித்து தேர்வுக் குழுவினருடன் விவாதிப்பேன். புதிய அணித்தலைவர், புத்தம் புதிய அணியை தேர்வு செய்யும்படி கேட்டுக் கொள்வேன்'' - என்றார் தட்டுத் தடுமாறி பேசி முடித்த ஸ்மித்தின் விழியோரம் கண்ணீர் எட்டிப் பார்த்தது. (15)



இறுதிப் போட்டிக்கான சிறப்பு பரிசு
EUROSTAR
Live your Life
CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE
வழங்கும் 32" TV LCD
மாபெரும் இறுதிப் போட்டி

பங்குபற்றுங்கள் போட்டிகளில் வெற்றிகொள்ளுங்கள் பணப்பரிசில்களை
உதயன் வழங்கும்
வெல்லுங்கள் 1 1/2 லட்சம் ரூபா பணப் பரிசு
1ஆம் பரிசு
எட்டமுடியாத லட்சங்கள் உங்களுக்காக
2ஆம் பரிசு
1 லட்சம் ரூபா பணப் பரிசு

CiCT GATEWAY CENTRE JAFFNA வழங்கும் 4 1/2 லட்சம் ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்
காலிறுதிப் போட்டிக்கான பரிசில்கள்
கம்ப்யூட்டர் ருடே வழங்கும்
தினமும் வெல்லும் ஒருவருக்கு
ஒரு வருடத்துக்கான
கம்ப்யூட்டர் ருடே இலவச சந்தா
உதயன் வழங்கும் தலா 10 ஆயிரம் வீதம் 5 பேருக்கு.
உங்களுக்காகவே காத்திருக்கின்றன லட்சங்கள்.

மாபெரும் இறுதிப் போட்டி 10 ஆறுதல் பரிசுகள்
அள்ளுங்கள் ஆறுதல் பரிசில்களை
SINGER PLUS
No.01 STANLY ROAD JAFFNA.வழங்கும்
EGG BEATER
SINGER
HOSPITAL ROAD JAFFNA.வழங்கும்
FAN
SINGER PLUS
CHUNNAKAM. வழங்கும்
FAN
SINGER PLUS
NELLIYADEY. வழங்கும்
FAN
SINGER PLUS
CHAVAKACHCHERI.
வழங்கும் TOASTER
PC SOLUTION
KASTHURIYAR ROAD JAFFNA. வழங்கும்
COLOUR PRINTER
PC POWER UNIT
LUXAN PLAZA
KASTHURIYAR ROAD. வழங்கும்
Rs. 5000 GIFT VOUCHER
BARANABAS
247, Stanly Road, Jaffna. வழங்கும்
SINSUNG DVD PLAYER
சரவணா ரெக்ஸ்
770, 772, கே.கே.எஸ் வீதி, (நட்டாதெருச் சந்தி யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER
கிருபா லேணர்ஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

போட்டி விதிகள்
ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்டு, உதயன் பணிமனை ... அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.

அடுத்த வர்ணப்படத்தில் உங்கள் நட்சத்திரங்கள் உதயனுடன் இணைந்திருங்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கை இன்று பிற்பகல் உடுத்துறையில்

யாழ்ப்பாணம், மார்ச் 31

வடமராட்சி கிழக்கில் உடுத்துறை ஜே-430 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று வியாழக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் ''சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கை'' மற்றும் போலி நடிப்பு பயிற்சி நடைபெறவுள்ளது.

இது ஒத்திகைச் செயற்பாடு என்பதால் பொது மக்கள் குழப்பமடைய வேண்டாம் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

தேசிய அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் இந்த நடிப்புப் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு உடுத்துறைப் பகுதி மக்கள், சமூக அமைப்புகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று அரச அதிபர் இமெல்டா சுகுமார் கேட்டுள்ளார்.

(ம-9)

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் உதயனுக்கு அனுப்பிவைத்துள்ள பெறுபேற்று விவரங்கள் வருமாறு:

**உடுப்பிட்டி அ.மி. கல்லூரி**

அரியரட்ணம் கதிர்சன்- 2ஏ2பி5சி, புவனேந்திர ராஜா சங்கீத்- ஏ5பி2சிஎஸ், தமிழ்மாறன் செந்தாளன்- 4ஏ5பி, சேகரன் திவாகர்- ஏ2பி5சிஎஸ், பேரின்பசிவம் பிரசாந்- 7ஏ2பி, யோகரட்ணம் பானுகோபன்- 8சி, குகதாஸ் கஜனன்- 4ஏ2பி3சி, தேவதயாபரன் நிதர்ஷன்- 7ஏ2பி, மதிகரன் நிகாசன்- 2ஏ3பி3சிஎஸ், இராசலிங்கம் நிரோஷன்- 9ஏ, இராமச்சந்திரன் துஷிகரன்- ஏபி5சிஎஸ், இராசேந்திரன் லக்ஷன்- ஏ2பி4சிஎஸ், செல்வராசா சிருஷாந்- 2ஏபி4சி2எஸ், அமரசிங்கம் துவாரகன்- ஏ3பி3சி2எஸ், சர்வானந்தம் தலைக்ஷன்- 2ஏ4பி3சி, அருந்தவராசா நிரோஷா- ஏபி4சி3எஸ், சிவஞானம் சிவதர்சன் - 2ஏ2சி4எஸ், விஜேந்திரன் லீனஸ்ராஜ்- ஏ3சி3எஸ், பாலசுப்பிரமணியம் கஜீவன்- ஏ4சி3எஸ், ஆறுமுகம் பைந்தமிழ்- ஏ5சி3எஸ், விஜயவீரன் திருக்குமரன்- ஏ4சி3எஸ், விஜயரட்ணம் தஜன்- ஏபி6சி, தவராசா வினோதன்- 6ஏ2பிஎஸ் (ஆங்கிலமொழி மூலம்).

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

மாதங்கி மகேந்திரன்- 8ஏபி, கஜீபா சந்திரபோஸ்- 7ஏ2பி, பைரவி பாலசுப்பிரமணியம் 7ஏபிசி- விதுஷா உதயகருணன் - 7ஏபிசி, சிவாணந்தி முருகவேள்- 6ஏ3பி, ராஜகுமாரி சௌந்தரராஜா- 6ஏபி2சி, தனுயா விக்னேஸ் வரன்- 5ஏ4பி, அஜந் தினி சொர்ணலிங்கம்- 5ஏ2பிசிஎஸ், மைதிலி ராஜ துரை- 5ஏ3பிசி.

**கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்**

இ.துளசி- 4ஏ3பிசிஎஸ், ந.பிரசாந்தன்- 3ஏபி5சி, கு.டினோஜா- 3ஏபி5சி, பா.சுஜித்திரா- 2ஏ3பி2சி2எஸ், ச. பிரசாந்-ஏ4சிஎஸ், க. நிரோஜன்- 2ஏ4சிஎஸ், ம.தவலோஜினி- ஏ3பி5சி, யோ. கனிஸ்ரா- ஏ2 பி2சி4எஸ், ந.சயந்தன்- 2ஏபி2சி2எஸ்.

**குருநகர் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம்**

ம.கனிஸ்ரன் - 3ஏபி5எஸ், ஸ். கெர்சோன்- ஏ3சி5எஸ், கு.வொட்மன் கிறீக் - ஏ5சி2எஸ், அ. அருள்ராஜ்- ஏ3சி4எஸ், கி.அருள்-2பி4சி2எஸ், தே. அன்ந்த ராஜ்- 2பிசி5எஸ், அ. டலிஸ்குமார்- 2பி சி3ஏஸ்.

**மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி**

சங்கீதா சிவானந்தசோதி - 9ஏ, ஜெசிந்தா சண்முகசுந்தரம்- 9ஏ, துஷியங்கா குணநாயகம்- 7ஏ2பி, யஸ்திகா பாலகிருஷ்ணன்-6ஏ2பிசி, சிதம்பரபாரதி திருச்செந்திநாதன் - 6ஏ3சி, கீர்த்தனா உரத்திர லிங்கம்- 5ஏ4சி, வைஸ்ணவி சேயானந்தம்- 4ஏ5பி, பிரவீனா ரவீந்திரன்- 4ஏ4பிசி, துவாரகா செல்வநாயகம்- 4ஏபி3சிஎஸ், வினுசா வேலும் மயிலும்- 3ஏ2பி3சிஎஸ், அபிராமி செல்வராஜா- 2ஏபி6சி.

## தவக்காலச் சிந்தனை

### தம்மைத் தாமே தாழ்த்துபவர் உயர்த்தப் பெறுவர்

''தம்மைத் தாமே உயர்த்துகிறவர் தாழ்த்தப் பெறுவர். தம்மைத் தாமே தாழ்த்துகிறவர் உயர்ந்தப் பெறுவர்'' என்ற நற்செய்தி வாக்கியத்தில் நாம் வாசிக்கக் கேட்கிறோம். இறைமகன் இயேசு தன்னையே தாழ்த்தி எங்களுக்காக மரித்து உயிர்க்கின்றார்.

இவ்வாறு தன்னைத் தாழ்த்தி ஏழை, எளியவர், கைவிடப்பட்டவர்களின் அன்னையாக வாழ்ந்தவர் அன்னைத் திரேசா. இவர் பணம், புகழ், பட்டம், பதவியோடு வாழ்ந்தவர் அல்ல. மாறாக இவர் ஓர் ஏழை. ஏழைகளைக் காப்பாற்ற வேண்டும், அவர்களுக்கு ஆறுதலாக இருக்கவேண்டும் என்ற இலட்சியத்தோடு வாழ்ந்தவர். ஒரு நாள் அன்னை திரேசா ஏழை மக்களுக்காக பிச்சை எடுக்கச் சென்றார். அங்கு ஒரு வியாபாரியிடம் கைநீட்டி பிச்சை கேட்ட போது அவன் காறி உமிழ்ந்து அவரது கையில் துப்புகிறான். அவர் அதை தனது நெஞ்சில் துடைத்துவிட்டு மறுகையை நீட்டி நீர் தந்தது எனக்கு, என்னிடம் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு தரவேண்டியதைத் தாரும் எனக் கேட்டார். அப்போது அந்த வியாபாரி மனம் நொந்து வருந்தி மனம் மாறி உதவிசெய்தார்.

இன்று இந்த அன்னையைப் போன்று எத்தனை பேர் வாழ்கின்றோம். ஏழை எளியவர், அநாதைகளைக் கண்டால் ஒதுங்கிப் போகின்றோமே தவிர, அவர்களுக்கு உதவ வேண்டும் என்கின்ற சிந்தனை அற்றவர்களாக வாழ்கின்றோம். அவ்வாறு வாழ்ந்தாலும் அன்னைக்கு வந்த அவமானம் போல எங்களுக்கு வந்தால் அவனைப் பழி வாங்கும் வரை ஓயமாட்டோம். இது தான் இன்று எம் சமூகத்தில் மலிந்து கிடக்கின்றது.

எனவே எங்களுடைய வாழ்வில் இவ்வாறான சந்தர்ப்பங்கள் வருகின்றவேளைகளில் உதவ முடியாவிட்டாலும் உபத்திரவம் கொடுக்காமல் விலகி வாழ முற்படுவோம். ஆகவே மனமாற்றத்தின் காலமாகிய இத்தவக்காலத்தில் இறைமகன் இயேசு காட்டிய அன்புப் பாதையில் நாம் ஒவ்வொருவரும் பயணிப்போம்.

*இந்து சிலுவைதாஸ்,*
நாவாந்துறை.

# மரண அறிவித்தல்

## பொன்னையா சுப்பிரமணியம்

### (முன்னாள் உரிமையாளர், ஜெயலட்சுமி பகவான், கொழும்பு-11)



புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 43/1, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான பொன்னையா சுப்பிரமணியம் நேற்று 30.03.2011 ஆம் திகதி கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி (பிரபல வர்த்தகர், பாணந்துறை) சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் பர்வதத்தின் அன்புக் கணவரும் தேவமலர் (ஆசிரியை- கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), உதயசங்கர் (கனடா), திலகமலர் (கனடா), மோகனமலர் (கனடா), காலஞ்சென்ற பவமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரேமகுமார் (இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர், திடீர் மரண விசாரணை அதிகாரி - புங்குடுதீவு), ஜெயக்குமார் (கனடா), சுதா (கனடா), அருள்செல்வம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் லோகபிரசாத் (மருத்துவபீட மாணவன்- பல்கலைக்கழகம், கொழும்பு), பிரவீணா (கொக்குவில் இந்துக் கல்லூரி), யதுர்சன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), அஸ்வின் (கனடா), நிவேதா (கனடா), அபிசா (கனடா), அக்சயா (கனடா), கிசோன் (கனடா); லதிகா (கனடா) ஆகியோ ரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (04.04.2011) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.ந.பிரேமகுமார்
(மருமகன்).

43/1, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.

(2784) (38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மனித நேயத்தின் பேரிலாவது விடிவு கிடைக்குமா...?

நாட்டில் இப்போது போர்ச் சூழ்நிலை இல்லை. இராணுவக் கட்டுப் பாடற்ற பிரதேசம் என ஒன்றில்லை . நாடு முழுவதும் அரச நிர்வாகமே நிலவுகிறது. அனைத்துப் பிரதேசங்களும் அரச கட்டுப்பாட்டிலேயே உள்ளன.-

தற்போதைய சூழலில் எம்மை விடுதலை-செய்யுங்கள் அல்லது பிணையிலாவது விடுவிக்க உதவி செய்யுங்கள். பல வருடங்களாக எதுவித முடிவும் தெரிவிக்கப்படாமல் நாம் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றோம். கடந்த முப்பது வருடங்களாக நடைபெற்ற போரினால் எமது குடும்பங்கள் கடும் பாதிப்புக்கு ஆளாகிப் பல இழப்புகளைச் சந்தித்துள்ளனர். இப்போதும் அதே நிலையே தொடர்கிறது--

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற வகையில், சம்பந்தப்பட்டவர்களுக்கு எமது விடுதலை தொடர்பாகப் பரிந்துரை செய்து பிறக்கின்ற சிங்கள- தமிழ் புத்தாண்டிலாவது நாம் எமது குடும்பங்களுடன் சந்தோஷமாக வாழ்வதற்கு உதவி செய்யுங்கள்.--

நம்மில் பலரும் நாட்டில் அபிவிருத்தி நிலவ வேண்டும் என்ற விருப்பம்- பெரும் சிந்தனை- கொண்டவர்கள். இத்தகைய சூழ்நிலையில் எமது விடுதலையை ஏன் தாமதிக்கின்றனர்- தாமதிக்கின்றீர்கள்--

கண்டி, போகம்பரை சிறைச்சாலையில் கடந்த பதினெட்டு வருடங்களுக்கும் அதிகமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள நீண்ட மனுவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த பதினெட்டு வருடங்களுக்கும் மேலாக, நீதிமன்ற விசாரணையோ வேறு எந்த நடவடிக்கையோ இல்லாமல் அமைச்சர்கள், நீதித்துறை அதிகாரிகள் மற்றும் பல தரப்புகளுக்கும் தமது நிலைமையை இவர்கள் எடுத்துக் கூறியும் எவ்வித முன்னேற்றமும் இல்லாத நிலையிலேயே, இதனைச் செய்யக்கூடிய வல்லமையும் அதிகாரமும் பாதுகாப்புச் செயலாளருக்கே உண்டெனக் கருதித் தமது மனுவை அவருக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

இலங்கையின் சிறைச்சாலைகளில் சிறு குற்றங்களைப் புரிந்தவர்கள் உட்பட, மொத்தம் இருபத்தேழாயிரம் கைதிகள் இருப்பதாக கடந்த சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் அரச தரப்பில் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்கள் தெரிவித்தன. அவர்களில் பத்தாயிரம் பேரை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மறு புறத்தில்-

சிறைச்சாலைகள் பலவும் நிரம்பி வழிவதால் அங்குள்ள கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பது குறித்து ஆராய்வதற்கு, எந்தெந்த வகை சார்ந்த கைதிகளை விடுவிக்கலாம் என்பதனைக் கண்டறிவதற்காக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் ஹெக்டர் யாப்பா தலைமையில் மூவர்கொண்ட விசாரணைக்குழுவும் கடந்த நவம்பர் மாதத்தில் நியமிக்கப்பட்டது. சுமார் ஐந்து மாதங்கள் ஓடி மறைந்து விட்டன. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை.

ஜனாதிபதி தமது இரண்டாவது பதவிக் காலத்துக்குச் சத்தியப்பிரமாணம் செய்வதை முன்னிட்டு, நீண்ட நெடுங்காலமாக விசாரணை செய்யப்படாமலும், வழக்குத் தொடரப் படாமலும் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள, எதிர்காலத்தை இழந்தவர்களாக தவிக்கின்ற தமிழ் இளைஞர், யுவதிகளை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

போர் நடைபெற்ற காலத்தில் கைது செய்யப்பட்டு, புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர், யுவதிகள் ஒரு சில தடைவைகளில் (எண்ணிக்கையில் நூற்றுக் கணக்கானோர்) விடுவிக்கப்பட்டனர்.

. ஆனால், சிறைச்சாலைகளில் பல ஆண்டுக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு வழக்குத் தொடரப்படாதவர்கள், நீண்ட காலமாகச் சிறையில் வாடுபவர்கள் என்ற வகை சார்ந்த ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் விடுவிக்கப்படவில்லை. அந்த வகையில் ஒரு சாரரே கண்டி போகம்பரை சிறைச்சாலையில் பதினெட்டு வருடங்களுக்கும் மேலாக வாடும், தமிழ் அரசியல் கைதிகளாவர்.

ஆனால் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என்று பலரும் சிறைச்சாலைகளிலும், புனர்வாழ்வு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் விடுவிக்கப்படுவர் என்று அவ்வப்போது அறிக்கைகள் விடுவதோடும், கூட்டங்களில் பேசுவதோடும் நின்று விடுகின்றனர். இவர்களில் புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் பிரதி அமைச்சர் விஜேமுனி சொய்சாவும், மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் வி. முரளிதரனும் அடங்குவர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் முரளிதரன் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில்-

முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து வருகிறது.அதனாலேயே அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடராமல் உள்ளது- என்று 'கயிறு' கொடுத்து விட்டுப் போனார்.

எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாமல் சிறைக் கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர் யுவதிகள், புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர் ,யுவதிகள் மற்றும் அரசியல் கைதிகளுக்கு நீதி வழங்குவதிலோ அல்லது அவர்களை விடுவிப்பதிலோ அரச தரப்பு மனிதாபிமானம், மனித நேயம் எதனையும் கருதில் கொள்ளாமல் காலத்தைக் கடத்தி அவர்களின் வாழ்க்கையைச் சீரழித்து வருகிறது. அதுவே பதினெட்டு, இருபது வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் நிலையும் ஆகும்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நிலையும் இதுவே ஆகும். கடந்த வாரம் அவர்களை முதன் முதலில் சந்தித்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனிடம் அவர்கள் நம்பிக்கை அற்றுப்போன தமது வாழ்க்கை குறித்து கண்ணீரும் கம்பலையுமாக எடுத்துக் கூறினர். தமக்குள்ள பிரச்சினைகளை சிறைச்சாலை அதிகாரிகளிடம் தெரிவிப்பதில் உள்ள பெரும் தடங்கலாக மொழிப் பிரச்சினை விளங்குவதாகத் தெரிவித்திருக்கின்றனர். அதனால் தம்மைத் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்ற உதவுமாறு கேட்டுள்ளனர்.

இதே போன்று, உள, உடல் இயலாமை ஆகிய, உளைச்சல்களால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள், வாழ்க்கையின் ஓரத்துக்கே தள்ளப்பட்டுள்ளனர்.

சர்வதேச மட்டத்தில் அதிக சட்ட விரோதச் சிறைச்சாலைகள் கொண்ட நாடு என்று சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவால் இனங்காணப்பட்டது எமது இலங்கை. சுமார் எண்ணாயிரம் அரசியல் கைதிகள் சட்ட விரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளர் என்றும் அது புள்ளி விவரம் வெளியிட்டதும் உண்டு.

இத்தகைய சூழ்நிலையில், பின்னணியில் போகம்பரை சிறைச்சாலை கைதிகள் தங்களையும் பிணையிலாவது விடுவியுங்கள் என்று நாடாளுமன்றத்தில், ஏன் அமைச்சரவையில் அங்கம் வகிப்பவர்களை விடவும்-

செல்வாக்கும், அதிகாரமும் மிக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு விண்ணப்பித்துள்ளனர். பெறுபேறு என்னாகும் என்பது சிந்திக்க வேண்டிய, பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்றே. எதற்கும்,அவர் மனித நேயத்தை மனதில் குவித்துச் செய[illegible] விண்ணப்பித்தவர்கள் சார்பில் நம்பிக்கை கொள்வோம்.

# புதிய துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் நாளை வைபவ ரீதியாக பதவியேற்கிறார்



யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிய துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள வசந்தி அரசரட்ணம் நாளை வெள்ளிக்கிழமை சம்பிரதாய பூர்வமாகப் பதவியேற்றுப் பணிகளைத் தொடரவுள்ளார். என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி செயலகத்தால் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு நியமனக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

யாழ். பல்கலைக்கழகத்தின் முதல் பெண் துணைவேந்தர் என்ற சிறப்புடன் மருத்துவ பீட பேராசிரியராகக் கடமையாற்றிய வசந்தி அரசரட்ணம் நாளை உத்தியோகபூர்வமாக பதவியேற்று பணிகளையாற்றவுள்ளார் என்று யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (ம-9)

# அனுமதியின்றி பனை தறித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

பனை அபிவிருத்திச் சபையின் அனுமதியின்றி பனைகளைத் தறிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தச் சபையினூடாக ஒரு பனையினைத் தறிப்பதற்கு 200 ரூபா அறவிடப்படுகின்றது. அதன் பிரகாரம் வீட்டுத் திட்டங்க ளுக்கு அமைய ஒருவர் 10 பனை மரங்களைத் தறிப்பதற்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

எனவே இவற்றை மீறி சட்ட விரோதமாக பனை மரங்களைத் தறிப்பவர்களை இனங்கண்டு பொதுமக்கள் கிராம் அலுவலர்களின் ஒத்துழைப்புடன் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை மேற்கொள்ளமுடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ம-313)

# மலேரியா தினத்தை முன்னிட்டு மாணவரிடையே சித்திரப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் உலக மலேரியா தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப்போட்டி நடத்தப்படவுள்ளது.

கனிஷ்ட பிரிவில் தரம் 6 முதல் தரம் 8 வரையான மாணவர்களும், சிரேஷ்ட பிரிவில் தரம் 9 முதல் தரம் 13 வரையான மாணவர்களும் பங்குபற்ற முடியும்.

''மலேரியாவற்ற இலங்கை'' எனும் த்லைப்பில் கருத்துக்களை வெளிப்படுத்தும் விதத்தில் சித்திரம் அமைதல் வேண்டும்.

ஆர்வமுடையவர்கள் பெயர், பாடசாலையின் தரம், மாகாணம் என்பவற்றைக் குறிப்பிட்டு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை 'சுகாதார மற்றும் போசனைக் கிளை, கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்லை' எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மூலையில் மலேரியா ஒழிப்புத்திட்டம் சித்திரப் போட்டி எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-313)

# சமுர்த்தி வங்கிகளால் வழங்கப்படும் கடனுக்கு வட்டி வீதம் குறைப்பு

தென்மராட்சி, மார்ச் 31

சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி வங்கியினால் வழங்கப்படும் கடனுக் கான வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையினர் அறிவித்துள்ளனர்.

சமுர்த்தி வங்கிகளினால் சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கும் 'மிருஜெய' விசேட கடன் திட்டத்தில் வழங்கப்படும் தொகைக்கே வட்டிவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

இக்கடன் தொகை ஒரு லட்சம் ரூபாவிலிருந்து இரண்டரை இலட்சம் ரூபாவாக அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ள வேளையில் இக்கடன் பெறும் சமுர்த்தி பயனாளிகளுக்கான கடன் தொகைக்கு 12 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகவும்-

ஏனைய குறைந்த வருமானம் பெறுவோருக்கான கடன் தொகைக்கு 12 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-207)

# உண்மையான மனிதன்

மனிதன் இன்று தன்னிடம் இருக்கும் கணக்கற்ற தவறுகளைப் புரிந்து கொள்ள முயற்சி எடுப்பதில்லை. அதற்கு பதில் மற்றவர்களிடம் இருக்கும் தினையளவு குற்றத்தையும் பனையளவாகக் காண்கிறான். மற்றவர்களிடம் இருக்கும் தவறுகளை ஆயிரம் கண்களால் தேடுகிறான். இதுதான் தற்போதைய மனிதனின் துயரமான நிலைமை. தனது உண்மையான இயல்பையும் அடையாளத்தையும் மனிதன் இன்று இழந்துவிட்டு நிற்பதற்குக் காரணம் தீய குணங்களுக்கு அவன் இடமளித்ததுதான். தற்போது மற்றவர்களிடம் இருக்கும் நற்குணங்களைக் காண்பதைவிட அவர்களில் இருக்கும் தவறுகளைத் தேடுவதிலேயே மனிதன் மும்முர மாகச் செயற்படுகிறான். மற்றவர்களிடம் நல்லவற்றையே காண்பவன்தான் உண்மையான மனிதன்.



(நன்றி: சாயி அருளமுதம்)

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொட்டிலடியில் மதுபான நிலையம் அமைக்க பிரதேச செயலகமும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச்31

சண்டிலிப்பாய், தொட்டிலடிச் சந்தியில் மதுபான விற்பனை நிலையம் அமைக்கக் கூடிய ஏதுவான சூழல் இல்லை.

அதற்கான அனுமதி எதனையும் வழங்க வேண்டாம் என வலி. மேற்குப் பிரதேச செயலர் மதுவரித் திணைக்கள ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

இதுதொடர்பான விளக்கம் ஒன்றையும் பிரதேச செயலர் அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

சண்டிலிப்பாய், தொட்டிலடிச் சந்தியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் மதுபான நிலையம் ஒன்றை அமைக்க விடுதி உரிமையாளர் முயற்சி செய்திருந்தார்.

இதற்கான அனுமதியை மதுவரித்திணைக்கள ஆணையாளரிடம் கோரியிருந்தனர்.


இதற்கிடையில் அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் அந்த இடத்தில் மதுபான நிலையத்தினை அமைக்க வேண்டாம் என்று எதிர்ப்புக்களைத் தெரிவித்தனர். வலி.மேற்குப் பிரதேச செயலரிடம் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தனர்.

இந்த நிலையில் அந்தப் பகுதியில் மதுபான நிலையம் அமைப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளதா? என்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் வலி.மேற்குப் பிரதேச செயலரிடம் கோரியிருந்தார்.

மக்கள் அதிகளவில் செறிந்து வாழும் இந்தப் பகுதியில் மதுபான நிலையம் அமைப்பது சாத்தியமற்றது. எனவே இங்கு மதுபான நிலையம் அமைத்தல் கூடாது என்பது குறித்த விளக்கமொன்றை பிரதேச செயலர் மதுவரித்திணைக்கள ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த இடத்தில் மதுபான நிலையத்தை அமைப்பதென்பது அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்களுக்குச் சிரமங்களை ஏற்படுத்தக்கூடும்.

அதனைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அந்தப் பகுதியில் உள்ள சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(ம-9)

# ஆளுநருக்குப் புதிய கட்டடம்



கைதடி, மார்ச்31

வடக்கு மாகாண ஆளுநருக்கு ஆளுநர் அலுவலகமும் வாசஸ்தலமும் அமைக்கும் பணிகள் யாழ்.பழைய பூங்காவில் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாண அரச அதிபரின் வாசஸ்தலத்துக்கு கிழக்குப் பக்கமாக இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது. கட்டடப் பணிகள் பூர்த்தியடைந்ததும் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஆளுநரின் தற்போதைய அலுவலகம் கண்டி வீதியில் உள்ள தனியார் ஒருவரின் வீட்டில் இயங்கி வருகின்றது. அதுவே அவரது உத்தியோக பூர்வ இல்லமாகவும் இருக்கிறது. (ம-288)

## வாழ்வாதார உதவி...



அச்சுவேலி இராசமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.கிழக்குப் பிரதேச செயலர் எம்.பிரதீபன், தலைவனை இழந்த குடும்பத்தைத் தற்போது தலைமை தாங்கும் பெண்ணுக்கு தையல் இயந்திரம் ஒன்றை வழங்குகிறார். (11)

# போதையில் மக்களுக்கு இடையூறு விளைவித்த மூவருக்கு அபராதம்

நெல்லியடி, மார்ச்31

வடமராட்சிப் பகுதியில் சட்ட விரோதமாக மணல் ஏற்றியவர்களும், மது அருந்திவிட்டுப் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தவர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டனர்.

நெல்லியடிப் பகுதியில் மது அருந்திவிட்டுப் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த மூவர் நெல்லியடிப் பொலிஸாராலும் குடத்தனைப் பகுதியில் உழவு இயந்திர மூலமாக சட்ட விரோதமாக மணல் கடத்தியவர்கள் பருத்தித்துறை பொலிஸாரினாலும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்குகளை விசாரித்த நீதிபதி பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த மூவருக்கு தலா ஆயிரம் ரூபாவும், சட்ட விரோதமாக மணல் ஏற்றியதற்காக 10 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ஒ-எ-319)

# பாலாவி இந்து மயானம் படையினரால் புனரமைப்பு

கொடிகாமம், மார்ச்31

கொடிகாமம் பாலாவிதாள் இந்துமயானம் அண்மையில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுப் பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

பிரதேச பொதுமக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்தத் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கெற்பேலி படைமுகாம் பொறுப்பதிகாரி தலைமையில் பாதுகாப்புத் தரப்பினரும் பொது மக்களும் இணைந்து சுமார் 100 பேர்வரையில் இந்தச் சிரமதானப் பணியை மேற்கொண்டமை குறிப்பிடத் தக்கது. (ம-122)

# சுழற்சி முறையில் கிடுகு உற்பத்தி

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினால் சுழற்சி முறையிலான தென்னோலைக் கிடுகு உற்பத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.இந்தத் திட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினால் இனங்காணப்பட்ட 50 பயனாளிகளுக்கு சுழற்சி முறையிலான வாழ்வாதாரக் கடன் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கான நிதி உதவியை பிரதேசத்தின் நலன் விரும்பிகள் பச்சிலைப் பள்ளி அபிவிருத்திப் பேரவைக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-313)

# ஆனைக்கோட்டை - நவாலி வீதி சேதமடைந்த நிலையில்

நவாலி, மார்ச்31

ஆனைக்கோட்டையிலிருந்து நவாலியூடாகச் செல்லும் பிரதான வீதியில் பெரும் கிடங்குகள் ஏற்பட்டு சிதைவடைந்துள்ளதால் போக்குவரத்துச்செய்வதில் பல கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளது.

இந்தவீதியால் செல்லும் கனரக வாகனங்கள் உட்பட அதிகரித்த வாகனங்களும் இந்தக் கிடங்குகளில் விழுந்தெழும்பியே செல்கின்றன. மேலும் இந்த வீதியில் குடியிருக்கும் குடியிருப்பாளர்கள் சிலர் தாம் பாவிக்கும் கழிவு நீரை இந்த வீதிக்குச் செல்ல விடுவதனால் அந்த நீர் இந்தக் கிடங்குகளில் மழைகால வெள்ளம் போன்று நிரவி வழிகின்றது.

இதனால் வீதியால் செல்லும் வாகனங்கள் இந்தக் கழிவு நீர்க்கிடங்கில் விழுந்தெழும் போது நாலாபக்கமும் சிதறிப் பறப்பதால் அதற்குச் சமீபமாகச் செல்வோர் நனைந்து செல்ல வேண்டியுள்ளது.

ஆதலால் சம்பந்தப்பட்டவர்கள் இவற்றை நேரில் பார்வையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் பொதுமக்கள் கேட்டுள்ளனர். (த-100)

# உணவு தயாரிக்கும் பணியாளருக்கு பொருள்கள் வழங்குவதை நிறுத்துக

## யாழ். செயலகம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு சத்துணவு தயாரிக்கும் பணியில் ஈடுபடுவோருக்கு உணவுப் பொருள்கள் வழங்குவதை நிறுத்துமாறு யாழ்.செயலகத் தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தினால் சகல பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்படும் சத்துணவைத் தயாரிக்கும் பணியில் ஈடுபடுவோருக்கு வேதனம் வழங்காது பொருள்களின் ஒரு பகுதி இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்தது.

இந்தப் பொருள்கள் வழங்குவது மார்ச் மாதத்துடன் நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மாணவர்களுக்கு பல பாடசாலைகளில் சத்துணவு வழங்கப்படுவது இல்லை என்றும் தெரிவிக்கப் படுகின்றது. (ம-207)

# உரும்பிராய் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டை ஒட்டிய கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச்31

யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டுவிழாவை ஒட்டிய மாபெரும் கல்விக் கண்காட்சி ஏப்ரல் மாதம் மூன்றாம் திகதி முதல் தொடர்ந்து மூன்று தினங்கள் காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் திருமதி அருளேஸ்வரி வேதநாயகமும் சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் கோட்டக் கல்வி பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொள்வர். இந்தக் கண்காட்சியில் நீரிழிவு நோயை வருமுன்காப்பது எப்படி? புற்று நோயை வெற்றி கொள்வோம், ஆயுள் வேத மூலிகைகள் தொடர்பான முக்கிய விளக்கங்கள், கவின் கலைமன்ற ஆக்கங்கள், வட மோடி, தென்மோடி சிந்து நடைக் கூத்துக்கள், ஒயிலாட்டம், பொம்மலாட்டம், பேய்வீடு, புத்தகக் கண் காட்சி போன்ற விட யங்கள் இடம்பெறும். (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு குறைந்தது 30 வைத்தியர் உடன் தேவை

## சுகாதார அமைச்சின் செயலாளருக்குத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கடமை யாற்றுவதற்கு குறைந்தது 30 வைத்தியர்கள் வரை உடனடி யாகத் தேவையாக உள்ளனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் இவ்வாறு கோரிக்கை விடுத் துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ள தாவது:

யாழ்.மாவட்டத்திலுள்ள ஆதார, பிராந்திய, ஆரம்பப் பிரிவு வைத்தியசாலைகளில் இவர் களுக்கான வெற்றிடங்கள் நிலவு கின்றன.

சுகாதார அமைச்சினால் அதற் கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. அடுத்த மாத நடுப் பகுதியில் இவற்றுக் கான ஒரு தீர்வு கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

தற்போது உள்ள வைத்தியர் களின் எண்ணிக்கை போதாது உள்ளது. இதனால் ஒரு வைத் தியசாலையில் பணிபுரிபவர் களே ஏனைய வைத்தியசாலை களுக்கும் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர்.



சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பி.டி. மகிபால உள்ளிட்ட குழுவினர் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் ஏற்பாடுசெய்திருந்த கலந்துரையாடலின்போது.

இதனால் குறிப்பிட்ட நேரத் தில் மட்டுமே நோயாளிகளைப் பார்வையிட முடிகிறது என்று தெரிவித்தார்.

அண்மையில் யாழ்ப்பாணத் துக்கு விஜயம் மேற்கொண்டு சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பி.டி.மகி பால உள்ளிட்ட குழுவினர் யாழ்.சுகாதார சேவைகள் பணி மனையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

இந்தக் கலந்துரையாடலின் போதே சுகாதாரப் பணிப்பாளர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போது இந்த வைத்திய சாலைகளுக்கான விண்ணப்பங் கள் கோரப்பட்டிருக்கின்றன.

வைத்தியசாலைகளில் வைத் தியர் பற்றாக்குறை நிலவுவதோடு ஒரு வைத்தியரே ஒன்றுக்கு மேற்பட்ட வைத்தியசாலை களுக்கும் சுழற்சி முறையில் நோயாளிகளைப் பார்வையிடச் செல்கின்றனர்.

இதனால் உரிய நேரத்தில் நோயாளிகள் சிகிச்சை பெறமுடி யாதிருப்பதோடு சில நேரங் களில் இறப்புக்களையும் சந்திக்க வேண்டியுள்ளது.

அண்மையில் வேலணை வைத்தியசாலை வைத்தியர் சுழற்சி முறையில் பிறிதொரு வைத்தியசாலைக்குச் சென்று விட்டார். அந்தநேரம் வேலணை வைத்தியசாலைக்கு சிறுவன் ஒருவனை அங்கு சிகிச்சைக் கெனக் கொண்டு செல்லப்பட்ட போது அங்கு வைத்தியர் இல்லை. பின்னர் யாழ்.போதனா வைத்தி யசாலைக்குக் கொண்டு செல்லப் பட்டபோது உரிய நேரத்துக்குச் சிகிச்சை வழங்கமுடியாது போனது இதனால் அந்தச் சிறு வன் இடைநடுவி லேயே உயிரி ழந்துள்ளான்.

இவ்வாறான பிரச்சினை களுக்கு வைத்தியர் பற்றாக் குறையே காரணம் என்று இந் தக் கூட்டத்தில் பிராந்திய சுகா தாரப் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-4)

# புங்குடுதீவு மடத்துவெளி உவர்நீர் தடுப்பணை புனரமைப்பு

நாவற்குழி, மார்ச் 31

முரண்பாடுகளால் பாதிப் புற்ற பிரதேசங்களுக்கான அவ சரகாலக் கருத்திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச செயலர் பிரிவில் புங்குடுதீவு மடத்து வெளி உவர்நீர் தடுப்பணை புனரமைக்கப்படவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வடமாகாண சபை யின் ஊடாக இந்த வேலைக் கான கேள்வி கோரல் மேற் கொள் ளப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியி டமிருந்து பெறப்பட்ட கடனு தவியின் மூலம் இந்த வேலை நிறைவேற்றப்படவுள்ளது.

ஏப்ரல் 27 ஆம் திகதி வரை இந்த வேலைக்கான கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியுமென இந்தத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் எந்திரி க.சோ.சிவபாதம் அறிவித்துள் ளார். (ம-121)

# நல்லூர் கோட்டமட்ட தமிழ்த் தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

நல்லூர் கோட்ட மட்டத்துக் கான தமிழ் தினப்போட்டிகள் எதிர்வரும் 07 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

அனைத்துப் பிரிவுகளுக்கும் தமிழ்மொழிப் போட்டிகளான கட்டுரை வரைதல், இலக்கிய நயத்தில் கட்டுரை வரைதல், தமிழியல் கட்டுரை இலக்கியம் எழுதுதல், இலக்கணப்போட்டி, திறனாய்வுப் போட்டி, குறு நாடக ஆக்கம், கவிதை, சிறு கதை போன்றன இடம்பெற வுள்ளன.

தமிழ்த் தினப் போட்டிகளுக் கான சுற்றுநிருபங்கள் பாட சாலைகளுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

அனைத்துப் பாடசாலை மாண வர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நல்லூர் கோட் டக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக் கராசா அறிவித்துள்ளார்.(ம-311)

# தொழில்நுட்ப விருது வழங்கல் போட்டியில் 37 லட்சம் பெற்ற தென்மராட்சி பாடசாலைகள்

தென்மராட்சி, மார்ச் 31

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் பாடசாலை களிடையே கணினி கற்றல் நிலையங்களில் செயற்பாடு தொடர்பான தேசிய தகவல் தொழில்நுட்ப விருது வழங்கல் 2009 இற்கான போட்டிகள் நடத் தப்பட்டன. இதில் தென்மராட்சி கல்வி வலயத்திலிருந்து பங்கு பற்றிய ஐந்து பாடசாலைகளும் விருது பெற்று 37 லட்சம் ரூபா பரிசில்களை வென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற விருது களின் விவரம் வருமாறு-

'ஏ' வகைப் போட்டிகளில் சாவக் சேரி இந்துக் கல்லூரி இரண்டா மிடம் பெற்று 15 லட்சம் ரூபா வையும் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் மூன்றாவது இடத்தைப் பெற்று 4 லட்சம் ரூபாவையும் பெற்றுள்ளன.

'பி' வகைப் போட்டிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இரண்டாமிடத்தைப் பெற்று 10 லட்சம் ரூபாவையும் சாவகச் சேரி மகளிர் கல்லூரி நான்கா மிடத்தைப் பெற்று 4 லட்சம் ரூபாவையும் கொடிகாமம் திரு நாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆறாவது இடத்தையும் பெற்று 4 லட்சம் ரூபாவையும் பெற்று விருதுகள் பெற்றுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

(ம-207)

# போதியளவு இருப்பிட வசதிகள் இன்றி பருத்தித்துறையில் இயங்கும் சிறுவர் இல்லம்

## திடீர் சோதனையில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

போதிய இருப்பிட வசதிகள் இன்றி இயங்கிவந்த சிறுவர் இல்லம் ஒன்று பருத்தித்துறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மேற்கொள் ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட நீதி வான் நீதிமன்ற நீதிபதி, பருத் தித்துறை பிரதேச செயலாளர், பொலிஸ் அதிகாரி, கல்வித் திணைக்கள உதவிப் பணிப் பாளர், சிரேஷ்ட பொதுச் சுகா தார பரிசோதகர், கிராம சேவை யாளர், மாவட்ட சிறுவர் நன்ன டத்தை உத்தியோகத்தர் ஆகி யோர் கொண்ட குழுவினரே மேற் படி சோதனைகளை மேற்கொண் டனர்.

இதன் போது குறித்த இல்லத் தில் 66 ஆண் சிறார்களும் 96 பெண் சிறார்களும் தங்கியிருந் தனர். ஆண்கள் பகுதியில் 8 அறைகளும், பெண்கள் பகுதி யில் 18 அறைகளும் மட்டுமே இருந்தன. ஒவ்வொரு அறை யிலும் ஆறுபேர் தொடக்கம் எட்டுப்பேர் வரையில் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

சிறுவர் நன் னடத்தை திணைக்களத்தின் விதிகளுக் கமைய 36 சதுர அடிக்கு ஒருவர் என்ற வீதத்தி லேயே தங்கவைக்கப்படலாம். இருப்பினும் இங்கு அவ்வாறு சிறுவர்கள் தங்கவைக்கப்பட வில்லை.

மேலும் அங்கு அமைக்கப் பட்டுள்ள அறைகள் போது மான அளவு காற்றோட்ட வசதி யுடையனவாகவும், போதுமான மின்சார வசதிகள் கொண்டவை யாகவும் இல்லை.

சிறுவர்கள் படுப்பதற்கு கட்டிலோ, மெத்தையோ, தலை யணையோ இல்லை. அங்கு தங்கியிருக்கும் சிறுவர்களின் பாதணிகள், உடைகள், பாடசாலை கொப்பி, புத்தகங்கள், உணவருந்தும் தட்டுக்கள் என்பனவும் அவர்கள் தங்கியிருக்கும் அந்த அறைகளில் நிலத்திலேயே வைக்கப்பட்டுள் ளன.

மலசல கூடமும் பாவிக்கக் கூடிய நிலையில் இல்லை. அத் துடன் பொதுச் சுகாதார பரிசோத கரினால் வழங்கப்பட்ட நுளம்பு வலைகள் எவையும் அங்கு கட் டப்படவில்லை. அனுபவமான பராமரிப்பாளர்களும் இல்லை. சத்துணவுகள் அங்கு தங்கியி ருக்கின்ற சிறுவர்களுக்கு இது வரை நாளும் வழங்கப்பட வில்லை என்பதும் தெரியவந் துள்ளது.

இதேவேளை, கடந்த மாதம் 24 ஆம் திகதி நீதிபதியால் சிறு வர் இல்ல நிர்வாகிகளுடன் கலந் துரையாடல் நடத்தப்பட்டது.

இதன் பிரகாரம் குறித்த திகதி யின் பின்னர் சிறுவர்களை சிறு வர் இல்லங்களில் இணைப்ப தானால் நீதிமன்ற அனுமதி யின் பின்னரே இணைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

அதனையும் மீறி குறித்த சிறு வர் இல்லத்தில் 14 சிறுவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

இங்கு தங்கியுள்ள சிறுவர்கள் எல்லோரும் வெளி மாவட்டத் தைச் சேர்ந்தவர்களே. மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் முகாங்களில் தங்கியிருந்த சிறு வர்களே இங்கு தங்கவைக்கப் பட்டுள்ளனர் என்பதும் குறிப் பிடத்தக்கது.

பருத்தித்துறை உபயகதிர் காமத்தில் உள்ள 'கடவுளின் குழந்தைகள்' என்னும் சிறுவர் இல்லமே இவ்வாறு இயங்கு வதாகச் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. (ம-15)

# நிறுவை, அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடல்

தென்மராட்சி, மார்ச் 31

சாவகச்சேரி நகரசபை எல் லைக்குட்பட்ட வணிக வியாபார நிலையங்களில் பயன்படுத்தப் படும் நிறுவை, அளவை உபகரணங் களுக்கு இன்று தொடக்கம் ஏப்ரல் எட்டாம் திகதிவரை முத்திரையிடப்படவுள்ளன.

சாவகச்சேரி நகரசபை அலு வலகத்தில் யாழ்.மாவட்ட நிறுவை கள், அளவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் முத்திரை யிடும் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன. நகரசபை எல்லைக் குட்பட்ட வணிக நிலையங்கள், சந்தை வியாபாரிகள் ஆகியோர் தமது இடங்களில் பயன்படுத் தும் நிறுவை, அளவை உபகர ணங்களுக்கு முத்திரையிடுமாறு சாவகச்சேரி கைத்தொழில் வணி கர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிர காஸ் அறிவித்துள்ளார். (ம-207

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநலப் பாதிப்பு, போசாக்குக்குறைவு, காசநோய்த் தொற்று ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள மீள்குடியமர்ந்த மக்கள்

வன்னியில் மீள்குடியமர்ந்துள்ள மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றமை தொடர்பான செய்திகள் ஏற்கனவே பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

இவற்றுள் முக்கியமான மூன்று விடயங்கள் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

இந்த மக்களின் மனநலச் சீர்கேடு, போசாக்கின்மை, காசநோய்த் தொற்று ஆகியனவே அவை. இவை தொடர்பாக ஏற்கனவே பல்வேறு பிரச்சினைகளுக்குள் சிக்கியிருக்கும் வன்னி மக்கள் அக்கறை காட்டாத போதிலும் இவற்றின் தாக்கம் எதிர்காலத்தில் இவர்களுக்குப் பெரிய சவாலாக அமையுமென்றே கருதப்படுகின்றது.

கொடிய யுத்த பூமியில் நின்று தமது உறவுகள் கொல்லப்படுவதையும், அங்கவீனமுறுவதையும் நேரிலே பார்த்த இந்த மக்களில் பலர் அதன் தாக்கத்திலிருந்து இன்னமும் விடுபட்டதாகத் தெரியவில்லை. கடந்த கால நினைவுகள் அவர்களின் மனங்களில் இன்றும் நின்று ஊசலாடுகின்றன. இவை மறைந்து போவதற்கு அதிக காலமெடுக்கலாம்.

ஆனால் இந்த மனப்பாதிப்புக்கள் மனநல நோயாக உருவாகும் சாத்தியங்களை நாம் மறுக்க முடியாது. இது தொடர்பான எச்சரிக்கையை மனநல மருத்துவர்கள் ஏற்கனவே விடுத்துள்ளனர்.

**வன்னியில் இடம் பெற்ற யுத்தத்தின் காரணமாக அங்கு மனநலம் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், போசாக்கு குறைபாடு உள்ளவர்கள், காசநோய் தொற்றுள்ளவர்கள் எனப் பல பிரச்சினைகள் அந்த மக்களை வாட்டி வதக்கிய வண்ணம் உள்ளன. இவையெல்லாவற்றையும் அந்த மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவது யார்?**

ஆகவே இவர்களை இனம் கண்டு உரிய சிகிச்சைகளோ அல்லது ஆற்றுப்படுத்துகைகளோ வழங்குவது மிகவும் அவசியமாகும். இல்லாவிட்டால் மனநலம் பாதிக்கப்பட்ட ஒரு பெரும் கூட்டத்தையே நாம் காணமுடியும்.

அடுத்ததாகப் போசாக்குக் குறைவு தொடர்பானது. இன்றைய பொருளாதார நெருக்கடியில் போசாக்கான உணவு என்பது எல்லோருக்கும் கிடைக்க மாட்டாது. பொருளாதார நிலையில் உயர் மட்டத்தில் உள்ளவர்களுக்கே இது சாத்தியமாகும். அதிலும் எல்லாவற்றையும் இழந்து கடைநிலையில் வாழும் இந்த மக்கள் போசாக்கான உணவுக்கு எங்கே போவார்கள்? இதன் காரணமாக வளர்ந்தவர்கள் முதல் பிறக்கும் சிசு வரை போசாக்குக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனால் ஒட்டு மொத்தமாக ஓர் ஆரோக்கியக் குறைவான சமுதாயம் உருவாவது தவிர்க்க முடியாதது. அதிலும் மிக மோசமான வாழ்விடங்களில் தமது வாழ்க்கை யைத் தொலைத்துக் கொண்டிருக்கும் இவர்கள் போசாக்குக் குறைபாடு காரணமாக நோய் எதிர்ப்புச் சக்தியை இழந்து பல்வேறு நோய்த் தொற்றுக்களுக்கும் இலகுவில் ஆளாகக் கூடிய நிலையில் உள்ளனர்.

குறிப்பாக இளம் சிறார்களும் முதியவர்களும் இலகுவாகப் பாதிப்புக்களுக்கு ஆளாவர்.

ஆகவே அரசும் தொண்டு நிறுவனங்களும் போசாக்குக் குறைபாடுகளைப் போக்குவதற்கு இந்த மக்களுக்கு உடனடியாக உதவ வேண்டுமென்பதே இங்கு வாழும் அனைவரதும் வேண்டுகோளாக உள்ளது.

இறுதியாக அண்மையில் வெளியாகியுள்ள செய்தியொன்று கவலையை ஏற்படுத்துவதாக உள்ளது. வன்னி மக்களில் பலர் காசநோய்த் தொற்றுக்கு ஆளாகிய நிலையில் உள்ளனர் என்பதுதான் அந்தச் செய்தி.

இதனை யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு பொறுப்பதிகாரியான டாக்டர் சி. யமுனானந்தா கூறியுள்ளார். இதனை ஓர் எச்சரிக்கையாகவே நாம் கருத வேண்டும். வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த மக்களே இந்த நோயின் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அதில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த மக்கள் இதைப் பற்றி அக்கறை காட்டுவதில்லையெனவும் தெரியவருகின்றது. பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதால் இந்த நிலை தோன்றியுள்ளது.

ஆனால் காசநோய்த் தொற்றுக்கு ஆளாகியவர்கள் உரிய சிகிச்சைகளைப் பெற்று இந்த நோயைக் குணமாக்காவிடின் ஏனையவர்களும் இதனால் பாதிப்படையக்கூடிய ஏது நிலை தோன்றியுள்ளது.

அத்துடன் காசநோயைக் குணப்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளதால் நோய்த் தொற்றுக்கு ஆளாவோர் உரிய சிகிச்சைகளைப் பெறுவதற்கான உதவிகளைச் சுகாதாரத் திணைக்களத்தினரும் தொண்டு நிறுவனங்களும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

**ராஜராஜன்**

ஆகவே வன்னியில் மீள்குடியமர்ந்த மக்களைப் பாதிக்கும் இந்த மூன்று விடயங்களையும் கவனத்தில் கொண்டு இவற்றை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். ✱


## மரண அறிவித்தல்



### தம்பு இராசலிங்கம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நாயன் மார்கட்டு/ வவுனியா/ கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற தம்பு - பாக்கியலக்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வரும் முன்னாள் Lipton நிறுவனத்தின் யாழ்.விற்பனை முகாமையாளரும் Golden Tea நிறுவனத்தின் ஸ்தாபகருமான தம்பு இராசலிங்கம் 28.03.2011 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2011) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயில் வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல்: குடும்பத்தினர்
(48-20-25) மகன்-ராஜீவன், மகள் -ராஜ்குமாரி.



# UNIVERSITY OF JAFFNA
# BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed Bids from the qualified contractors for the following works.

| Work/Service Details | Security/ Refundable deposit (Rs.) | Non-refundable deposit(Rs.) | Approximate direct cost of the work (Rs. in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Repairs/Improvements/ Internal Painting Main Building Faculty of Medicine, University of Jaffna. | 125,000.00 | 500.00 | 12.5 | M 5/C6 (Buildings) |
| Improvements to Pharmacy facilities and others for Department of Siddha Medicine, University of Jaffna. | 25,000.00 | 500.00 | 2.3 | M 7/C8 (Buildings) |

Bid forms may be obtained from the Deputy Registrar/ Capital Works & Planning Unit, University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above Bid fee at the Shroff`s Counter, University of Jaffna until 11.04.2011.

Perfected Bid should be sealed and marked with the job and the name of the work/ service on the top left hand corner of the envelop and sent by registered post to reach **the Registrar, University of Jaffna, P.O. Box 57, Thirunelvely, Jaffna** or deposited in the tender box kept at Registrar`s Office, University of Jaffna.

Bids will be accepted till 2.00 p.m. on 25.04.2011 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of Bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O.Box 57,
Thirunelvely,
Jaffna.
29.03.2011

Registrar
University of Jaffna.

(C/1577060)(45-24)



## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
14.11.1961



இறப்பு
01.04.2000

### அமரர் சங்கரப்பிள்ளை பாலசிங்கம்

திதி: துவாதசி (31.03.2011 )

அப்பா அப்பா என்றழைக்க.....
அன்புடனே எம்மை
அரவணைத்தீர் அன்புமொழிபேசி
ஆதரவாய் எமக்கிருந்தீர்..
நீர் எம்மை விட்டுப் பிரிந்து
பதினொரு ஆண்டுகள் ஆனதப்பா
பதினொராயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
நம் துயரம் ஆறாதப்பா...
மீளாத்துயிலில் நீங்களும்
மீளாத்துயரில் நாமும்...

கைதடி மேற்கு,
கைதடி.

(109295) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளின்றி தவிக்கும் வங்காலை, ஆனாள் கிராம மக்கள்

மன்னார், மார்ச் 31

மன்னார், வங்காலை, ஆனாள் நகர் கிராம மக்கள் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்ந்து வருவதாக குறித்த கிராம மக்களின் நிலவரம் தொடர்பாக அதிகாரிகளின் கவனத்துக்கு பல தடவை கொண்டு வந்தும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என அக்கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி கிராமம் 2007 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. குறித்த கிராமத்தில் 165 குடும்பங்களுக்கான காணித்துண்டுகளை அரசு வழங்கியுள்ளது.

ஆனால் தற்போது 52 குடும்பங்கள் மட்டுமே குடியமர்ந்துள்ளதாக வங்காலை ஆனாள் நகர் மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி திருமதி எ.ஆர். வினிபிடா டயேஸ் தெரிவித்தார். இங்கு அடிப்படை வசதிகள் எவையும் செய்து கொடுக்கப்படாமையின் காரணமாக ஏனைய குடும்பங்கள்குடியமரவில்லை.

தற்போது குடியமர்ந்துள்ள 52 குடும்பங்களும் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக அவர் தெரிவித்தார். குறித்த கிராமத்தில் மின்சார வசதி தற்போது இல்லாததன் காரணமாக பாடசாலை மாணவர்கள் இரவு நேரத்தில் பாடங்களைக் கற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அது மட்டுமின்றி குறித்த கிராமத்துக்கு அருகில் பாரிய காடுகள் காணப்படுகின்றன. இரவில் பாம்புகள் நடமாடித் திரிவதனால் இரவில் மக்கள் நடமாட அஞ்சுகின்றனர்.

எனவே குறித்த கிராமத்துக்கு முதலில் மின்சார வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு உரிய அதிகாரிகளிடம் கிராம மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளதாகவும் ஆனாள் நகர் மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி திருமதி எ.ஆர்.வினிபிடா டயேஸ் தெரிவித்தார். (க)

# டெங்கு நுளம்பு அழிப்பு வவுனியாவில் நடவடிக்கை

## டாக்டர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 31

டெங்கு நுளம்பு அழிப்பு நடவடிக்கைகள் வவுனியா நகரில் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பி.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இந்த மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதிவரை சுகாதார அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நுளம்பு ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட்டது. இதனையொட்டி வவுனியாவில் சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் புகை விசிறல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வவுனியா மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனால் இடையிடையே மழை பெய்வதனாலும் தென்னிலங்கையிலிருந்து பெருமளவிலானவர்கள் வவுனியா நகருக்கு வந்து போவதனாலும் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளைத் தாம் கைவிடவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார். வவுனியா மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் சிறந்தமுறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# தடுப்பிலுள்ள உறவுகளை மீட்டெடுத்துத் தாருங்கள்

## சர்வமதக் குழுவிடம் வன்னி மக்கள் கதறல்

முல்லைத்தீவு, மார்ச் 31

முல்லைத்தீவுக்கு நேற்று முன்தினம் வருகை தந்த சர்வமத சம்மேளனத்தினிடம் தடுப்பு முகாம்களிலும் புனர்வாழ்வு நிலையங்களிலும் உள்ள தமது உறவுகளை மீட்டுத்தருமாறு பிரதேச மக்கள் கதறியழுத வண்ணம் தமது வேண்டுதல் மனுக்களைச் சமர்ப்பித்தனர்.

சர்வமத சம்மேளனத் தலைவர் கர்தினால் ரஞ்சித் மல்கம் ஆண்டகை தலைமையில் கொட்டாவ தம்ம அலங்கார தேரர், இராமச்சந்திரன் பாபு சர்மா, மௌலவி ஆதம்பாவா உட்பட 21 பேர்கொண்ட மத குருமார்கள் நேற்றுச் சந்தித்தனர்.

முல்லைத்தீவு பரிபேதுரு வானவர் ஆலயத்தில் இடம்பெற்ற சந்திப்பில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர்.


இந்தச் சந்திப்பின் நோக்கம் போருக்குப்பின் மக்களின் வாழ்வாதாரம் பற்றியும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் ஆராய்வதற்காகவே என்று மதகுருமார்கள் தெரிவித்தனர்.

மக்களின் வாழ்வாதார நிலையை நேரில் பார்த்த சர்வமதத் தலைவர்கள் அவர்களின் வாழ்வை மீளக்கட்டியெழுப்பத் தங்களால் இயன்ற பணிகளைச் செய்வதாக வாக்குறுதியளித்தனர்.

போருக்குப் பின்னர் சர்வமத சம்மேளனத்தைச் சேர்ந்த மத குருமார் முதற்தடவையாக முல்லைத்தீவு மக்களைச் சந்தித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-190-323)

## இதுவுமொரு வாழ்வா?...



தொடரும் நெருக்கீடுகள்: கிளிநொச்சி, கண்டாவளை, வெளிக்கண்டல் பகுதியில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட மக்கள் வீட்டு வசதிகள் எதுவும் வழங்கப்படாமல் மோசமான நிலையிலேயே தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். (6)

# வவுனியா இறம்பைக்குளத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்



வவுனியா, மார்ச் 31

வவுனியா, இறம்பைக்குளம் கிராம சேவையாளர் பிரிவில் கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்புச் சிரமதானத்தில் கிராம மக்கள் பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ், பொது மக்கள் உறவுப் பிரிவு பொறுப்பதிகாரி மஹிந்த ஜெனசேனாவின் ஆலோசனைக்கு அமைய இந்தச் சிரமதானம் ஒழுங்கு செய்யப்பட்டது.

உயிர்க்கொல்லியான டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை முற்றாகவே ஒழிக்கும் நடவடிக்கைகள் வவுனியாவில் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றது.

இந்த மாவட்டத்தில் டெங்கு நோய் பூரண கட்டுப்பாட்டில் உள்ளபோதும் எதிர்காலத்தில் இது பரவாது தடுக்கும் நோக்கில் இது போன்ற சிரமதான நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன. (க)

# குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு

கிளிநொச்சி, மார்ச் 31

கிளிநொச்சி பாரதிபுரம் செபஸ்தியார் கோயிலடிப் பகுதியில் உள்ள குடும்பங்கள் தமக்குத் தேவையான குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்தின் செபஸ்தியார் கோயிலடியினை அண்மித்த பகுதிகளில் உள்ள சுமார் அறுபதுக்கும் அதிக குடும்பங்கள் தங்களுக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அவ்வாறு குடிதண்ணீரைப் பெறுவதாயினும் தமது அயல்கிராமமான முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையோரக் கிராமமான செல்வபுரம் கிராமத்துக்கே செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் உள்ள கிணறுகள் ஆழமற்றுக் காணப்படுகின்றன. பொதுக் கிணறுகள் எவையும் அமைக்கப்படவில்லை. இதனால் தமக்கான குடிதண்ணீரைப் பெறமுடியாதுள்ளதாகத் தெரிவித்த இந்தப் பகுதி மக்கள் தமக்கான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியொன்றினை ஏற்படுத்தித் தரவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# தந்தை செல்வாவின் 113 ஆவது பிறந்த தினம்

வவுனியா, மார்ச் 31

மூதறிஞரும் தமிழர் தலைவருமாகிய தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 113 ஆவது ஜனன தினத்தையொட்டி வவுனியாவில் விசேட நிகழ்ச்சிகள் சில ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கும் வைபவம் நடைபெறவுள்ளது.

தந்தை செல்வா அறங்காவல் குழுவினர் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியாக் கிளைத் தலைவர் டேவிட் நாகநாதன் தெரிவித்தார்.

இதேவேளை தந்தை செல்வாவின் ஜனன தினத்தையொட்டி இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களிலும் இவ்வாறான வைபவங்கள் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# மடு யாத்திரிகர் 6 பேர் வாகன விபத்தில் காயம்

மன்னார், மார்ச் 31

மன்னார், செட்டிகுளம் வீதியில் மெனிக்பாமுக்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணிகள் வானொன்றும் சிறிய ரக லொறியொன்றும் மோதியதில் கத்தோலிக்க யாத்திரிகர்கள் ஆறுபேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் செட்டிகுளம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மடுயாத்திரைக்குச் சென்றுவிட்டு நீர்கொழும்புக்குத் திரும்பிக்கொண்டிருந்த பயணிகளே காயமுற்றுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
31 மார்ச் 2011 வியாழக்கிழமை

# முறையான சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்காவிடின் தொழிலாளர்களுக்கு தொழிற்சங்க நம்பிக்கை போய்விடும்

## பிரபா கணேசன் தெரிவிப்பு

நுவரெலியா,மார்ச் 31

புதிய கூட்டு ஒப்பந்தத்தின் படி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் விலைவாசி உயர்வுக்கேற்ப உயர்த்தப்பட வேண்டும் .

இம் முறை கூட்டு ஒப்பந்தத்தில் தமக்கு முறையான சம்பள உயர்வு வழங்கப்படாவிடின், தொழிற்சங்கங்களின் மீது இருக்கும் நம்பிக்கையை தொழிலாளர்கள் இழந்து விடுவார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன்.

இது தொடர்பில் அவர் கூறியவை வருமாறு:


உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் எனது வேட்பாளர்களான அசோக் கிரிஷாந்தன் ஹொரண நகரசபையிலும், புஷ்பகுமார் பாலிந்தநுவர பிரதேசசபையிலும் வெற்றியீட்டக் காரணமான எமது தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்வரும் கூட்டு ஒப்பந்தத்தில் தேயிலை, இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் குறைந்த பட்சம் 500 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்.

கடந்த கூட்டு ஒப்பந்தத்தின் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸை விமர்சித்து பல ஆர்ப்பாட்டங்கள் நடத்தியும் பலன் எதுவும் கிடைக்கவில்லை. மாறாக தொழிலாளர்கள் தொழிற்சங்க ரீதியாக பிரிந்து பலவீனமடைந்து போனார்கள்.

இந்தமுறை அதிக உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கம் என்ற ரீதியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் ஏனைய தொழிற்சங்கங்கள் பேச்சு நடத்தி சம்பள உயர்வுக்கு வழி வகுக்க வேண்டும்- என்றார்.

# கற்க மாணவர்கள் இல்லை; பாடசாலை மூடப்படும் நிலை



அம்பாறை,மார்ச் 31

அம்பாறை கல்வி வலயத்திற்குட்பட்ட தமிழ் மகா வித்தியாலயம், மாணவர்கள் எவரும் இல்லாமையால் மூடப்படும் நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தரம் ஒன்று தொடக்கம் 11 வரையான மாணவர்கள் கல்வி கற்ற இந்தப் பாடசாலையில் கடந்த 2009 ஒக்ரோபர் 29ஆம் திகதியிலிருந்து இன்று வரை எந்த ஒரு மாணவரும் பாடசாலைக்குச் சமுகமளிக்கவில்லை.

இதனால்,இந்தப் பாடசாலையின் அதிபரும் ஏனைய ஆசிரியர்களும் அருகிலுள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். மாணவர்கள் எவரும் இல்லாததனால் கட்டடங்களைச் சூழ புற்கள் வளர்ந்து காடாகக் காணப்படுவதுடன் மாணவர்கள் பாவித்த தளபாடங்கள், பாடசாலை உபகரணங்கள், நூலக புத்தகங்கள், விஞ்ஞான ஆய்வு கூட உபகரணங்கள் அனைத்தும் பழுதடையும் நிலையில் உள்ளன.

அம்பாறையில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்திலிருந்து ஏழு கிலோ மீற்றருக்கு அப்பால் இந்தப்பாடசாலை அமைந்திருப்பதாலேயே மாணவர்கள் கல்வியில் ஆர்வம் செலுத்தாமைக்கான காரணம் என மக்கள் தெரிவிக்கின்றனர். (204)

# பஸ்சில் தவறவிடப்பட்ட நகைகள் அவிசாவளைப் பொலிஸில் ஒப்படைப்பு

## உரிமையாளரைப் பெறுமாறு அறிவிப்பு

கொழும்பு- அவிசாவளை தனியார் பஸ் வண்டியொன்றில் தவற விடப்பட்டிருந்த பையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து தங்கச் சங்கிலி, வளையல்கள், காதணிகள் ஆகியவை பஸ்சாரதி கே.கமலால் அவிசாவளை தலைமையகப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பையின் உரிமையாளர் தகுந்த அத்தாட்சிகளுடன் அவிசாவளை தலைமையகப் பொலிஸாருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (204-5)

# மர்மமான முறையில் சிறுவன் உயிரிழப்பு

கினிகத்தேனை, அல்லித்தோட்டம், இரண்டாம் பிரிவில் நடைபெற்ற தேர்த் திருவிழாவின் போது தேருக்குப் பின்னால் சென்ற சிறுவர்களில் ஒருவன் மர்மமான முறையில் மரணமானதுடன், மேலும் மூன்று சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. டிப்பர் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட சப்பரத்தைத் தொடர்ந்து சென்ற சிறுவர்களே மயக்க நிலைக்கு உள்ளாகினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கரைச்சி கிழக்கு
பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்- வட்டக்கச்சி

பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பம் கோரல்

- பதவி:- பொதுமுகாமையாளர்
- பதவிக்குறியீட்டு எண்:- 165/88 படி 101/7
- சம்பள அளவுத்திட்டம்:- 11450- 14500
  145x10 -160x10

(கூ.வே.ஆ. சுற்றுநிருபம் 66/2006 இன் படி)
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதரபடிகளும் வழங்கப்படும்

பதவிக்கான தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணியாளர் 8ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் 3வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமைமட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் முகாமை மட்ட பதவி ஒன்றில் ஆறு வருடங்களுக் குக் குறையாத அனுபவம்

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் தராதரப்பத்திர (உயர்தர) சான்றிதழ்/ க.பொ.த (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் முகாமைமட்ட பதவி ஒன்றில் 8வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

- ★ வயதெல்லை:- 21- 50 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)
- ★ பிணைப்பணம்:- ரொக்கம் ரூபா 25000.00 உடன் ஆதனம் ரூபா 50000.00 செலுத்தவேண்டும். பதவி நிரந்தரமானது. இரண்டு வருடங்கள் தகுதிகாண் காலத்தைக் கொண்டதுமாகும்.

நிபந்தனைகள்:-

அ.கூட்டுறவுச்சங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சுசெய்து விண்ணப்பிக்கவேண்டும்.

ஆ.விண்ணப்பப்படிவத்துடன் கல்விச்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்பட வேண்டும். தகைமைச் சான்றிதழ் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மட்டும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்கவோ, நிராகரிக்கவோ, நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை சுயமாக தயாரித்து தலைவர், கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், வட்டக்கச்சி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் 15.04.2011க்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். மேற்படி விண்ணப்பத்தினை தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பொதுமுகாமையாளர் (101/7) பதவிக்கான விண்ணப்பம் எனக்குறிப்பிடல் வேண்டும்.

நெறியாளர்குழு ஆணைப்படி,
வே.சிவனேசன்,
தலைவர்.

கரைச்சி கிழக்கு
பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

(சி:577057)



ஓமந்தை- ஆறுமுகத்தான் புதுக்குளம்
அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

விகிர்தி வருடம் பங்குனி மாதம் 18 ஆம் நாள் (01.04.2011) வெள்ளிக்கிழமை சதய நட்சத்திரமும் மேட லக்கினமும் கூடிய காலை 7.15-8.45 வரையான சுபமுகூர்த்த வேளையில் முருகப் பெருமானுக்கு பாலஸ்தாபனம் நடைபெறும். அடியார்கள் கலந்து சிறப்பித்து முருகன் அருளைப் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக.

பிரதமகுரு:
வேதசிவாகம ஞான சாகரம், கண்ணகா பூஜா துரந்தகர்,
சக்திஸ்ரீ பரமசாமி குருமணி சண்முகராஜ சிவாச்சாரியார்
கோவையம்பதி பலானை கண்ணகை
அம்மன் தேவஸ்தான ஆதீன குரு, கோவையாதீனம்.

சாதகம்
ப. இராஜகோபாலசர்மா (நல்லூர்)
ஷ.கௌரி சங்கரசுவாமி சர்மா (கோவையாதீன இளவரசு)

அடியார்கள் திருப்பணி வேலைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

பரிபாலன சபையினர்.

(சி/577061) (38-26-19)

# காகித ஆலைக்கு 40 லட்சம் ரூபா நஷ்டம்

வாழைச்சேனை காகித ஆலைக்கு மாதாந்தம் 40 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுவதாக வர்த்தக முயற்சி அமைச்சர் தயாசிறி டி திசேராவிற்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் சங்கம், இலங்கை அரச கூட்டுத்தாபன பொது ஊழியர் சங்கம், வர்த்தக பொதுச்சேவை ஊழியர் சங்கம், ஜாதிக சேவா சங்கம் ஆகிய தொழிற்சங்கங்கள் இணைந்தே இந்த மகஜரை அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளன.

கடந்த 1997ஆம் ஆண்டு முதல், 61, 504 மில்லியன் ரூபாய் இந்தத் தொழிற்சாலை மூலம் அரசிற்கு நஷ்டம் ஏற் பட்டுள்ளது.

எமது ஆலையின் உடமைகள் தொடர்ச்சியாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை விற்பனை செய்யப்பட்ட உலோகப் பொருள்களின் பெறுமதி சுமார் 102 லட்சம் ரூபாவாகும். ஆலையின் 200 ஏக்கர் காணியில் வளர்க்கப்பட்டு வந்த மரங்கள் வெட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டு6 லட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆலையின் நிர்வாகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் துஷ்பிரயோக நடவடிக்கைகளை தடுத்து ஆலையை கட்டியெழுப்ப நடவடிக்கை மேற்கொள் வேண்டும்- என்றுஒன்றிணைந்த தொழிற்சங்கம் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (204)

உ

சௌள உபநயன பிரம்மோபதேச அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் விகிர்தி வருடம்
பங்குனி 18 ஆம் நாள் (01.04.2011) வெள்ளிக்கிழமை
காலை 8.52 முதல் 9.52 வரை உள்ள சுபமுகூர்த்தத்தில்
வறுத்தலை விளான் ஆதிமயிலிட்டி பெரும்பரப்புப்பிள்ளையார் ஆலய ஆதீனகுரு
சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்களின் பௌத்திரனும் ஆதிமயிலிட்டி
சிவபூதவராயர் ஆலய குரு சோமசுந்தரசர்மா தம்பதிகளின்
பௌத்திரனும் ஜெயராமசர்மா - சுசீபா தம்பதிகளின் குமாரனுமாகிய
சிரஞ்சீவி ஸ்ரீராமசர்மாவுக்கு
உபநயன பிரம்மோபதேசம் செய்து வைக்க திருவருள் கைகூடி இருப்பதால்
அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள் குடும்ப சகிதமாய் வருகை தந்து எமது
குமாரனை ஆசீர்வதிக்க வேண்டுகிறோம்.



இடம்: மாவைக் கந்தன் ஆலயம், மாவிட்டபுரம்

உபதேசக் குருமணி:
சிவஸ்ரீ தானு மகாதேவாக் குருக்கள்
(தர்மசாஸ்தா குருகுல அதிபர், காயத்திரி பீடம் , இணுவில்)

ஆசிவழங்குவோர்:
மாவை ஆதீனக்குரு மகாராஜா ஸ்ரீ
சண்முகராஜக்குருக்களால் வழங்கப்பட்ட ஆசியுடன்
மாவை ஆதீன இளவரசு சிவஸ்ரீ
ச.இரத்தினசபாபதிக்குருக்கள் தம்பதிகள்.

நல்வரவை நாடும்:
ஜெயராமசர்மா சுசீபா தம்பதிகள்,
தங்கை - ஸ்ரீரம்மியா.

'ஸ்ரீ அகம்', சுதுமலை அம்மன் கோவிலடி,மானிப்பாய்.
021 3008039, 0776510370, 0750427606

(2757) (38-19-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வை ஆணைக்குழு பரிந்துரை செய்ய வேண்டும்

## தமிழரசுக் கட்சி மூத்த உறுப்பினர் வலியுறுத்து

அம்பாறை, மார்ச் 31

"தமிழ்பேசும் இனம் செறிந்து வாழும் பிரதேசங்களை உள்ளடக்கியதாக, கௌரவமான சுயநிர்ணய உரிமையுடனான நிரந்தர சமாதானத்துக்கான தீர்வு தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதற்கான பரிந்துரையை நல்லிணக்க ஆணைக்குழு செய்யவேண்டும்".

இவ்வாறு தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினர் கு.ஏகாம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

கல்முனையில் நடைபெற்ற கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வில் சாட்சியம் அளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்தவை வருமாறு:

தந்தை செல்வாவின் பாசறையில் பயிற்றப்பட்டவன் நான், மூன்று இனங்கள் வாழும் எமது கல்முனைப் பிரதேசத்தில் இன ஒற்றுமைக்காகவும், சமாதானத்துக்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றேன்.

இந்த நாட்டில் யுத்தம் முடிவடைந்து விட்டது. மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்படக் கூடாது என்பதையே விரும்புகின்றேன்.

இந்த நாட்டில் ஐக்கிய தேசியக்கட்சியின் காலத்தில்தான் பிரச்சினை ஆரம்பித்தது. ஐக்கிய தேசியம் என்ற போர்வையில், அந்த மாயையில் தமிழ் மக்களும் இணைந்து செயற்பட்ட போதிலும் அதன் உள்த்திட்டம் வேறு விதமாகவே இருந்தது.

இந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாகவே கல்லோயாத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சேனநாயக்க சமுத்திரமும் அம்பாறை மாவட்டத்தில் கட்டப்பட்டது.

இவ்வாறான ஓர் அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தப் படும்போது இந்தப் பிரதேச மக்களுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும்.

கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தில் அன்று எங்கிருந்தோ வந்த பெரும்பான்மை இன மக்களுக்கு 40 குடியேற்றத் திட்டங்களும், தமிழ் பேசும் மக்களுக்குப் பத்துக்கு உட்பட்டவையாக அமைந்தன.

இந்த வஞ்சகத் திட்டத்தினால் அன்று பெரும்பான்மையினராகவிருந்த சிறுபான்மை மக்கள் இன்று இந்த மாவட்டத்தில் சிறுபான்மையினராக்கப்பட்டுள்ளோம்.

இத்தகைய வஞ்சகத் திட்டத்துடனேயே எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் ஆட்சிப் பீடமேறினார். நிலைமை இன்னும் தொடர்ந்த வண்ணமுள்ளது.

எனவேதான் இத்தகைய கசப்பான நிகழ்வுகள் தொடராது புரிந்துணர்வுடன் அனைவரும் செயற்படவேண்டும்.

நாட்டின் புரையோடிப்போன யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. மீண்டும் அவ்வாறான யுத்தம் ஆரம்பிக்கப்பட இடமளிக்கவும் முடியாது.

இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வு விடயத்தில் இருக்கும் இடம் விட்டு இல்லாத இடம்போகத் தேவையில்லை.

இதற்காக அமெரிக்காவிடமோ, இந்தியாவிடமோ நாம் சொல்லத் தேவையில்லை.

நமது நாட்டின் தெற்கிலும், மேற்கிலுமுள்ள சிங்கள அரசியல்வாதிகள், சிறுபான்மை இனத்திற்கான தீர்வு இதுதான் என நல்ல முடிவுக்கு வரவேண்டும்.

தமிழ் பேசும் இனம் செறிந்து வாழும் பிரதேசங்களை உள்ளடக்கியதாக ஐக்கிய இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமையுடனான நிரந்தர சமாதானத் தீர்வையே தமிழ் மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

இனவாதம் பேசுவதை குற்ற நடவடிக்கையாகக் கொள்ள வேண்டும், இது விடயத்தில் அரசிலுள்ள இனவாதம் பேசும் அமைச்சர்களைத் திருத்தினாலே போதுமானதாகும்.

சமாதானத்தைப் பாதிக்கும் செயல்களைச் செய்பவர்களைத் தண்டிக்கச் சட்டம் கொண்டு வரப்படலாமெனினும் முதலில் அரச அமைச்சர்களையே அதற்கு உட்படுத்தவேண்டும்- இவ்வாறு அவர் தெரிவித்தார். (204-30)

# மத்தியமாகாண வீதிகளைச் செப்பனிட 9 கோடி 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் பந்துல யாலேகம தகவல்

மாத்தளை, மார்ச் 31

அண்மையில் மத்திய மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவுகளால்சிதைவடைந்த பாதைகளை முற்றாகச் செப்பனிடுவதற்கு சுமார் 9 கோடி 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பந்துல யாலேகம தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மாத்தளை மாவட்டத்துக்கு 5 கோடி 25 லட்சம் ரூபாவும், நுவரெலியா மாவட்டத்துக்கு 2 கோடி 5 லட்சம் ரூபாவும், கண்டி மாவட்டத்துக்கு 2 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இடைப்பட்ட சிறு வீதிகளைத் திருத்த 3 கோடி 70 லட்சம் ரூபாவும், பாலங்கள், மதகுகள், வீதி தாழிறக்கம் போன்றவற்றைச் செப்பனிட ஒரு கோடி 50 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சகல வீதிகளும் மத்திய மாகாணத்தில் வீதி அபிவிருத்தி அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் பந்துல யாலேகம மேலும் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தின் வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணமாக வழங்குவதற்காக சுமார் பத்துகோடி ரூபா நிதியுதவி கிடைத் திருக்கின்றது -என நுவரெலியா மாவட்டச் செயலாளர் டீ.ஜீ.பி.குமாரசிரி தெரிவித்துள்ளார்.

# இடர் முகாமைத்துவ சபைக்கு எதிராக மக்கள் போராட்டம்



மட்டக்களப்பு, மார்ச் 31

கல்முனை இடர் முகாமைத்துவ சபைக்கு எதிராக ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இறைவெளிக்கண்ட மக்கள் அமைதி போராட்டத்தை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொண்டனர்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக அமைக் கப்பட்ட இந்த நிதியத்திற்கு கடந்த 2005ஆம் ஆண்டு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரிஸின் முயற்சியினால் 25 லட்சம் ரூபா பணம் பெற்றுக்கொடுக்கப்பட்டது. இந்தப்பணம் தனியார் வங்கியொன்றில் வைப்புச் செய்யப்பட்டது. தற்போது வட்டியும் சேர்த்து 43 லட்சம் ரூபா வங்கி வைப்பிலுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிதியினை இதுவரை மக்களுக்கு பகிந்துகொடுக்காமையினாலேயே இந்தமக்கள் அடையாள அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (204)

# கிழக்கு மாகாணக் கூட்டுறவுச் சங்கங்களில் புதிய அங்கத்தவர்களை இணைக்கத் திட்டம்

மட்டக்களப்பு,மார்ச் 31

கிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களில் 26,000 புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் எம்.சி.எம்.செரீப் .

இலங்கையில் கூட்டுறவுச் சட்டம் உருவாக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. இதனை ஒட்டி கிழக்கு மாகாண கூட்டுறவு தின விழாவினை சிறப்பாகக் கொண்டாட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. 482 கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் ஊடாகவும், ஏனைய ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவும் இந்தப் புதிய அங்கத்தவர்கள் உள்ளீர்க்கப்பட உள்ளார்கள்.

ஊக்கமுள்ள இளைஞர்கள் , யுவதிகள் கூட்டுறவு சங்கங்களில் இணைந்து கொண்டு கூட்டுறவின் உன்னத பண்புகளை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலம் இவர்களின் தலைமைத்துவப் பண்புகள் உயர்த்தப்படவுள்ளது.

இளைஞர், யுவதிகள் மட்டுமல்லாது கூட்டுறவுத் துறையில் ஆர்வம் உள்ள அனைவரும் தமது பிரதேசத்தினது அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்ய முடியும்- என்றார். (204)

# பெண் கைதிகளுக்கு பதுளைச் சிறையில் தனிக் கட்டடம்

பதுளை சிறைச்சாலையில் பெண் கைதிகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியொன்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

பதுளை சிறைச்சாலைக்கு பயணம் மேற்கொண்ட அமைச்சருக்கு மரியாதை அணிவகுப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பெண் கைதிகளுக்கான கட்டடத் தொகுதியை அமைச்சர் திறந்து வைத்தார்.

அமைச்சருடன் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் வீ.ஆர். சில்வா, அமைச்சின் செயலாளர் ஏ.திசாநாயக்க உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# பதுளையில் சோதனை; 14 சந்தேகநபர்கள் கைது

பதுளை நகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையின்போது பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து விதிகளை மீறிய 51 சாரதிகளுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சோதனையின்போது போதைப்பொருள் வைத்திருந்த ஐவரும், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த ஏழுபேரும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (204-5)

# துறை நீலாவணையில் சிரமதானப் பணி

கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவினரும், சுற்றுச்சூழல் பிரிவினரும், துறைநீலாவணை கிராம அபிவிருத்திச்சங்கங்களும் இணைந்து துறைநீலாவணைக்குச் செல்லும் பிரதான வீதியை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

துறைநீலாவணை கிராம் அபிவிருத்திச் சங்கங்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற சிரமதானப் பணியில், பொலிஸாரும் இணைந்து செயற்பட்டனர். பிரதான வீதியில் கழிவுப்பொருள் கொட்டுபவர்கள்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனப் பொதுமக்களிடம் கல்முனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முதலமைச்சரின் அதிகாரிகள் மீது தாக்குதல்

வெள்ளை வான் ஒன்றில் வந்த இனம் தெரியாத குழுவொன்று ஊவா மாகாண முதலமைச்சர் சசீந்ர ராஜபக்ஷவின் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை இரண்டு மணியளவில் தனமல்வில பிரதேசத்தில் நடந்துள்ளதென தனமல்விலப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (204-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதியர்கள் மன்றத்துக்கு தகுதியற்றோர் நியமனம்

## தொழிற்சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 31

1984ஆம் ஆண்டு தொழிற்சங்க ஏற்பாட்டின்படி அமைக்கப்பட்ட தாதியர் மன்றத்தின் அங்கத்தவர்களாக அதற்குத் தகுதியில்லாதவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். தகுதியுடைய சிலரை அரசு உதாசீனப்படுத்தியுள்ளது.

- இப்படி அரச தாதியர் தொழிற்சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய குற்றஞ்சாட்டுகிறார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு-

1984ஆம் ஆண்டு தொழிற்சங்க ஏற்பாட்டின்படி அமைக்கப்பட்ட தாதியர் மன்றத்தின் அங்கத்தவர்களாக அதற்குத் தகுதியில்லாதவர்களையே அரசு நியமித்திருக்கிறது. 19 அங்கத்தவர்களைக் கொண்ட தாதியர் மன்றத்துக்கு பொருத்தம் இல்லாதவர்கள் நியமிக்கப்பட்டால், தற்போதுள்ள நிலைமையே எதிர்காலத்திலும் தொடரும். தாதியர் சங்கத்தில் மொத்தமாக 19 அங்கத்தவர்கள் இருப்பார்கள். இந்த மன்றம் தாதியர் தொழிலைப் புரிவதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கிறது. தாதியர் சமூகத்தின் பிரச்சினைகளை இனங்காணவும், ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் இந்த சங்கத்திற்கு பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் 8 பேர் உத்தியோகபற்றற்ற உறுப்பினர்களாகவும், ஏனைய 11 பேர் தாதிய சமூகத்திலிருந்து தெரிவுசெய்யப்படுகிறவர்களாகவும் காணப்படுவார்கள். இவ்வாறு தெரிவு செய்யப்படுகிறவர்கள் தாதியர் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா தகைமையை கொண்டிருக்க வேண்டும். ஆனால், அரசு நியமித்திருக்கின்ற சிலருக்கு இந்தத் தகுதியில்லை. தகுதியுடையோரை அரசு உதாசீனப்படுத்தியுள்ளது- என்றார்.

# தென்பகுதி சுகாதார அதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கையில்

கொழும்பு, மார்ச் 31

மாத்தறை மாவட்ட பொது மக்கள் சுகாதார பரிசோகர்கள் மற்றும் குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் நேற்று முன்தினம் முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் ருபெல்லா தடுப்பூசி ஏற்றப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட மரணத்துக்குப் பொது மக்கள் சுகாதார பரிசோதகர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என இலங்கை பொது மக்கள் சுகாதார பரிசோதகர்கள் சங்கத் தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அனைத்து கண்காணிப்பு அதிகாரிகளையும் விடுத்து தனியே பொதுமக்கள் சுகா தாரப் பரிசோதகர்கள் மீது மாத்திரம் தென் மாகாண சுகாதார செய லாளர் குற்றம் சுமத்தி வருகின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் சுகாதார பரிசோதகர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை வாபஸ் பெறுமாறும், இல்லாவிடின் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்போம் எனவும் கடந்த 10 நாள்களுக்கு முன்பே தென் மாகாண சுகாதார செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது.

இதுவரை இந்தக் குற்றச்சாட்டை தென் மாகாண சுகாதார செயலாளர் வாபஸ் பெறவில்லை என்றும், இந்தப் பிரச்சினைக்கு 7 நாள்களுக்குள் தீர்வினை வழங்கத் தவறினால் போராட்டம் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்படும் என்று உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

## தவறிப் போன ஒன்றரை லட்சம் ரூபா பணத்தை உரிமையாளரிடம் ஒப்படைத்த ஓட்டோ சாரதி

கொழும்பு, மார்ச் 31

சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பணம் மற்றும் 16 லட்சம் ரூபா பெறுமதியான காசோலையுடன் தித்தெனிய, பஹத்கம பஸ்தரிப்பிடத்தில் பையொன்றைக் கண்டெடுத்த ஓட்டோச் சாரதி ஒருவர் பொலிஸாரின் உதவியுடன் அதனை உரிமையாளரிடம் சேர்த்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

தித்தெனிய பண்டாரவத்த வாசியான டி.எம்.விமலதாஸ (51) என்பவரே இந்த நேர்மையான செயலைப் புரிந்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியவை வருமாறு:-

கடந்த திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் நண்பருடன் பஹத்கம சந்திக்கு வந்தேன். அங்கு பஸ் தரிப்பிடத்தில் பையொன்று கிடந்தது. அதில் ஒரு கட்டுப் பணமும் காசோலையும் இருந்தன. உடனடியாக அதனைப் பொலிஸில் ஒப்படைத்தேன்.

பையைச் சோதனையிட்ட பொலிஸார் அது வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமானது என்றும் பஸ்ஸில் தவறவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். உடனடியாக அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரவழைத்த பொலிஸார் எமக்கு முன்னிலையில் அவரிடம் பணப்பையை ஒப்படைத்தனர் - என்றார். (204-5)

## புதிய தலைவர்கள்...



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக உள்ளூராட்சி மன்றத் தலைவர் மற்றும் பிரதித் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர்.

# குடிசன மதிப்பீட்டுப் பணி இந்தவாரம் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 31

இந்த வருடம் மேற்கொள்ளப்படும் குடிசன மற்றும் குடியிருப்புக் கணக்கெடுப்புக்கான குடியிருப்புகளைப் பட்டியலிடும் நடவடிக்கைகள் இந்த வாரம் ஆரம்பமாகவுள்ளது என்று குடிசன மதிப்பீடு மற்றும் கணக்கெடுப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் எச்.ஆர்.குணசேகர தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், கிராம சேவையாளர்கள் ஊடாக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வரைபடம் தயாரிக்கும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. குடியிருப்புகளை கணக்கிடும்போது கட்டடங்களுக்கான இலக்கங்கள் வழங்கப்பட்டு, அவற்றை ஆவணங்களில் பதிவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர்கள் அடுத்த மாதம் முதல் கணக்கெடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பழுதடைந்த மீன் பணிஸ் உண்ட சிறுமி சுகவீனமுற்று வைத்தியசாலையில்

கொழும்பு, மார்ச் 31

ஹோட்டலில் விற்கப்பட்ட பழுதடைந்த மீன் பணிஸ் ஒன்றை உண்ட ஆறு வயதுச் சிறுமி சுகவீனமுற்று மிகிந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த பணிஸை விற்பனை செய்த மிகிந்தலை ஹோட்டலின் முகாமையாளர் கைது செய்யப்பட்டு அனுராதபுரம் பதில் நீதிவான் அமரசிறி ஹெட்டிகேயின் முன் ஆஜர் செய்யப்பட்ட பின் அவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த பணிஸைத் தயாரித்த பேக்கரி முத்திரையிட்டு மூடப்பட்டதாகப் பொதுசன சுகாதார அதிகாரிகள் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தனர். (204-5)

# இலங்கையரின் நலன் கருதி வேலைவாய்ப்புப் பணியகம்

## பஹ்ரைனில் திறந்து வைப்பு

கொழும்பு, மார்ச் 31

பஹ்ரைனில் இருக்கும் இலங்கையர்களின் நலன்களைப் பாதுகாக்க அங்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணிமனையின் புதிய அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது என்று தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பஹ்ரைனில் தொழில் புரியும் இலங்கையர்களின் நலன்களை இதுவரை குவைத்தில் இருக்கும் இலங்கைத் தூதரகமே கவனித்து வந்தது. அதன் காரணமாக அங்கிருக்கும் இலங்கையர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்தனர்.

அண்மையில் நூற்றுக்கணக்கான இலங்கைப் பணியாளர்கள் பஹ்ரைனில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலைமை காரணமாக அங்கிருந்து திருப்பியனுப்பப்பட்டிருந்தனர்.

இவ்வாறான நிலைமைகளில் அங்குள்ள இலங்கையர்களுக்கு உதவிகள் வழங்கும் பொருட்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கிளையொன்று பஹ்ரைனில் திறக்கப்படவுள்ளது. (அ)

# நவீன சந்தைக்குரிய பணம் பட்டப் பகலில் கொள்ளை

## கொள்ளையரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயம்

கொழும்பு, மார்ச் 31

நவீன சந்தைகளில் சேகரிக்கப்பட்ட 50 லட்சம் ரூபா பணத்தை வங்கியில் வைப்புச் செய்வதற்காக எடுத்துக் சென்ற பணம் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டது. பணத்தை எடுத்துச் சென்ற வான் மீது பிலியந்தலை - கெஸ்பாவ பகுதியில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட பின் அந்தப் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணி அளவில் இந்தத் துணிகரக் கொள்ளை நடந்துள்ளது - என பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

[illegible] லுள்ள நவீனசந்தை ஒன்றுக்கு முன்னாள் வான் நிறுத்தப்பட்டு அதிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் நவீனசந்தைக்குள் சென்று பணம் நிறைந்த பையுடன் திரும்பிய சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வான் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இதன்போது வானில் இருந்த மற்றொரு பாதுகாப்பு உத்தியோகத்தரும், சாரதியும் படுகாயமுற்றனர். பாதுகாப்பு உத்தியோகத்தரிடமிருந்த துப்பாக்கியை கொள்ளையர்கள் பறித்துக் கொண்டனர்.

தனியார் பாதுகாப்பு நிறுவனத்தைச் சேர்ந்த இந்த வான் அந்தப் பிரதேசத்திலுள்ள நவீன சந்தைகளில் சேரும் பணத்தை வார நாள்களில் சேகரித்து வங்கிகளில் வைப்புச் செய்வது வழக்கம். அவ்வாறு பணம் சேகரிக்க நிறுத்தப்பட்டபோதே கொள்ளை நடந்துள்ளது.

கொள்ளையர்கள் விட்டுச் சென்ற சிவப்பு நிற 'ஹெல்மட்' ஒன்றை சம்பவ இடத்தில் இருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஹெல்மட் பொலிஸ் மோப்பநாயால் முகரப்பட்ட பின் அது நவீன சந்தையின் வளவுக்குள் 10 மீற்றர் தூரம் வரை சென்ற பின் நின்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (204-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கல்விச்சாலைக் காட்சிகள்...




அல்வாய் மனோகரா முன்பள்ளியில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது மனோகரா சனசமூக நிலையத் தலைவர் முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கிறார். (253)



யாழ்.சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப்போட்டியின் போது அணிநடையில் ஈடுபடும் மாணவர்கள் .(313)



வல்வை.சிதம்பராக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டியில் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் விருந்தினர் அழைத்துவரப் படுகின்றனர். (313)



அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்துக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் லண்டன் வாழ் நலன்விரும்பி செ.புவனேந்திரன் ஆகியோரின் நிதியுதவியுடன் போட்டோப்பிரதி இயந்திரம் ஒன்று வழங்கப்படுகிறது. (72)



யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ விக்னேஸ்வரா முன்பள்ளியில் அண்மையில் பேச்சுத் திறன்காணும்வைபவம் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பாலர் கல்விக் கழகத்தின் செயலாளர் திருமதி இரட்ணகோபால் வெற்றி பெற்ற மாணவிக்கு பரிசில் வழங்குகிறார்.
(201-313)

# பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த மனையியல் கலையை நவீனப்படுத்த வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

பெண்களின் பொருளாதார மேம்பாட்டை வலுப்படுத்துவதுடன் சிக்கனமான வாழ்க்கைத் தரத்தையும் தரக்கூடியது மனையியல் கலை என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

வடமாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினர் நடத்திய தையல் மனையியல் அழகியல் பொருள்கள் கண்காட்சி அடைக்கல மாதா கோயில் தையல் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துரைகளை வழங்கும் போது -

பெண்களின் கலைத் திறன்களைவெளிக்காட்டும் இத்தகைய நிகழ்வுகள் பாராட்டுக்குரியன. மனையியல் சார்ந்த கலைகளை பெண்கள் தெரிந்திருக்கவேண்டியது அவசியமாகும்.

பெண்களின் கல்விக்குப் பின்னரான இந்தப் பயிற்சி கூடிய எவு வருமானத்தையும் வாழ்க்கைச் சிக்கனத்தையும் பேணுவதற்கு உதவுகின்றது. இதனை சரியான வழியில் கற்று வெளிநாட்டு ஏற்றுமதியில் பொருள்களையும் பயன்படுத்தி மனையியல் கலையை மேம்படுத்தல் அவசியமாகும்.

பெண்களின் அழகு - கலை, கலாசாரம், பண்பாடு இவற்றில் தங்கியிருப்பதால் கிராமப் புறங்களில் அழகியல் கலைக்கு மதிப்பு இல்லாவிடினும் நகர்புறத்தில் இவற்றில் நாட்டமுடையோர் அதிகம். எனவே குடும்பப் பெண்கள் இத்தகைய கலைகளை தெரிந்து வைத்திருப்பது சிறந்தது - என்றார்.

யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். அடைக்கல மாதா கோயில் பங்குத் தந்தை றெஜி ராஜேஸ்வரன் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். (ஐ-313)

# மாணவர்கள் சிறந்த நிலையை அடைய சமய விழுமியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

மாணவர்கள் சிறந்த கல்வி ஆற்றலுக்கும் நற்பழக்க வழக்கங்களுக்கும் இந்துக் கலாசார முறைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

இதன் மூலம் சிறந்த அறிவுடன் கூடிய மாணவர்களாகத் திகழ முடியும். இவ்வாறு தெரிவித்தார் சின்மயா மிஷனைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைதன்யா சுவாமிகள்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் 'கடவுள் இருக்கிறாரா? இல்லையா?' என்னும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்தும் போது-

கடவுள் என்பவர் எப்போதும் ஒருவரே. அவரின் பெயர்கள் வடிவங்கள் போன்றவையே பல்வேறாக உள்ளன.

இந்துக் கலாசார முறைகள் விழுமியங்களான அதிகாலையில் நித்திரை விட்டு எழும்புதல், கடவுளை வணங்குதல் இவற்றை மாணவர்கள் பின்பற்ற வேண்டியது அவசியமானதாகும்.

ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை உச்சரிக்கும் போது ஆயுள் அதிகரிப்பதுடன் நோய்களும் எம்மை அண்டாது. ஞாபக சக்தியும் அதிகரிக்கும் அதனால் மூச்சை நன்றாக உள் இழுத்து மூன்று முறை மந்திரத்தை உச்சரித்து இறைவனை வணங்க வேண்டும்.

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் ஓம் நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரத்தை கண்களை நன்றாக மூடி ஐந்து நிமிடம் உச்சரித்தாலும் சிறந்தது. இவ்வாறு மந்திரங்களை உச்சரித்து இறை வழிபாடுகளில் ஈடுபடும்போது மனம் ஒருநிலைப் படும்.

இந்து தர்மத்தின்படி எவர் ஒருவர் காயத்திரி மந்திரத்தை உச்சரிக்கிறாரோ அவரின் உள்ளம் பிரகாசம் அடைவதுடன் புத்தியையும் கூர்மைப்படுத்திக் கொள்கின்றார்.

மாணவர்கள் இவ்வாறான மந்திரங்களை உச்சரித்து இறைவனை வழிபடுவதால் நன்மைகளைப் பெற்றுக் கொள்வார்கள்.

அத்துடன் தாய் தந்தையரை வணங்குவதும் மாணவர்களின் சிறந்த பழக்க வழக்கங்கள் ஆகும். பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களை மதித்து நடக்க வேண்டும். இவர்களின் ஆசிர்வாதங்களே கல்வியை மேலும் சிறப்படையச் செய்யும்.

தொலைக் காட்சியைப் பார்க்கும் போது எவ்வாறு புலன்களைக் கட்டுப்படுத்தி அதில் மூழ்கிப் போகின்றோமோ அது போல் தான் தியானமும் எமது மனதை ஒருநிலைப்படுத்துவதற்கு சிறந்த சாதனமாகும் - என்றார். (ம-313)

# தமிழ்ப் பற்றுடன் கூடிய கருத்துகள் மாணவருக்கு போதிக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

தமிழ்ப் பற்றுடன் கூடிய கருத்துக்களை முன்பள்ளிகளில் மாணவர்களுக்கு கற்பிக்கப்படவேண்டியது அவசியமானதாகும்.

இதன் மூலம் வளர்ந்து கொண்டிருக்கும் இளம் சமுதாயத்தினர் ஆக்கபூர்வதான கல்விச் செயற்பாடுகளில் முன்னணி வகிப்பதற்கும் ஏனைய துறைகளில் முன்னேற்றமடைவதற்கும் உறுதுணையாக இருக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் பாலர் கல்விக் கழகத்தின் தலைவர் எஸ்.பி.காசிநாதன்.

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அண்மையில் இடம்பெற்ற ஞானக்குழந்தைகள் முன்பள்ளிகளின் பேச்சுத்திறன் காணும் வைபவத்தில் உரை நிகழ்த்தும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது: -

இளம் சமுதாயத்தினர் தமது செயற்றிறன்களை விருத்தி செய்யும் வகையில் பல்வேறு தொழில் நுட்ப சாதனங்கள் பெருகிவிட்டன. சிறுபிள்ளைகளுக்கு கற்றல் செயற்பாடுகளை வழங்கும் போது அவற்றை தெளிவான முறையில் வழங்க வேண்டும்.

தற்போது ஆங்கில மொழியின் அவசியம் அதிகரித்துள்ளமையால் பெற்றோர்கள் அதிகளவு ஆங்கிலம் கற்பிக்கும் முன்பள்ளிகளை நாடுகின்றார்கள்.

இதில் ஓரளவேனும் நன்மைகள் இருந்தாலும் தமிழ் மொழி எமது தாய் மொழிஎன்பதை மறந்து விடலாகாது. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பார்கள் இவற்றை பெற்றோர்களும் ஆசிரியர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.அத்துடன் முன்பள்ளியில் பிள்ளைகளின் வரவில் பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

முன்பள்ளியில் பழகும் வரவு முறைகளைத்தான் அவர்கள் மேலதிக கற்றலுக்காகச் செல்லும் பாடசாலைகளிலும் பின்பற்றுவார்கள்.மழலைப் பருவத்தில் சிறுவர்களிடம் இருக்கும் திறமைகள், செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

முன்பள்ளிகளில் நடைபெறும் இவ்வாறான பேச்சுப் போட்டி, விளையாட்டுப்போட்டி, கலை நிகழ்ச்சிகள் மாணவர்களை சந்தோசப்படுத்துவதுடன் அவர்களின் திறமையான வளர்ச்சிப் பாதைக்கு வழிகாட்டிகளாகவும் அமையும் - என்றார் .(ம-313)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:**
சிலர் வழியில் பெருமைப்படும் உதவிகள் கிடைக் கலாம். அதிகமான வேலைப்பளு இருந்தாலும், சோர்வு அடையாமல் அனைத்தையும் செய்து முடிப் பீர்கள். வாகனங்களில் செல்லும் போது அதிக வேகத்தைத் தவிர்க்க வேண்டும். மற்றவர்களிடம் உங்களின் பெருமையைக் காட்டுவீர்கள்.

**இடபம்:**
பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக் கலாம். வழக்கு விவகாரங்களில் எதிர்பார்த்த திருப்பங் களைக் காணலாம். உடன் பணிபுரிவோரை விமர்சனம் செய்வதைத் தவிர்க்கவும். மற்றவர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பு ஒன்று உங்களுக்குக் கிடைக்கலாம். பக்தி நாட்டம் கூடும்.

**மிதுனம்:**
உங்களின் திறமைக்கு சவால்விடும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். எங்காவது செல்லும் போது வாகனங்கள் நடுவழியில் பழுதாகி தொந்தரவு கொடுக்கலாம். எதிர்பார்த்த பணவரவு கள் வருவது தள்ளிப் போகலாம். நன்றி மறந்த சிலரை எண்ணி வருந்து வீர்கள்.

**கடகம்:**
தொட்ட காரியங்கள் துளிர் விட்டு வளரும் நாள். உங்களை உதாசீனம் செய்தவர்களே பாராட்டும் நிலைமைக்கு ஆளாகுவீர்கள். அயலாருடன் ஏற்பட்ட மோதல் தீர்விற்கு வரும். முகவர் தொழில் புரிவோர் அலைச் சல்களுக்கு ஆள்படலாம். பெண்கள் பிறந்த வீட்டின் உதவி களைப் பெறலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும் நாள்.

**சிங்கம்:**
தாய் வழி உறவுகளின் உதவிகளைப் பெறலாம். பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. லட்சியங்களை நிறைவேற்ற துடிப்போடு செயற்படுவீர்கள். மாற்று மத நண்பர்கள் மூலம் முக்கியமான காரியம் ஒன்றை சாதித்துக் கொள்வீர்கள். சிலரிடம் பொய் பேசி உங்களுக்கு வேண்டிய காரியத்தைச் சாதிப்பீர்கள். விருந்து, விசேடம் உண்டு.

**கன்னி:**
திட்டமிட்ட வேலையை மட்டுமின்றி, திட்டமிடாத வேலையையும் செய்ய நேரிடலாம். அரசியல் வாதிகள் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். தந்தை உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். வெளியிடங்களுக்கு செல்லும் போது, சில பொருள்களை எடுத்துச் செல்ல மறந்து அவதிகளுக்கு ஆளாகலாம்.

**துலாம்:**
ஓய்வெடுக்கக் கூட நேரமில்லாமல் அலைச்சல் களைச் சந்திக்கலாம். உறவினர்கள் சிலருக்காக பிணை கொடுக்க நேரிடலாம். நிதியுதவியை எதிர் பார்த்தவர்கள் அது தொடர்பான நல்ல செய்தியை கேட்கலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையே சச்சரவுகள் உண்டாகலாம். உங்களைப் பயன்படுத்தி நண்பர்கள் சிலர் காரியம் சாதிக்கலாம்.

**விருச்சிகம்:**
வியாபாரிகள் விழிப்புடன் செயற்பட்டு லாபத்தை அதிகரிப்பர். சக ஊழியர்கள் தங்களின் சொந்த விடயங்களை உங்களிடம் சொல்லி ஆலோசனை கேட்பர். கணவன், மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். சேமித்த பணம் ஒன்றை புதிய வகையில் முதலீடு செய்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**தனுசு:**
குடும்ப உறுப்பினர்களின் மனம் அறிந்து செயற் படுவீர்கள். இளம்வயது நண்பர் ஒருவரை சந்திக்க நேரிடலாம். வெளிநாட்டு தொடர்புடையவர்கள் நல்ல செய்திகளை கேட்கலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். நீங்கள் நல்ல எண்ணத்துடன் சொன்ன யோசனைகளை சிலர் தவறாகப் புரிந்து கொள்ளலாம். கனவுத் தொல்லையுண்டு.

**மகரம்:**
பழைய அனுபவங்களை நினைத்துப் பார்ப்பீர்கள். மாமன், மைத்துனர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறலாம். நண்பர்கள் உதவியுடன் சில காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே வந்து சேரலாம்.

**கும்பம்:**
குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். தொழில் விடயங்களில் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். உடன் பிறப்புக்களுடன் வாக்குவாதங் களைத் தவிர்க்கவும். விலகிச் சென்ற சொந்தங்கள் உங்களின் உதவி நாடி வரலாம். உங்களுக்கு தெரியாத சில தகவல்களை மற்றவர்கள் சொல்லலாம்.

**மீனம்:**
சிறிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில் பெரியளவில் பலன் கிடைக்கலாம். சில நாள்களுக்கு முன்னர் சந்திக்க நினைத்த ஒருவரை இன்று திடீரென சந்திக்கலாம். நண்பர் களுடன் சேர்ந்து கூட்டாக சில காரியங்களைச் செய்வீர்கள். ஆசைப்பட்ட பொருள் ஒன்றை அதிக விலை கொடுத்தாவது வாங்குவீர்கள். இனிய அனுபவம் பெறலாம்.

# போர்க் ... விசாரணை... சர்வதே... கட்டமை... அவசி...

AMNESTY INTERNATIONAL

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் 16ஆவது கூட்டத் தொடர் கடந்த வாரம் முடிவுக்கு வந்துவிட்டது. எதிர்பார்க்கப் பட்டபடி இலங்கைக்கு எதிராக எந்தப் பிரேரணைகளும் கொண்டுவரப்பட வில்லை.

இந்த நிலையில், 2009ஆம் ஆண்டு இலங் கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற் றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புச் சொல்லும் முறைமை ஏற்படுத்தப்பட வேண்டும் என அனைத்துலக மன்னிப்புச்சபை மீண்டும் அழைப்பு விடுத்திருக்கிறது.

இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற் றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது இந்த விடயத்தில் வகிக்கும் பங்கு என்ன என்பது தொடர்பான தனது கவனயீர்ப் பினை மன்னிப்புச் சபையின் ஜொலன்டா பொஸ் ரர் எழுப்பியிருக்கிறார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறுப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கவனத்தில் எடுப்பதற்கோ அன்றி இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பான பொறுப்புச் சொல்லும் முறைமை யினை ஏற்படுத்துவதற்கோ ஐ.நாவின் மனித உரி மைச் சபை தவறிவிட்டது என அவர் கூறுகிறார்.

''ஆணைக்குழுவினால் இதுவரை முன்வைக் கப்பட்டிருக்கும் பரிந்துரைகள் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றா கவே இருக்கிறது. இதுபோன்ற பரிந்துரைகள் போரின் போது காணாமற்போன உறவுகளை மக்கள் தேடிக் கண்டுபிடிப்பதற்குத்தான் வழிசெய்யுமேயன்றி மனித உரிமை மீறல்களிலும் போர்க்குற்றங்களி லும் ஈடுபட்டனர் என்று குற்றம் சுமத்தப்படுபவர் கள் யாரோ அவர்களை நீதியின் முன் நிறுத்துவ தற்கு ஒருபோதும் உதவப்போவதில்லை'' என்று பொஸ்ரர் கூறுகிறார்.

இலங்கை அரசு அமைத்திருக்கும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது பொறுப்புச்சொல்லும் முறைமையினை முறையாக முன்னெடுக்குமா என்ற கேள்விகள் எழுப்பப் படுவது இதுதான் முதல்முறையன்று.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் அரசு பல் வேறு விடயங்களில் தவறான தகவல்களை வழங் கியிருந்தது. அவை தொடர்பில் இலங்கை அரசிடம் விளக்கம் கோரும் துணிவு அது அமைத்திருக்கும் இந்த நல்லிண்ணக ஆணைக்குழுவிடம் இல்லை என்றார் அவர்.

எடுத்துக்காட்டாக, 2009ஆம் ஆண்டின் முதற் பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வெறும் ஒரு லட்சம் பொதுமக்கள்தான் இருக்கிறார்கள் என்று அரசு அடித்துக் கூறியது. எவ்வாறிருப்பினும் போரின் இறுதியில் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்த மக்களின் தொகை 3 லட்சத்துக்கும் மேல் என்ற உண்மை வெளிப்பட் டது. இதற்கான விளக்கம் என்ன என்பதையும் இது வரை இந்த ஆணைக்குழு அரசிடம் கேட்கவில்லை.

பொறுப்புச்சொல்லும் முறைமையினை முறை யாகக் கையாளவில்லை என்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மீது குற்றம் சுமத்தப்பட்டாலும், அது வடக்கு - கிழக்கில் குறிப்பட்டுக் கூறக்கூடிய வெற்றியினைக் கண்டிருக்கிறது எனலாம். வடக்கு-கிழக்குப் பகுதி யில் இடம்பெற்ற இந்த ஆணைக்குழுவின் அமர்வு களில் பலர் தாமாக முன்வந்து மீறல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பான சாட்சியங்களை வழங்கியிருக்கிறார்கள்.

எவ்வாறிருப்பனும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகளவில் திரண்டுவந்து சாட் சியமளிப்பதற்கு முண்டியடித்த மக்களைக் கையாள முடியாததொரு நிலையில், அதற்கான போதிய வசதிகள் இல்லாமலேயே இந்த ஆணைக்குழு இருந்தது.

''முறைப்பாடுகளை முன்வைப்பதற்காக பெருந் திரளான மக்கள் திரண்டுவந்த நிலையில் வடக்கில் இடம்பெற்ற அமர்வுகளின் போது ஆணைக்குழு நிலைமையினைக் கட்டுப்படுத்த முடியாமல் திண் டாடியது. பெருமளவிலான மக்களைக் கையாளு வதற்குத் தேவையான போதிய வசதி வாய்ப்புக்களை அது கொண்டிருக்கவில்லை'' என பொஸ்ரர்

## ஏமாற்றிய கனேடிய ஆளும் கட்சி

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றம் தொடர்பான அனைத்துலக விசாரணை அவசியம் என்ற முன்மொழிவொன்று கனேடிய நாடாளுமன்றத்தில் சகல கட்சிகளின் ஆதரவுடனும் நிறைவேற்றப்பட இருந்தது. எனினும் கடைசி நேரத்தில் ஆளும் கட்சி ஏமாற்றியதால் அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இது தொடர்பாக கனேடியத் தமிழ்க் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதிய ஜனநாயகக்கட்சி எனப்படும் கட்சி தமிழர்களின் விவகாரங்களில் மிகுந்த அக்கறை யுள்ளதொரு கட்சியாகும். இந்தக் கட்சியின் வெளிவிவகாரக் கொள்கைகளுக்கான பொறுப் பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் பீற்றர் யூலியன், இலங்கைப் போர்க் குற்றங்கள் தொடர் பில் அனைத்துலக விசாரணை வேண்டும் என்று கோரும் முன்மொழிவை நாடாளுமன்றில் சமர்ப்பபப்பதற்கான வழிவகைகளைச் செய்தார்.

இவ்வாறான தனிநபர் முன்மொழிவு நிறைவேற்றப்பட வேண்டுமானால் அதற்கு நாடாளு மன்றில் உள்ள சகல கட்சிகளின் ஏகோபித்த ஆதரவு கிடைக்க வேண்டும். அப்போது மட் டுமே அதனை நிறைவேற்றுவது சாத்தியப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க் குற்ற ணைக்கு தேசச் மைப்பு வசியம்

TY NAL

விளக்குகிறார்.

நாட்டில் உண்மையான நல்லிணக்கம் ஏற்படுவதைத்தான் இலங்கை அரசு விரும்புகிறதெனில் அது சாட்சியங்களைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான, முறையான வழிவகையினைக் கையாள வேண்டும். போரின் இறுதிநாள்களில் பெரும் துன்பத்திற்கு ஆளாகிநின்று மன அழுத்தத்திற்கு உள்ளாகியிருக்கும் மக்களின் துன்ப துயரங்கள் கேட்டு அறியப்படுவதோடு அவற்றைப் போக்குவதற்கான முனைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என பொஸ்ரர் ஆலோசனை கூறுகிறார்.

இதுபோல இலங்கை அமைத்திருக்கும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவில் குறைபாடுகள் காணப்படும் நிலையில், குற்றங்களுக்கு யாரையும் பொறுப்பாளியாக்க முடியாது என்று மன்னிப்புச் சபை கருதுகிறது. இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறுப்படும் உரிமை மீறல்களுக்குப் பொறுப்புச்சொல்லும் முறைமையினைக் கவனிப்பதற்கு உள்நாட்டுக் கட்டமைப்பு போதுமானதாக இல்லை எனக் கருதும் மன்னிப்புச் சபை, குறிப்பட்ட இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அனைத்துலகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் எனத் திட்டவட்டமாகப் பரிந்துரைக்கிறது.

சாதாரணமான சூழலில் உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் முனைப்புகளுக்குத்தான் மன்னிப்புச் சபை ஆதரவை வழங்குவது வழமை எனக் கூறும் இந்த அனைத்துலக அமைப்பு, இலங்கை விடயத்தில் அது அமைத்திருக்கும் ஆணைக்குழுவிடம் வேறுபட்ட குறைபாடுகள் காணப்படுவதால் அனைத்துலக பொறுப்புச் சொல்லும் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதே பொருத்தமானது என வாதிடுகிறது.

ஜூன் 2010 ஐ.நா செயலாளர் நாயகத்தினால் அமைக்கப்பட்ட நிபுணர்கள் குழுவானது குறிப்பிட்ட இந்தப் பணியை மேற்கொள்வதற்காகவே நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவானது தனது கண்டறிதல்களை அடிப்படையாகக் கொண்ட இறுதி அறிக்கையை வெளியிடுவதற்குத் தேவையான காலம் முடிவுக்கு வந்துவிட்டமை அனைவரும் அறிந்ததே. விரைவில் தங்களது பரிந்துரைகளை உள்ளடக்கிய இறுதி அறிக்கையை நிபுணர்கள் குழு சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பிட்ட இந்த அறிக்கையானது பொது மக்கள் பார்வைக்காக வெளியிடப்படவேண்டும் என அனைத்துலக மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்திருக்கின்றபோதும், இந்த அறிக்கை இது போல் ஊடகங்கள் வாயிலாக வெளியிடப்படுமா என்ற சந்தேகம் நிலவுகிறது. பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவினது கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு அமைய ஐ.நாவின் மனித உரிமைச் சபை செயலாற்றவேண்டும் என்றும் மன்னிப்புச்சபை கோரியிருக்கிறது.

''மனித உரிமைச் சபை மற்றும் ஐ.நாவினது ஏனைய கட்டமைப்புகள் வல்லுநர்கள் குழுவின் கண்டறிதல்களை ஆழமாக ஆராய்வதோடு நீதியினையும், உண்மையினையும் ஆற்றுப்படுத்தலையும் ஏற்படுத்துவதற்காகப் போராடும் இலங்கைக்கு அவை உதவவேண்டும்'' என மன்னிப்புச்சபை கூறியிருக்கிறது.

ஜெனீவாவில் இடம்பெற்றுவந்த ஐ.நா. மனித உரிமைச் சபையினது 16ஆவது கூட்டத்தொடர் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில், இலங்கைப் போரின் இறுதி நாள்களில் இடம்பெற்றவை எவையோ அவற்றுக்கான பொறுப்புச் சொல்லும் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்யடியதும் இன்னமும் முதன்மையானதொரு அம்சமாகவே காணப்படுகிறது.

குறிப்பிட்ட இந்த விடயம் தொடர்பாக ஜெனீவா கூட்டத்தொடரில் விலாவாரியாகக் கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால் இதுவிடயத்தில் ஐ.நா. முதன்மையான பங்கினை வகிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி அனைத்துலக உரிமை அமைப்புகள் தொடர் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

*(நன்றி: புதினப் பலகை)*

அதன் பிரகாரம் நாடாளுமன்றில் உள்ள எதிர்க்கட்சிகளான லிபரல்கட்சியினர், புளக் கியூபெக்குவா கட்சியினர் மற்றும் இரண்டு சுயேச்சை உறுப்பினர்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்ற புதிய ஜனநாயகக் கட்சி, ஆளும் கட்சியின் ஆதரவையும் நாடியிருந்தது.

ஆளும் கன்சவேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பற்றிக் பிரவுன் தனது முழு ஆதரவை இதற்கு வழங்கியதுடன், கட்சியிடமும் இது தொடர்பாக அனுமதியை நாடியிருந்தார். கட்சியும் முதலில் முழுச் சம்மதத்தைத் தந்ததாகவும், வெளிவிவகார அமைச்சும் இந்த முன்மொழிவுக்கு சாதகமான சமிஞ்ஞை காட்டியதாகவும் பற்றிக் பிரவுன் புதிய ஜனநாயகக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பீற்றர் யூலியனிற்குத் தெரிவித்திருந்தார்.

இதன் பிரகாரம் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னதாக இந்த முன்மொழிவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்காக புதிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீற்றர் யூலியன் தெரிவித்தபோது கொன்சர்வேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற அவைத் தலைவரான ஜோன் பயர்ட் தமது கட்சி இதற்கு ஆதரவல்ல எனக் கூறி இந்த முன்மொழிவை தோல்வியுறச்செய்தார்.

தமிழர்களின் ஆதரவுச் சக்தி போலச் செயற்படும் மேற்படி ஆளும் கட்சியின் நாடாளுமன்ற அவைத்தலைவரே இவ்வாறு செயற்பட்டது கொன்சவேட்டிவ் அரசின் நேர்மைத் தன்மையினையும் அது தமிழ் மக்களின் விவகாரங்களில் போலியாகவே செயற்படுகிறது என்பதையும் காட்டி நின்றது - என்றுள்ளது.

## குடும்பக் கூட்டம் நடத்துவது உண்டா?



வெற்றிகரமான நிறுவனங்களில் எல்லாம் தினம் தோறும் காலையும் மாலையும் நிர்வாகிகள் கூட்டம் நடைபெறும்... தெரியுமா? நிறுவனத்தில் செய்ய வேண்டிய கடமைகள் பற்றிக் காலை யிலும், எப்படி வேலை நடக்கிறது என்பது பற்றி மாலையிலும் கூடிப் பொறுப்பா ளர்கள் கலந்துரையாடி அவ்வப் போதே பிரச்சினைகளை தீர்த்து விடுவார்கள். அப்படி குடும்பத்தில் பிரச்சினைகள் வரா மல் இருக்க குடும்பக் கூட்டம் நடத்துவது உண்டா? உண்டு என்றால் நீங்கள் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பிள்ளைக்ள் பல பெற்றோருக்குப் பெரும் பிரச்சினையாக இருப்பதுக்கு காரணமே கூடித் கலந்து பேசாமையே. முன்பெல்லாம் பள்ளியில் படித்த பிள்ளைகளின் பிரச்சினைகளைப் போல பத்து, இருபது மடங்கு சிக்கல்கள் இன்றைய பிள்ளைகளுக்கு இருக்கிறது.

இந்தப் பிரச்சினைகள் அவர்கள் யாரிடம் சொல்லி ஆறுதல் பெற முடியும்? வகுப்பில் பத்துப் பேர் ஒன்று சேர்ந்து கொண்டு எமது வீட்டுப் பிள்ளையை ஒதுக்கி வைத்திருப்பார்கள். அல்லது வகுப்பறையில் தவறு செய்த மாணவனைத் தண்டிக்காமல் முட்டாள் ஆசிரியர் எமது பிள்ளையைத் தண்டித்திருப்பார். எமது வீட்டுப் பிள்ளையின் சுவையான உணவு அடிக்கடி பிறரால் திருடப்பட்டு அவர்களுக்குப் பட்டினி பரிசளிக்கப்பட்டிருக்கும். அதுபோல முள் பள்ளி படிக்கும் போதே இவனுடைய நண்பி இன்னொருவன் பக்கத்தில் உட்கார்ந்த அதிர்ச்சி அவனை மிகவும் பாதித்திருக்கும்.

இந்த வருத்தங்களைப் பிள்ளைகள் மனதிலிருந்து அப்புறப்படுத்த பெற்றோர்கள் கலந்துரையாட வேண்டும். ஆரம்பத்தில் நீங்கள் அவர்கள் விடையத்தில் தலையிடுவாதாக நினைத்து எரித்து விழுவார்கள் ஆனால் போகப் போகத் தங்கள் சுமைகளைத் தாங்கும் சுமையான சுமை தாங்கி பெற்றோர் என்று நேசிப்பார்கள். நம்புவார்கள்.

இதற்கு மாறாக மனதிலேயே தங்கள் குழப்பமான துயரங்களைப் புதைக்கும் பிள்ளைகள் தோல் நோய், ஆஸ்துமா, திக்குவாய் போன்ற நோய்ற்ற நோய்களால் பாதிக்கப்படுவார்கள். பிள்ளைக்ளிடம் பேசுவதன் மூலமே பிரச்சினைகள் குறையும். அதற்குப் பொறுமை, திறமை இரண்டும் உள்ள பெற்றோர்களே நல்ல பெற்றோர்கள். இன்றும் சில வீடுகளில் பிள்ளைகள் பேசவந்தால், தன் பள்ளிக்கூடம், ஆசிரியர், சக மாணவர் பற்றிப்பேசும் போது பொறுமை இழந்து சிலர், ''சனியனே... வாயை மூடு'' என்று எரிந்து விழுவார்கள். இவர்கள் குழந்தை இல்லாதவர்களைகவே மரித்திருக்கலாம்.

குடும்பக் கூட்டம் அடிக்கடி நடத்தி மனம் விட்டுப் பேசிப் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்ப்பது சிறந்த குடும்ப அமைப்பு. வாய்ப்புள்ள வீடுகளில் குறைந்த பட்சம் இரவு உணவையாவது சேர்ந்து உண்ணுவது சிறந்தது. அப்படி உண்ணும் போதும் தொலைக்காட்சியை ஓடவிட்டால் சேர்ந்து உண்ணும் நோக்கம் கெட்டுவிடும். எனவே தற்காலிகமாகத் தொலைக்காட்சியைக் கொன்று போட்டுவிட்டு சேர்ந்து சாப்பிடுங்கள். அல்லது அது உங்களைக் கொன்றுவிடும்.

கடவுள் நம்பிக்கை உள்ள வீடுகளில் இறைவழிபாட்டைக் குடும்பமே சேர்ந்து செய்வது மிக மிக அவசியம். சேர்ந்து செபித்தால், பாடினால், மந்திரங்கள் சொன்னால் ஒரு வகையான் பிரிக்க முடியாத அன்பு அந்தக் குழுவிற்கே உண்டாகும். எனவே, குடும்பத்தில் உள்ளவர்கள் சேர்ந்து சாமி கும்பிடுவது, கண்டிப்பாகக் குடும்ப உறவுகளை நன்கு பலப்படுத்தும். ஒருவருக்கும் வீட்டில் உடல் நலம் இல்லாத போது அவருக்காக எல்லோரும் பிரார்த்தனை செய்தால் பாசம், பந்தம் பலப்படும். பிறந்த நாள், திருமண நாள் இவற்றைத் தனித்தனியாகக் கொண்டாடுவதைக் கூடத் தவிர்த்துவிட்டு குடும்ப நாள் என்று வசதியான ஒரு நாளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாடுவது ஒற்றுமையை வளர்க்கும்.

குழந்தைகளுக்குச் சில விடயங்களை நூறு நூறு தடவை சொன்னாலும் பதியாது. ஆனால் சில விடயங்களை நாம் சொல்லிக் கொடுக்காமலேயே சட்டென்று பிடித்துக் கொள்ளுவார்கள். எனவே பெற்றோர் எதையும் சொல்லிக் கொடுப்பதைவிட நடந்து காடுவதே சரியான வழி. ''பொய் சொல்லக் கூடாது'' ஏன்று பிள்ளைக்குப் போதிப்பார் அப்பா. சிறிது நேரத்தில் வேண்டாத நபர் ஒருவர் தொலை பேசி அழைப்பினை ஏற்படுத்திய போது பிள்ளை தொலை பேசியை எடுத்து அப்பா தொலைபேசி அழைப்பு என்று தொலைபேசியை நீட்டினால், அதன்போது அப்பா ''நான் இல்லை என்று சொல்'' என்று சைகையினால் காட்டுவார். பிள்ளை குழம்பி விடாதா? பொய் சொல்லக் கூடாது என்று கூறிய அப்பா தனக்குத் தேவை ஏற்படும் போது பொய் சொல்லாம் என்று நடந்து காட்டும் போது குழந்தை என்ன கற்றுக் கொள்ளும். பொய் சொல்லக்கூடாது என்று பிறருக்குக் கற்பிக்க வேண்டும்; ஆனால் நாம் பொய் சொல்லலாம் என்றே மனதில் பதித்துக் கொள்ளும்.

''குழந்தைகள் கற்றுக் கொள்ள விரும்புவார்கள். ஆனால் பிறர் கற்பிப்பதை விரும்புவதே இல்லை'' என்ற முரண்பாடான செய்தி உங்களுக்குத் தெரியுமா? இவர்கள் தாங்களாகக் கற்றுக் கொள்ளுவார்கள் ஆனால் நீங்கள் கற்பிக்க நினைத்தால் தோற்றுப் போவீர்கள். எதை எப்படி யாரிடமிருந்து கற்றுக் கொள்ளுவார்கள் என்பது சொல்ல முடியாத விடயம். பிறந்த சில மாதங்களிலேயே பெரிய எழுத்துக்களில் எழுதி மீண்டும் மீண்டும் காட்டிக் காட்டிப் பெயரை உச்சரித்தால் எழுத்தும் , ஒலியும் ஒன்றாகக் குழந்தைகளுக்குப் புரிகிறது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். முயற்சி, பயிற்சி மூலம் எந்தப் பிள்ளையும் பெரிய திறமைசாலியாக உருவாக்க முடியும். இதற்கு நேரமே இல்லை என்கிற பெற்றோர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்திருக்கலாம்.

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**இளையோர் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பது**

**குணமா?** ☐ **பணமா?** ☐

பெயர்: ..........................................................
முகவரி: ..........................................................
..........................................................
அடையாள அட்டை இல..........................................................

உங்கள் தீர்ப்புக்களை 28.04.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# இளவல்கள் வட்டம்

## தமிழ்மொழி

தமிழ் என்ற மூன்றெழுத்தில்
தத்துவங்கள் பல தந்தாய்
அவனியில் வந்துதித்த
முதல் மொழியும் நீதானே
வரண்ட என் நிலமெங்கும்
பல போகம் காண
உயிரெழுத்து என்ற பயிரை
விதைத்தவள் நீ
இன்று பல்கலை என்ற கூடத்தில்
பரிட்சைப் பொருளாய் நான்
நீ என்ற தமிழ் மொழியுடன்

செல்வி யசிந்தா பாலச்சந்திரன்,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

## அன்பு

மழைக்குத் தெரியுதடி
மண்ணின் வாசனை
வண்டுக்குத் தெரியுதடி
தேனின் இனிமை
குருவிக்குத் தெரியுதடி
குஞ்சின் குதூகலம்
கன்றுக்குத் தெரியுதடி
தாயின் தாய்மடி
பூமிக்குத் தெரியுதடி
பூகம்பத்தின் வருகை
ஏனடி தெரியவில்லை- நான்
உன் மீது கொண்ட அன்பு

சிவஞானம் துஸ்ஷாலினி,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## ஆதங்கம்

புத்திகெட்ட புதுநாகரிகப் புத்திசாலிகள் புறப்பட்டு விட்டனர்
புது நாகரிகம் படைப்பதற்காய்
நாவாய் படைநடத்திய நாதியற்ற இனம்தானே
சங்கிலியன் ஆண்ட சங்கறுத்த பூமிதானே
மானம் கெட்ட மங்கையவர் தேசம்தானே
சங்கத் தமிழன் இவன் சாதித்ததென்ன இங்கே
வாருங்கள் நாமும் சேர்ந்துகொள்வோம்
வங்கத் தமிழன் அவன் வக்கறுந்து நிற்கிறான்
பேரம் பேசி விற்போம் தமிழ்ப் பண்பாட்டை
ஆரிய குளத்தடியில் அரங்கேற்றம் நடக்கிறதாம்
நாளும் ஒரு செய்தி நாளிதழில் வருகிறதே
நமக்கென்ன என்றிருந்து நாவினை அடக்கிவிட்டு
தலை கவிழச் செய்திடுவோம் தமிழனின் தனித்துவத்தை
வாருங்கள் நாமும் கோவேறு கழுதைகள்தான்

-சங்கவி

## தொலைக்காட்சி

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்த தொலைக்காட்சி நமக்கு எந்தளவுக்குத் தீமையாக இருக்கின்றதோ அதே அளவுக்கு நன்மையும் உள்ளது. ஏதோ ஒரு நாட்டில் நடக்கும் விடயங்களை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. சிறுவர்களுக்கான அறிவு கலந்த விடயத்தையும் எமக்குத் தருகின்றது.

இத்தகைய நன்மையைத் தரும் தொலைக்காட்சி எமது வாழ்க்கையில் பின்னிப் பிணைந்துள்ளது. எமது வாழ்க்கையிலும் இது நண்பனாக இருக்கின்றது. இந்த தொலைக்காட்சியில் நாம் பல நன்மைகளையும், பயன்களையும் அறிந்து அறிவினை வளர்த்து எமது வாழ்க்கையை செம்மையாக்கிக் கொள்ளலாம்.

தொலைக்காட்சியில் நடக்கும் தொடர்களைப் பார்ப்பதைக் குறைத்து அதில் இருந்து கிடைக்கும் பொது அறிவு சம்பந்தமான நிகழ்ச்சிகளைப் பார்த்து தேவையான விடயங்களைப் பெற்றுத் தேவையில்லாத விடயங்களை வெளியேற்றியும் எமது அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

ஆகவே தொலைக்காட்சியினால் ஏற்படும் பயன்களை நாம் அறிந்து அவற்றினால் எமது அறிவினை வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த 21 ஆம் நூற்றாண்டினை நாம் செம்மையாக்கிக்கொள்ள எமது அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். எனவே தொலைக்காட்சியால் ஏற்படும் நன்மைகளைப் பெற்று பயன் அடைவோமாக.

(முற்றும்)

[illegible],
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.




## எமது சமுதாயத்தில் இளம் பெண்களின் உரிமைகள்

### மறுக்கப்படுகின்றன

எமது சமுதாயத்தில் இளம் பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் வருகின்றன. சமையல் அறையையே தஞ்சமென இருந்த பெண்கள் இன்று ஆண்களுக்குச் சரி நிகராகச் சகல துறைகளிலும் தடம் பதித்துள்ளனர். குடும்பத்திலும் சரி வேலைத்தளங்களிலும் சரி உரிமைகள் தட்டிப் பறிக்கப்படுகின்றன.

குடும்பம் என்ற ரீதியில் எடுத்துக்கொண்டால் கண்டிப்பு என்ற போர்வையில் பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய சிறிய சிறிய உரிமைகள் கூட நசுக்கப்பட்டு வருகின்றன. அதனை எதிர்த்துக் கேள்வி கேட்டால் ''வாயை மூடு'' ''பெரிய ஜான்ஸி ராணி'' கண்ணகி பரம்பரை என்று பட்டப் பெயர்கள் தாமாகவே வந்து ஒட்டிக்கொள்ளும்.

பெண்கள் அரச அதிபராகவும் பிரதேச செயலர்களாகவும் பதவி வகிப்பதால் மட்டும் பெண் உரிமை மதிக்கப்படுவதாக அர்த்தமா? பெண்கள் என்றால் தம் இஷ்டம்போல் ஆட்டி வைக்கலாம் என்ற குறுகிய எண்ணமே தவிர இதன் மூலம் பெண் உரிமை மதிக்கப்பட்டு வருவது என்பது காரணமல்ல (அவர்களிடம் சென்று உங்கள் உரிமைகள் மதிக்கப்படுகின்றதா? என்று கேட்டால் நிலைமை புரியும்) ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளில் வெளிவரும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைப் படிக்கும் போது தெரிகின்றது. பெண்களுக்கான உரிமைகள் எவ்வளவு நசுக்கப்படுகின்றது என்று.

கணவன் இறந்தபின் அவன் கட்டிய தாலியுடன் பூவையும் பொட்டையும் பறிப்பதே பெண்களுக்கான உரிமை மிதிக்கப்படுவதற்கான பலமான ஆதாரம் ஆகும். கணவன் கட்டிய தாலியை அவன் மரணத்தின் பின் கழட்டுகின்றனர். அதில் நியாயம் இருக்கின்றது. ஆனால் திருமணத்துக்கு முன் வைத்த பூவையும் பொட்டையும் பறிப்பது எவ்வகையில் நியாயமாகும். பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். ஆனால் இங்கே சமுதாயம் இரங்க வேண்டாம் இறங்கிப் பெண்களுக்குரிய உரிமைகளை மதித்தால் அதுவே போதும்.

ஆ.வதனா, கரவெட்டி.

### மதிக்கப்படுகின்றன

எமது சமுதாயத்தில் பெண்கள் வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமாகக் கருதப்படுகிறார்கள். அதுவும் பெண்கள் உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கிறாள். குடும்பத்தில் தலைவியாகவும் ஒரு பிள்ளைக்கு அன்புத்தாயாகவும் தம்பதிகளுக்கு அன்புப் புதல்வியாகவும் பரிண மிக்கிறாள் அந்தவகையில் நோக்கினால் ஓர் இளம் பெண் சமூகத்தில் மக்களால் மதிப்புக் கொடுக்கப்பட வேண்டுமென்பது எனது தாழ்மையான கருத்து. ஒரு குடும்ப வாழ்க்கையில் பெண் என்பவள் எவ்வளவு குடும்பச்சுமையைத் தாங்குகிறாள், பிள்ளையைப் பெற்றெடுத்துப் பேணிவளர்க்கிறாள். தன் பசி போக்காது குழந்தையைத் தன் உதிரத்தால் பாலூட்டித்தூங்க வைக்கிறாள்.

இப்படியே பல காரணங்களையும் கூறிக்கொண்டே போகலாம். இப்படியான இளம் பெண்களை நாம் நடமாடும் பேசும் தெய்வமாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையல்லவா? இவ்வளவு அம்சங்களுக்குமுரிய இளம் பெண்களுக்கு நாம் கோயில் கட்டிக் கும்பிடவேண்டுமல்லவா?

தற்காலத்தில் இளம்பெண்களே அரசசேவை நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் மேலதிகாரிகளாக நியமிக்கப்பட்டு அவர்களின் சேவைக்கும் தலைமைத்துவத்துக்கும் சிறந்த கௌரவத்தை கொடுத்துப் பணிகள் நடைபெறுகின்றன.

இதனால் இளம்பெண்கள் சிறந்த பட்டதாரிகளாகச் சித்தியடைந்து டாக்டர்களாக மருத்துவத்துறையில் சாதனைகள் புரிகிறார்கள். ஆகவே சமுதாயத்தில் இளம்பெண்களின் உரிமைகள் மதிக்கப்படுகின்றன.

ஞான துவாரகா,
மானிப்பாய் வீதி, கைதடி மேற்கு.

## விவாதமேடை

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே

**இளையோரின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பது குணமா? பணமா?**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :-..........................................................
முகவரி :-..........................................................
..........................................................
.......................... ..........................
திகதி கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி அமைப்பின் மூன்றாவது இடத்தில் உரும்பிராய் பட்டினசபை

தொகுப்பு: ஞான ஆதவன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

நீர்வேலி கிராம சபையின் ஆள்புல எல்லையாக கிழக்கே தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிராந்தியம் வடக்கே புத்தூர் கிராமசபை, தெற்கே கோப்பாய் கிராமசபை, மேற்கே வலி. தெற்குப் பிரதேசசபை எனக் கொள்ளப்பட்ட போதும் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நீர்வேலி பிரதேச ஆள் புலத்தை சேர்ந்த உரும்பிராய் ஊரெழு பிரதேசங்களை உள்ளடக்கி உரும்பிராய் பட்டினசபை உருவாக்கபட் டதை அடுத்து மேற்கு எல்லை யாக உரும்பிராய் பட்டின சபைப் பிரதேசம் விளங்குகிறது.

முன்னர் நீர்வேலி கிராம சபையாகவும் தற்போது நீர்வேலி உப அலுவலகமாகவும் விளங்கும் அமைப்பின் அலுவலகம் யாழ்-பருத்தித்துறை வீதிக்கு மேற்குப் பக்கமாக நீர்வேலி கந்தசாமி கோயிலுக்கு அருகில் அமைந்துள்ளது. நீர்வேலி கிராம சபை செயற்பட்ட காலப்பகுதியில் கிராம அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு பல்வேறு முன்னோடித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கிராம சபையின் தலைவர்கள் தொடர்பாக நீர்வேலியைச் சேர்ந்த "நீர்வை மணி" ஐயா தெரிவிக்கையில் அத்தியார் அருணாசலம், பண்டிதர். இராசையா, எஸ்.அப்புத்துரை கே.வி.கன கரத்தினம், எஸ். நடராசா ஆகியோர் தலைவர்களாகக் காலத்துக்குக் காலம் தெரிவு




செய்யப்பட்டுப் பணியாற்றியதாகத் தெரியவருகிறது. எட்டு வட்டாரப் பிரிவுகளில் இருந்தும் பிரதி நிதிகள் தெரிவு செய்யப் பட்டனர்.

### கோப்பாய் கிராமசபை

கோப்பாய் கிராம சபையின் ஆள் புலத்தின் எல்லையாகக் கிழக்கே தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிராந்தியம், தெற்கே நல்லூர்ப் பிரதேச சபையின் பிராந்தியம், வடக்கே நீர்வேலி கிராம சபை, மேற்கே வலி.தெற்கு பிரதேசசபை என்பன கொள்ளப்படுகின்றன. கோப்பாய் கிராம சபையின் அலுவலகம் தற்போது பிரதேசசபையின் அலுவலகமாக யாழ்ப்பாணம்- பருத்தித் துறை பிரதான வீதியில் வீதிக்குக் கீழக்குப் புறமாக கோப்பாய் மாதா கோயிலுக்கு அண்மையில் செயற்பட்டு வருகின்றது. கோப்பாய் கிராமசபை வரியிருப்பாளர்களின் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வந்தது. இது 15 வட்டாரங்களைக் கொண்டது.

கோப்பாய் கிராம சபையின் செயற்பாட்டுக் காலப்பகுதியில் தலைவர்களாகக் கடமை புரிந்தவர்கள் தொடர்பாக கோப்பாயைச் சேர்ந்த எஸ்.அருளாண்டேஸ்வரன் தகவல் தெரிவிக்கையில், எஸ்.அருளம்பலம், எஸ்.சம்பந்தன், கே.வி.சண்முகநாதன், எஸ்.பரமானந்தராசா ஆகியோர் காலத்துக்குக் காலம் செயற்பட்டு வந்ததாகத் தெரிவித்தார்.

### உரும்பிராய் பட்டின சபை

வலி.கிழக்கு பிரதேச சபைப் பிரிவின் உள்ளூராட்சி அமைப்பு முறையில் மூன்றாவது இடத்தில் உள்ள உரும்பிராய்ப் பட்டின சபை அமைப்பு 1970 களில் உருவாக்கப்பட்டது. நீர்வேலி கிராம சபைப் பிரிவில் உள்ள 'உரும் பிராய்-ஊரெழு' பிரதேசத்தை உள்ளடக்கிய புதிய நிர்வாகக் கட்டமைப்பாக உரும்பிராய் பட்டினசபை அமைப்பு உருவாக்கப்பட்டது. குறித்த பிரதேசம் 8 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு பட்டின சபைக்கு மக்கள் பிரதி நிதிகளாக 8 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

பட்டினசபையில் பணியாற்றிய ரி.சின்னத்துரை அவர்கள் தெரிவித்த தகவலின்படி எஸ்.பத்மராசா, வி.ரி.செல்லத்துரை ஆகியோர் தலைவர்களாகப் பணியாற்றியதாக அறியப்படுகின்றது. பட்டினசபையின் அலு வலகம் யாழ்ப்பாணம்-பலாலி வீதியில் செயற்பட்டு வந்தது. ஊரெழு-உரும்பிராய் பகுதி பட்டின சபையாகத் தரமுயர்த்தப்பட்டு நகரமயமாக்கலுக்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளூராட்சி அமைப்பு முறையில் கிராமசபை, பட்டின சபை முறை ஒழிக்கப்பட்டு மாவட்டசபை உருவாக்கப்பட்ட காலப் பகுதியில் ஆணையாளர்களின் நிர்வாகத்தின்கீழ் இவை கொண்டுவரப்பட்டன. வலி. கிழக்கு உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய கே.கேதீஸ்வரன் ஆணையாளராகவும் கடமையாற்றினார்.

மாவட்ட சபை அமைப்பு முறை மாற்றப்பட்டுப் பிரதேச சபை அமைப்பின் கீழ் தேர்தல் நடத்தப்பட்டு 21 பிரதிநிதிகளைக் கொண்ட வலி.கிழக்குப் பிரதேசபை செயற்பட்டபோது அதன் தலைவராக பூ.குணசிங்கம் தெரிவுசெய்யப்பட்டார்.

பிரதேச சபையின் பதவிக் காலம் முடிவடைந்ததை அடுத்து மீண்டும் இதுவரை தேர்தல் நடத்தப்படவில்லை. தற்பொழுது நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது செயலாளர் பதவி மூலம்நிர்வாகம் நடைபெறுகின்றது. வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர்களாக எம்.இராசரத்தினம்,கே. குணசிங்கம், எஸ்.குகதாஸன், எஸ்.வெங்கடாசலம், இ.இராசதுரை, க.நடராசா ஆகியோர் கடமையாற்றியுள்ளனர். தற்போது திருமதி ஜெயந்தா சோமராஜ் செயலாளராகக் கடமை புரிகின்றார்.இந்த வருடம் புதிதாகக் கடமைப் பொறுப்பையேற்றுள்ள திருமதி ஜெயந்தி சோமராஜ் கள நிலைக்கு ஏற்ப தனது கடமைப் பொறுப்புக்களைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறார். உள்ளூராட்சி அமைப்பு முறைமையே நாளாந்த வாழ்க்கை நிகழ்வுகளுடன் தொடர்பானது. இந்த வகையில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயற்பாடுகள் புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது வரியிறுப்பாளர்களின் பெருவிருப்பாகும்.

(முற்றும்)

# இளைஞர்களின் வளர்ச்சிக்கு உதவி வரும் மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம்



(கடந்தவாரத் தொடர்ச்சி)

இடைக்காடு மற்றும் அதனோடு சேர்ந்த அயல் கிராமங்களின் கல்வி மற்றும் வாழ்வாதார மேம்பாடு என்பனவற்றுக்குத் தனது பங்களிப்பை யதார்த்த பூர்வமாக வழங்கிவரும் மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையச்சேவை முன்னெடுப்புக்கள் பல்வேறு வகையிலும் பாராட்டப்படுகின்றன. ஏனைய சனசமூக நிலையங்களுக்கு முன்மாதிரியாக உள்ளன. சனசமூக நிலையத்தின் கீழ் தளத்தில் பொது மண்ட பமும் வாசகர்சாலையும் மேற்தளத்தில் நூலகமும் செயற்பட்டு வருகின்றன.

மாணிக்க இடைக்காடர் நூலகம் வலிகிழக்குப் பிரதேசத்தில் முதலாவது இடத்தைப் பெறத்தக்க வகையில் செயற்பட்டு வருகின்றது. இதற்கான சான்றாதாரங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. நூலகத்துக்குப் பொறுப்பாக நூலகர் ஒருவர் நியமிக்கப்பட்டு வாரத்தில் முழு நாளும் நூலகம் முழு அளவில் செயற்பட்டு வருகின்றது. ஆயிரக் கணக்கான தமிழ் ஆங்கில நூல்களைக் கொண்டுள்ள இந்த நூலகம் உடன் உதவும் பகுதி, இரவல் கொடுக்கும் பகுதி என்பனவற்றைக் கொண்டிருப்பதோடு ஒரு பிரதேச சபையின் நூலகத்துக்கு ஒப்பான முறையில் தனது முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

நூலகத்தை மக்கள் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற உயர் நோக்குடன் 1991 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நூலகத்தில் உள்ள சகல நூல்களின் விவரங்களையும் சஞ்சிகைகளின் விவரங்களையும் உள்ளடக்கி சனசமூக நிலையக் கையேடு வெளியிடப்பட்டது. அதன் பிரதிகள் சகல உறுப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ளன. அந்தக் கையேட்டில் எதிர்காலத்தில் புதிய நூல்களின் பெயர் விவரங்களைக் குறித்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் தொடர் வெற்றுப் பக்கங்கள் பல இணைப்புச் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் சனசமூக நிலையத்தின் சேவை முன்னெடுப்புக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தக் கையேடு பி-5 தாள் அளவு கொண்டது. 500 பக்கங்கள் வரையில் உள்ளன. இத்தகைய ஒரு வழிகாட்டல் கையேடு சாதாரண சனசமூக நிலையங்களினால் வெளியிடப்பட்டதில்லை இதுவும் எடுத்துக் காட்டான முன்னெடுப்பாகும்.

1962ஆம் ஆண்டு மூன்று தினங்கள் தொட[illegible] குறள் மாநாடு நட[illegible] 1971 ஆம் ஆண்டு கிராமத்தில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தை அடுத்து சனசமூக நிலையம் மேற்கொண்ட துரித நடவடிக்கையினால் பொது மக்களுக்கான பல்வேறு நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு மக்கள் இயல்பு வாழ்க்கை நிலைக்குக் கொண்டு வரப்பட்டனர். 1978 சூறாவளியின்போது பொதுமக்களுக்கு நிவாரண முன்னெடுப்புக்களை மேற்கொண்டது. விவசாய அறுவடையின்போது "காவல் தொண்டர் அணி" மூலம் விவசாய அறுவடைகளை பாதுகாக்கும் பணியை மேற் கொண்டு வருகின்றது.

1977 ஆம் ஆண்டு முதல் நிலையத்தின் காப்பாளராக நா.மாணிக்க இடைக்காடர் செயற்பட்டு வந்துள்ளார். இவரின் அக்கறை மிக்க முயற்சியினால் "சர்வலோக தர்ஷணம்" தாபனத்தின் நிதி அனுசரணையுடன் பயிற்சி பெற்ற 8 தொழில்நுட்பவியலாளர்களைக் கொண்ட தொழிற் கூடம் நிறுவப்பட்டு விவசாயிகளுக்கான கருவி சாதனங்கள் என்ற வகையில் மண்வெட்டி தயாரித்தல், கத்தி மற்றும் கருவி சாதனங்கள் உளி, நீர் பம்பி, தெளி கருவிகள் [illegible] மேற் கொள்ளப்பட்டன. நியாயமான கட்டணத்தில் மேற்கொள்ளப் பட்டமையால் 2500 இற்கும் மேற்பட்ட விவ சாயிகள் இதன் மூலம் பயன் அடைந்தனர். இதன் மூலம் தொண்டமனாறு, வசாவிளான் மற்றும் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதியிலும் வாழும் ஆயிரக் கணக்கானோர் பயன் பெற்றனர். பிற்காலத்தில் இதன்பணி முன்னெடுப்புக்கள் காலச் சூழலால் தடைப்பட்டன.

செல்வச் சந்நிதி முருகன் ஆலய உற்சவ காலங்களில் நிலையம் அடியார்களுக்கு பல்வேறு வசதி வாய்ப்புக்கள் ஏற்பாடு செய்து வழங்கி வருகின்றது. விளையாட்டுத் துறையில் நிலையம் மேற்கொண்ட முன்னெடுப்பு மூலம் விளையாட்டு ரீதியாக அணிகள் உருவாக்கப்பட்டு இளைஞர்களின் உடல் உளவளர்ச்சிக்கு உதவி வருகின்றது. தாய், சேய் நல மருத்துவ சேவை, சிறுவர் முதியோர்களுக்கான நல சேவைகளையும் சனசமூக நிலையம் சுகாதார மற்றும் மருத்துவ சேவையினரின் ஆலோசனை பெற்று மேற்கொண்டு வருகின்றது. நிலையத்தின் சகோதர அமைப்புக்களாக விவசாய இளைஞர் சங்கம், விளையாட்டுக் கழகம், தொண்டர் சபை, புத்தாக்கக் குழு, இளைஞர் விவசாயக் கழகம், தரிசிக்கும் மருந்தகம் என்பன செயற்பட்டு வருகினறன.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற மகுட வாக்கியத்திற்கு அமைய சன சமூக நிலையத்தின் சகல பணி முன்னெடுப்புக்களும் நிலைய எல்லைப் பரப்பின் பல்வேறுபட்ட வளர்ச்சியை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நிலையத்தின் பணிகள் மேலும் தொடர்வதாக.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் கணிதபாட ஆசிரியர் வீ.ஜெயக்குமார் அவர்களின் அன்புத் தந்தை

**செல்லத்தம்பி வீரசிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி விப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடை யப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
பழைய மாணவர்சங்கம்

(2752) (41,20,25)

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லதம்பி சிசிலியா

(ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர்)



271, பலாலி வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி நல்லதம்பி சிசிலியா (26.03.2011) சனிக் கிழமை இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும் மகேந்திரன் (குஞ்சன் – பிரான்ஸ்), பவானி (பவா –பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் நித்தியானந்தனின் (பிரான்ஸ்) மாமியும் உதிஷ்ரா, கிஷோர், அக்ஷ்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் கணக்க மரத்தடி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

271, பலாலி வீதி,
ஆலடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

மகேந்திரன் (குஞ்சன் - மகன்),
திருமதி நித்தியானந்தன்
பவானி (பவா - மகள்).

## நன்கொடை நிதிவழங்கல்

2010ஆம் ஆண்டுக்கான சனசமூக நிலையங் களுக்கான நன்கொடைகளை தற்சமயம் பெறமுடி யும் என்று சாவகச்சேரி பிரதேசசபை அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-122)

## தவறி விட்டன

இல.18, ஸ்கந்தபுரம் கிளிநொச்சி பாலச்சந்திரன் ஜெயவாணி [837532744V] என்னும் இலக்கமுடைய தே.அ.அட்டை மற்றும் இரா ணுவ நலன்புரி முகாம் அடையாள அட்டை என்பன முகமாலைக்கும் கொக்குவிலுக்குமிடையில் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர் கள் கீழ்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும்.

இல.74, சுப்ரமோ' டை வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 0214900991

## வீடு வாடகைக்குண்டு

இல.189, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் சகல வசதிகளுடன் அலுவலக பாவனைக்கு வீடு வாடகைக்குண்டு. (வடக்கு மாகாண சபை அலுவ லகத்துக்கு அருகில்) தொடர்பு : 0773405790

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

35 நாள்களில் 2 கிலோவுக்கு வளரக்கூடிய மிட்லண்ட் (கிறிஸ்போ) இன கோழிக்குஞ்சு களை 02.04.2011 அன்று 80/= இற்கு எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: தம்பிப்பிள்ளையும் மைந்தரும்
343, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212223353, 0212228495

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரின் பிரதான வீதி, ஆஸ்பத்திரி வீதி,
கோயில் வீதி, முதலாம், இரண்டாம்,
மூன்றாம் குறுக்குத் தெரு 2 -3 அறைகளுடன்
கூடிய வீடு / ANNEX ஒரு சிறிய
நிறுவனத்துக்கு வாடகைக்குத் தேவை
தொடர்புகளுக்கு: 0777767818

## திருமண சேவை

74 பூரட்டாதி 2இல் செவ்வாய் வெளிநாட்டு பிரஜா உரிமை மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் முதன்மை யில்லை. குறிப்பு, படத்துடன் நேரில் வரவும். துர்க்கா திருமண சேவை, 9, சங்கிலியன் வீதி, நல்லூர்.

T.P: 0213211814
Thurka 32 @ gmail.com

## பராமரிப்பாளர் தேவை

யாழ். நல்லூரை அண்டிய பகுதியில் வயோதிப பெண்ணை வீட்டுடன் இருந்து பராமரிப் பதற்கும் வீட்டில் இருந்து கொண்டு சமை யல் வேலை செய்வதற்கும் ஒரு பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 0775002381

# மருத்துவ உபகரணம் கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

தென்மராட்சி அபவிருத்திச் சபையின் லண்டன் கிளை யினால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் மகப்பேற்று நிலையத்துக்கு சிறு தொகுதி உபகரணங்கள் வைத்திய சாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ம-201)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



### அமரர் கணேசமூர்த்தி துஷ்யந்தன்

(K.G.Em - Photo -நவாலி)

கடந்த 02.03.2011 மலேசியாவில் சிவபதம டைந்த க. துஷ்யந்தனின் அந்தியேட்டி - வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை [01.04.2011] வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெறும். இந்த ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு.

குடும்பத்தினர்.
(K.G.Em - Photo )

## விண்ணக வாழ்வின் மூன்றாம் வருட நினைவஞ்சலி



### அமரர் சுப்பிரமணியம் யோசேப் பூராசா

[ஓய்வுபெற்ற அதிபர், முன்னாள் செயலாளர் புனித அந்தோனியார் ஆலயம், தெய்வக் குழந்தைகள் இல்ல முன்னாள் இயக்குநர்]

பிறப்பு
20.06.1938

இறப்பு
31.03.2008

"நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன் உங்களிடம் திரும்பிவருவேன்." (யோவான் 14-18)

அன்னாரின் ஆன்ம இளைபாற்றுக்காக இறைவனிடம் வேண்டுகின்றோம்.

2ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(49,21,23)

குடும்பத்தினர்.


# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி | நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05.08.1926

மறைவு
02.04.2008

திதி: துவாதசி



தோற்றம்
24.06.1928

மறைவு
13.05.2007

திதி: துவாதசி

அமரர்
**கந்தையா துரை** (துரைராசா)

**திருமதி துரை பாக்கியம்**

பாசத்தின் இருப்பிடமே! பண்பின் சிகரமே!
எம் குடும்பத் தெய்வங்களே! முருகன் திருவடி பணிந்தீர்கள்
இனிய உங்கள் முகம் எங்கள் நெஞ்சை விட்டகலாது
பாசமுடன் இணைந்து பண்புடனே வாழ்ந்தீர்கள்
கனிந்த பேச்சும் நேச மொழியும் காதுகளில் கேட்கிறதே!
கடிதில் எமைப் பிரிந்து எங்கு சென்றீர்கள்?
மறக்கத்தான் முடியவுமில்லை உங்கள் நினைவுகளை
துறக்கவும் முடியாது கலங்குகின்றோம் இங்கேநாம்.
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


நிரந்தர முகவரி:
வாலையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தற்போதைய முகவரி:
கல்லடி வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் ஒருபோதும் தமது இலக்கினின்றும் பிறழவில்லை



**இன்று தந்தை செல்வாவின் 113ஆவது பிறந்த தினமாகும்**

தமிழ் பேசும் மக்கள் என்றுமே தமது இலக்கினின்றும் பிறழவில்லை. வருங்காலத்திலும் அவர்கள் தவறமாட்டார்கள் என்ற பெரிய நம்பிக்கை எனக்கிருக்கிறது என்று தந்தை செல்வா ஒரு தடவை கூறியிருந்தார் என்பதை இன்றைய தினம் நாம் மீண்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்று தந்தை செல்வாவின் 113 ஆவது பிறந்த தினமாகும். தமிழ் பேசும் மக்களின் விடிவுக்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த அம்மகான் தமிழ் மக்களின் விடிவுக்காகச் சிந்தித்து அவ்வப்போது வெளியிட்ட ஆழமான கருத்துக்கள் இங்கு தொகுத்து வழங்கப்படுகின்றன.

1. மூன்று வழிகள் எம் முன்னே தோன்றின. முதலாவது என்றென்றுமே எமது மொழியுரிமை, ஏனைய உரிமைகள் அனைத்தையும் கைவிட்டுச் சரணாகதியடைவது. இதை நாம் நினைத்துப் பார்ப்பதற்குமில்லை. நாம் சரணாகதியடைந்திருந்தால் தமிழ் மக்களுக்குத் தீராதவடு இளைத்தவர்கள் ஆவோம். இரண்டாவது - நாம் பலாத்கார வழிகளில் எமது போராட்டத்தைத் தொடர்ந்திருக்கலாம், ஆனால் இவ்வழி முதலிலே தார்மீகமற்றது; எமது பண்புக்குப் புறம்பானது. இரண்டாவதாக இது நடைமுறைக்குச் சாத்தியமானதுமல்ல. எனவே எம் முன்னே இருந்த் மூன்றாவது வழி - சாத்வீக முறையில் சத்தியாக்கிரகம் செய்வதேயாகும்.

2. மனிதர்கள் என்ற வகையில் நாம் எல்லோரும் தவறிழைப்பவர்களே! எனவே இலட்சியம் தெளிவாகவிருந்தால் அதை நோக்கி முன்னேறுவதில் நாம் பலவித பாதைகளைப் பின்பற்றலாம்.

3. அரசாங்கம் பணத்தைச் செலவழித்துப் பெருமளவில் சிங்கள மக்களைக் கொண்டுபோய் கிழக்கு மாகாணத்தில் குடியேற்றினார்கள். இந்த குடியேற்றத்தின் விளைவாக மாத்திரமே இன்று கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியான அம்பாறை தொகுதி ஒரு சிங்களப் பிரதிநிதியைத் தெரிந்தெடுக்க முடிந்தது.

4. இப்பொழுது அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் தொண்டைக்குள் சிங்களத்தை இடித்துத் திணிக்க முயல்கின்றது. மலைநாட்டுத் தமிழர்களைப் பொறுத்தவரையில் தனது எண்ணத்தை அது பகிரங்கமாகக் கூறிவிட்டது.

5. இலங்கையில் தமிழ்பேசும் மக்களின்

## வருங்காலத்திலும் தவற மாட்டார்கள் என்பது எஸ்.ஜே.வி. கொண்டிருந்த நம்பிக்கை

எதிர்காலம் என்றுமில்லாத அளவு இருள் அடைந்துள்ளது. இன ஒழிப்பு என்ற அபாயம் நம்மை நாற்புறமும் சூழ்ந்து நிற்கின்றது. இந்தக் கட்டத்தில் ஏதும் தவறான அடி எடுத்து வைப்போமானால் எம்மை ஒழித்துக்கட்டக் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கும் சக்திகளுக்கு நாமே உதவி புரிந்தவர்களாவோம்.

6. நீதி செய்வார்களென்று எதிர்பார்க்கப்பட்ட பிரிட்டிஷ் எஜமானர்கள் தம் கடமையில் முற்றாகத் தவறிவிட்டார்கள்.

அரசியலதிகாரம் சிங்களவரின் கையிலேயே இருப்பதை அவர்கள் கண்டார்கள்.

எனவே தமிழ் பேசும் மக்களுக்கு நீதி வழங்குவதிலும் பார்க்கச் சிங்கள மக்களைத் திருப்தி செய்வதே உசிதமென்று கருதினர். அது ஆண்மையற்ற செயல். எனினும் அதையே விரும்பினர். சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பேயில்லாத இந்த நாட்டுக்கு ஓரளவு சுயாட்சி வழங்கிய முதல் அரசியல் திட்டம் டொனமூர் திட்டமேயாகும். டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலை யாழ்ப்பாண மக்கள் பகிஷ்கரித்து விட்டனர். ஏறக்குறைய நான்கு ஆண்டுகளுக்கு அரசாங்க சபையில் யாழ்ப்பாணப் பிரதி நிதிகள் எவருமே இருக்கவில்லை. இந்தப் பகிஷ்கரிப்பு அந்த அரசியல் திட்டத்துக்குள் எதிர்ப்பையே பிரதிபலித்தது. இந்த நாட்டின் அரசியல் வரலாற்றிலேயே இது ஒப்பற்ற சம்பவமாகும்.

7. தமிழ்ப் பொது மக்கள் என்றுமே தமது இலக்கினின்றும் பிறழவில்லை. வருங்காலத்திலும் அவர்கள் தமது இலக்கினின்றும் தவறமாட்டார்கள் என்ற பெரிய நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

8. சமஷ்டியமைப்பில் பெரும்பான்மை இந்துக்கள் கிறிஸ்தவர்களைப் பாரபட்சமாக நடத்துவார்கள் என்பதனை நான் அறிவேன். ஆனால் அதற்காக எனது கடமையைச் செய்யாமல் விட்டுவிட முடியாது.

9. செல்வத்தில் குறைந்த எங்களுக்கு வலிமை பொருந்திய நண்பர்களுமில்லை. நேர்மையும், மன உறுதியும் இலட்சியத் தூய்மையுமே யாங்கள் ஆயுதங்களாகக் கொள்ள வேண்டியவை. இந்திய விடுதலை இப்படியான தார்மீக சக்திகளினாலேயே பெறப்பட்டது.

10. தமிழ் மக்களிடையே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இருக்கின்றனர். அவர்கள் தாங்கள் மற்றவர்களால் ஒடுக்கப்படுவதாகக் கருதுகின்றனர். யாம் ஒருவருக்குக் கொடுமை செய்தால் தர்ம நீதியின்படி எமக்குப் பிறரொருவர் அதையே செய்வார்.

11. யாம் கோருவது இது தான். ஒரு சுயாட்சித் தமிழ் மாகாணமும் ஒரு சுயாட்சி சிங்கள மாகாணமும் அமைத்து பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள சமஷ்டி அரசு இலங்கையில் ஏற்படவேண்டும்

12. சிங்களப் பகுதிகளில் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையற்றவர்களாகவிருக்கின்றனர். ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் வசிப்பவர்களிடையே சுதந்திர உணர்ச்சி இன்னும் நிலவுகின்றது.

**கலாநிதி எஸ்.ஜெபநேசன்**
[தலைவர், தந்தை செல்வா அறங்காவலர் குழு]

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ்.பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமனம் பெற்ற
செல்வி
**வசந்தி அரசரட்ணம்**
அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

"லாவண்யம்"
57/1, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

திருமதி ம.இராசநாயகம்
(கிரியோன் கூல்பார்)
சேயோன் குடும்பம்,
கிருஸ்ணகுமார் குடும்பம்,
ரமணன் குடும்பம்.

**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய. குடும்பத்துக்கு சிறிய வீடு வாடகைக்குத் தேவை. மானிப்பாய், கொக்கு வில், கோண்டாவில் பகுதிகளில் விரும்பத்தக்கது.
T.P: 0778518875

**மணமகள் தேவை**

கரவெட்டியைச் சேர்ந்த இந்து கௌரவ குடும்பம், 1979ஆம் ஆண்டு பிறந்த மிருகசீரிட நட்சத்திரம் 3 ஆம் பாதம், உதயச் செவ்வாய், 14 பாவக் கிரகம் கொண்ட மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்புகளுக்கு:
0771874409, 0779233681

**தவறி விட்டது**

ஜி.சந்தியா என்பவருடைய தே.அ.அட்டை (இல.997722700V) சித்தன்கேணிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவும்.
T.P: 0778002772

**நீரிழிவா?**

பயப்பட வேண்டாம்; நீரிழிவை முற்றாக நீக்க வல்லது :-
வைத்திய நிபுணர்களின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு 100க்கு 100 சக்தி வாய்ந்ததென சிபாரிசு செய்யப்பட்டது- பட்னா டயபெட்டிக் டீ. 10 நாள்களில் பலன் தெரியும்.
நீங்கள் டீ வாங்கும்போது "பட்னா டயபெட்டிக் - டீ" என்று கேட்டு வாங்க மறவாதீர்கள்.
வட இலங்கையின் ஏக விநியோகஸ்தர்கள்
*வைத்தீஸ்வரன் மெடிக்கல்ஸ்*
(ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 0777172780, 0776237956.
(2768) (19,20)

சிவமயம்
**திருமண அழைப்பு**

அன்புடையீர்,
நிகழும் மங்களகரமான விகிர்த்தி வருடம் பங்குனித் திங்கள் 17 ஆம் நாள் (31.03.2011) வியாழக்கிழமை சதய நட்சத்திரமும் சித்தயோகமும் துவாதசி திதியும் கூடிய முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 1.40 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

திரு. திருமதி சோ.சுப்பிரமணியம் தம்பதியரின் செல்வப் புதல்வன் திருநிறைச் செல்வன்
**சபேஸ்**
அவர்களுக்கும்



திரு. திருமதி கி.யோகரத்தினம் தம்பதியரின் செல்வப் புதல்வி திருநிறைச் செல்வி
**சங்கீதா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் (நல்லூர்) திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி சோ.சுப்பிரமணியம்
"மணி இல்லம்"
265, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
0776611453, 0113070319

திரு.திருமதி கி.யோகரத்தினம்
20, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
0773265308, 0713497808

(இரு வீட்டார் அழைப்பு)
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

**மஹஜன ஸம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha**

**29.03.2011**

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2376

வெற்றி எழுத்து: R
வெற்றி எண்கள்: 8 4 4 7 2 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | R | 8 | 4 | 4 | 7 | 2 | 9 | ரூபா.24,880,162/= | பரிசு 01 |
| 1 பரிசுகள் | | 8 | 4 | 4 | 7 | 2 | 9 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 4 | 4 | 7 | 2 | 9 | ரூபா. 100,000/= | பரிசுகள் 16 |
| 3 பரிசுகள் | | | | 4 | 7 | 2 | 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 137 |
| 4 பரிசுகள் | | | | | 7 | 2 | 9 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1324 |
| 5 பரிசுகள் | | | | | | 2 | 9 | ரூபா. 100/= | பரிசுகள் 13290 |
| 6 பரிசுகள் | | | | | | | 9 | ரூபா. 20/= | பரிசுகள் 132035 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 8 | 4 | 4 | 7 | 2 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 17 |
| 8 பரிசுகள் | | 8 | 4 | 4 | 7 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 140 |
| 9 பரிசுகள் | | 8 | 4 | 4 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1324 |
| 10 பரிசுகள் | | 8 | 4 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13154 |
| 11 பரிசுகள் | R | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 52680 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை **Rs. 37,297,562.00**

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு **Rs. 10,000,000.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனில் இருந்து துருக்கிக்கு அனுப்பப்பட்ட போலி வெடிகுண்டு

ஒரு போலி வெடிகுண்டு சரக்கு விமானம் மூலமாக பிரிட்டனில் இருந்து துருக்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது எப்படிக் கொண்டு செல்லப்பட்டது என்ற விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துருக்கியைச் சேர்ந்த 26 வயது இளைஞர் ஒரு போலி வெடிகுண்டை தயாரித்து துருக்கி செல்லும் யு.பி.எஸ். சரக்கு விமானத்தில் அனுப்பியுள்ளார்.

அந்த இளைஞர் திருமண கேக் இடையே கடிகாரம் மற்றும் வயர்கள் ஆகியவை வைத்து இருந்தார்.

சந்தேகத்துக்குரிய இந்த போலி வெடிகுண்டை யாரும் கண்டுபிடிக்கவில்லை. இந்த நிலையில் வெடிகுண்டு புரளி ஏற்படுத்திய இளைஞரை பொலிசார் அவரது வீட்டில் கைது செய்தனர்.

இது குறித்து பொலிஸ் செய்தித் தொடர்பாளர் கூறியதாவது:

போலி வெடிகுண்டு தொடர்பாக துருக்கி இளைஞர் கைது செய்யப்பட்டு வடக்கு லண்டன் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். - என்றார்.

போலி வெடிகுண்டு வைத்த நபர் தீவிரவாத நோக்கத்தில் செயல்படவில்லை. எனவே, அவர் விடுவிக்கப்பட்டார். கடந்த 15 தினங்களுக்கு முன்னர் அந்த துருக்கி இளைஞர் யு.பி.எஸ். சரக்கு விமான அலுவலகத்தில் போலி வெடிகுண்டு பார்சலை அனுப்பினார்.

உலகின் இதர நாடுகளை விட பிரிட்டன் விதிமுறை கடுமையானதாகும். போலி வெடிகுண்டு சிக்கியதைத் தொடர்ந்து சர்வதேச அளவில் கூரியர் நிறுவனங்கள் சரக்கு பொருள்களை சோதனையிட்டு அனுப்பும் நிலைகுறித்தும் கேள்வி எழுந்துள்ளது.

(ம)

# ஈராக்கில் குண்டுத் தாக்குதல்; 58 பேர் பலி

ஈராக்கில் நேற்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றின் காரணமாக 58 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

டிக்ரிட் நகரில் உள்ள உள்ளூராட்சி மன்றம் ஒன்றின் அருகே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதல் காரணமாக 97 பேர் கடுமையான காயம் அடைந்திருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன. ஈராக்கிய இராணுவத்தின் சீருடையை ஒத்த உடையுடன் வந்தவர்களே தாக்குதலை மேற்கொண்ட தாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். தாக்குதலுக்காக ஆறு தீவிர வாதிகள் வருகை தந்ததாகவும், தற்போதைக்கு அவர்களின் சடலங்கள் இனம் காணப்பட்டிருப்பதாகவும் ஈராக்கிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# போராட்டக்காரரைச் சந்திக்க பிரான்ஸ் தூதர் செல்கிறார்

பரிஷ், மார்ச் 31

கடாபி ஆட்சிக்கு எதிராக புரட்சி போராட்டம் நடத்தும் மக்களின் ஆதிக்கப் பகுதியான பெங்காசி நகருக்கு பிரான்சின் சிறப்புத் தூதர் செல்கிறார்.

கடாபியை பதவியில் இருந்து நீக்கவிட்டு லிபியாவில் புதிய ஆட்சியை அமைப்பதற்காக சீரமைப்பு தேசிய சபையுடன் பேச பிரான்ஸ் தூதர் அங்கு செல்கிறார்.

ஆபிரிக்க தேசமான லிபியாவில் கடாபி கடந்த 41 ஆண்டுகளாக ஆட்சி செய்து வருகிறார். அவரது சர்வாதிகார ஆட்சியை அகற்ற கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி புரட்சிப் போராட்டம் வெடித்தது. இந்தப் போராட்டக்காரர்களை ஒடுக்க ராணுவம் வான் வழித் தாக்குதலை நடத்தியது. இந்த நிலையில் அங்கு நேட்டோ கூட்டுப்படைகள் முகாமிட்டுள்ளன.

லிபியாவில் சீரமைப்பு தேசியக் கவுன்சிலை போராட்டக்காரர்கள் உருவாக்கி உள்ளனர். இந்தச் சபையைப் பிரான்ஸ் அங்கீகரித்தது. உலக நாடுகளில் போராட்டக்காரர்களின் தேசியச் சபையை அங்கீகரித்த முதல் நாடு பிரான்ஸ் ஆகும்.

போராட்டக்காரர்கள் உள்ள பெங்காசிக்கு பிரான்ஸ் தனது தூதரை அனுப்புகிறது. 53 வயது அன்டோனி சிவன் பிரான்ஸ் சிறப்புத் தூதராக பெங்காசி செல்கிறார். லண்டனில் நடைபெறும் சர்வதேச மாநாட்டுக்கு இடையில் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

லண்டன் மாநாட்டில் 7 அரபு நாடுகள் உள்பட 35 நாடுகள் கலந்து கொண்டன. பிரான்ஸ் தூதராக செல்லும் சிவன் அரபு மொழி பேசக்கூடிய அதிகாரி எகிப்து வழியாக அவர் லிபியாவுக்கு பயணம் ஆவதாக பிரான்ஸ் அதிகாரி தெரிவித்தார்.

மேலும் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சின் மூலமாக லிபியப் போராட்டக்காரர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முயல்கின்றோம் என்று பிரதமர் காமரூன் அறிவித்துள்ளார். இதற்கு பிரான்ஸ் அரசும் ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம)

# கிளி/திருவையாறு மகா வித்தியாலயம், கிளிநொச்சி

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சித்தியடைந்தோர் - 2008**

| பெயர் | புள்ளி | மாவட்டநிலை |
|---|---|---|
| 1. சி.சஞ்சீவன் | 133 | 41 |
| 2. யு.கீர்த்திகா | 131 | 49 |
| 3. மு.சுபேஸ்திகா | 129 | 56 |
| 4. பா.ரதீபன் | 125 | 75 |
| 5. த.தனுஜன் | 120 | 98 |
| 6. ப.விதுசன் | 119 | 110 |
| 7. ம.மதுவந்தி | 115 | 135 |
| 8. செ.சாரங்கன் | 114 | 142 |
| 9. க.டிலக்ஷனா | 114 | 142 |

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

1. ஜெ.ஜெயாணி
2. பா.தர்சிகா
3. இ.தீபிகா
4. வா.நித்திகா
5. செ.கோபிநாத்
6. த.ஸரேமிகா
7. கா.கிருஜன்



**சித்தியடைந்தோர் - 2009**

| பெயர் | புள்ளி |
|---|---|
| 01. பி.பிரதீபா | 159 |
| 02. சு.றதோஜினி | 150 |
| 03. தி.நிலானி | 140 |
| 04. சு.அனோச் | 133 |
| 05. ம.தேனுகா | 125 |
| 06. சு.அர்ச்சனா | 124 |
| 07. சௌ.குருமதி | 123 |
| 08. மு.கயாளினி | 124 |
| 09. செ.டியானி | 122 |
| 10. ப.கபிலா | 113 |
| 11. மு.சோமிலன் | 116 |
| 12. ச.நிதுசன் | 112 |

100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற மாணவர்கள்

1. பா.பானுஜா
2. நே.வித்தியாசாகர்
3. க.கஜீபா
4. மு.அனோஜன்
5. க.கஜானா
6. நா.ரவிறிஸ்னா



**சித்தியடைந்தோர்- 2010**

| பெயர் | புள்ளி | மாவட்ட நிலை |
|---|---|---|
| 1. ந.அபிராமி | 173 | 02 |
| 2. இ.கிருசாந்தன் | 165 | 06 |
| 3. த.நிதுஷிகன் | 162 | 09 |
| 4. கி.காங்கேயன் | 147 | 51 |
| 5. கு.நிஷாளினி | 141 | 79 |

100புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

01. தி.பிரசன்னா
02. வி.அனுசன்
03. ம.அருணன்
04. செ.மிதுனா
05. க.கௌசிகா
06. செ.கிருஷாணி
07. ச.லக்சிகா
08. சி.ஜனாத்
09. இ.கயல்விழி
10. ம.கபிலானந்தன்
11. ச.தயாளன்
12. பா.தனுசிகா
13. ம.டோசிகா
14. ச.கயன்
15. கோ.சஜீபன்
16. சா.யதுமிளா
17. ம.லீனராஜ்
18. ப.ஜெக்சன்
19. ட.டன்சிகா
20. வி.பிறேமினி
21. ஞா.துளசிகா

புலமைப் பரிசில் பரீட்சையில் 2008, 2009, 2010 ஆகிய காலப்பகுதிகளில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களான திருமதி அ.ஸ்ரீதரன், திருமதி ச.விக்கினேஸ்வரன், திருமதி அ.நாகேஸ்வரன், திருமதி அ.நகுலகுமார் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



கல்விச் சமூகம்,
கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகம் முழுவதுமே அணுக் கதிர் வீச்சு பரவுவதைத் தடுக்க தீவிர நடவடிக்கை

## ஜப்பான் பிரதமர் நவ்டோகான் தெரிவிப்பு

டோக்கியோ, மார்ச் 31

அணுகதிர்வீச்சு பரவாமல் தடுக்க ஜப்பான் அரசு அதிக பட்ச எச்சரிக்கையுடன் செயற்படுகிறது என பிரதமர் நவ்டோகான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பூகம்பமும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆழிப்பேரலையும் ஜப்பானை மிகப் பெரும் நெருக்கடிக்குத் தள்ளிவிட்டன. சமீப காலங்க ளில் ஜப்பான் சந்தித்த மிகப் பெரும் துயரச் சம்பவம் இதுவாகும். இதனால் ஜப்பானின் வடகிழக்குப் பகுதியில் 28 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

புகுஷிமா பகுதியிலுள்ள அணு உலையின் நிலைமை மிகவும் மோசமாகவே உள்ளது. இது கணிக்க முடியாத அளவுக்கு உள்ளது. எனவே அரசு அதிகபட்ச எச்சரிக்கையோடு தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த ஆலையைச் சுற்றி 20 கி.மீ. சுற்றுப் பகுதியில் உள்ளவர்கள் அனைவரையும் நிரந்தரமாக வெளியேற்றுவது குறித்து ஆலோசனை செய்யப்படுகிறது. இந்த ஆலையை நிரந்தமாக மூடிவிட முடிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆலையை நிர்வகிக்கும் டோக்கியோ எலெக்ட்ரிக் பவர் கோர்ப்பரேஷன் லிமிட்டெட் நிறுவனமும், மண்ணில் புளூட்டோனியம் பரவியுள்ளமையை உறுதி செய்துள்ளது. இருப்பினும், ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் மண்வளம் காக்கப்படுகிறது என்றும் அது உறுதியளித்துள்ளது.

புளூட்டோனியம் எந்த அளவுக்குப் பரவியுள்ளது என்பதை அளவிடுவது அவ்வளவு எளிதான காரியமல்ல என்று இந்நிறுவனத்தின் துணைத் தலைவர் சகே மோட்டோ தெரிவித்துள்ளார். மற்றெந்த கதிர்வீச்சைக் காட்டிலும் புளூட்டோனியம் மிகவும் ஆபத்தானது. அயோடின், சீசியம் உள்ளிட்டவற்றைக் காட்டிலும் இது மனித உயிர்களுக்குக் கேடு விளைவிக்கக் கூடியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் பின்வருமாறு விளக்கியுள்ளார்:-

இரண்டாவது அணுஉலையிலிருந்து மிக அதிக அளவு கதிர் வீச்சு வெளியேறியுள்ளது. இங்கிருந்து 1,000 மில்லி சீவர்ட் அளவுக்கு பரவியுள்ளது. இதனால் இது தண்ணீரிலும் கலந்துள்ளது. இந்த உலையில் உள்ள எரிபொருள் கம்பி உருகியதால், கதிர்வீச்சு வெளியானது.

ஒரு மணி நேரத்துக்கு 1,000 மில்லி சீவர்ட் அளவுக்கு கதிர் வீச்சு காற்றில் பரவினால் அதை சுவாசிக்கும் மனிதனின் இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை 30 நிமிடத்தில் குறைந்துபோகும். இவ்விதம் சுவாசிப்பவர்கள் 30 நாளில் மரணத்தைச் சந்திக்க நேரும். சிலர் 4 மணிநேரத்தில் உயிரிழப்பர். இரண்டாவது அணு உலைக்கு அருகாமையிலிருந்து தான் மிக அதிக அளவில் அணு கதிர்வீச்சு பரவியுள்ளது. இந்த அணு உலையின் கீழ் தளத்தில் கதிரியக்க அளவு ஒரு லட்சம் மில்லி சீவர்ட்டாக உள்ளது. இது வழக்கமான அளவைக் காட்டிலும் மிகவும் அதிகமானதாகும்.

முதலாவது அணுஉலையிலிருந்து 320 டிகிரி செல்சியஸ் வெப்பம் வெளியாகிறது. இதனால் அதைக் குளிர்விக்க தண்ணீரை அனுப்பும் பணியை நிறுவனம் மேற்கொண்டுள்ளது. ஆனால் கதிர்வீச்சு கடல் நீரில் எந்த அளவுக்குப் பரவியுள்ளது என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை.

அணுஉலையிலிருந்து கன நீரை வெளியேற்றுவதற்காக கடலில் 55 முதல் 70 மீற்றர் வரையிலான பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து வெளியேறும் தண்ணீர் மூலம் கதிர்வீச்சு கடல் நீரில் பரவுகிறது. இந்தக் குழாய் வழியே நீர் வெளியேறாமல் தடுக்கப்பட்டது. - என்று அவர் தெரிவித்தார்.


அதேவேளை, அணுஉலையின் நிலைமை மிக மோசமாக உள்ளது என அமைச்சரவைத்தலைமைச் செயலர் யுகியோ எடானோ, செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். எரிபொருள் கம்பிகள் மிக அதிக வெப்பத்தில் உருகுவது கவலையளிக்கிறது. இதனால் இப்பகுயில் உள்ள மண்ணில் புளூட்டோனியம் பரவியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் கதிர்வீச்சு நிறைந்த தண்ணீரை வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அணு உலையைக் குளிர்விக்க குளிர்ந்த நீரை அனுப்புவது, அதேசமயம், கதிர்வீச்சு நிறைந்த நீரை வெளியேற்றுவது என இரண்டுவிதமாகக் கடினமான பணியை மேற்கொண்டுள்ளனர் என அமைச்சரவை செயலர் எடானோமேலும் குறிப்பிட்டுள்ளார்.

## லிபியப் படைகள் சிரட்டே நகரில் தாக்குதல்

ஜனாதிபதி கடாபியின் சொந்த ஊரான சிரட்டேவை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி விட்டனர் என்று தகவல் வெளியானது. அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளின் ஆதரவுடன் அவர்கள் அந்த நகரைக் கைப்பற்றினர் எனக் கூறப்பட்டது.

இந்நிலையில் கிளர்ச்சியாளர்களை லிபிய படைகள் விரட்டி மீண்டும் சிரட்டே நகரைத் தங்கள் வசம் கொண்டுவந்துவிட்டனர் என்று அல்-ஜசீரா தொலைக் காட்சி அறிவித்தது. ரொக்கெட் மற்றும் பீரங்கித் தாக்குதல் நடத்தி கிளர்ச்சியாளர்களை லிபிய படைகள் பின்வாங்கச் செய்தன என்றும் அது தெரிவித்துள்ளது.



நெதர்லாந்து வந்திருந்த ஐரோப்பிய யூனியன் பார்லிமென்ட் தலைவர் ஜெர்ஸிபூஸாக் அந்நாட்டு பிரதமர் மார்க்ரூட்டினை ஹோக் நகரில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் சந்தித்து பேசினார்.

## மரண தண்டனை: சீனாவே உலகில் முதலிடம்

பீஜிங், மார்ச் 31

உலக நாடுகளில் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றியமை குறித்த அறிக்கையை லண்டனைச் சேர்ந்த ஒருநிறுவனம் வெளியிட்டுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டில் 23 நாடுகளில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அவற்றில், ஈரானில் 252 பேரும், வடகொரியாவில் 60 பேரும், ஏமனில் 53 பேரும், அமெரிக்காவில் 46 பேரும் இத்தண்டனை மூலம் கொல்லப்பட்டுள்ளனர்.

சீனாவில்தான் ஆயிரக்கணக்கானவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அவர்களில் கொடூர குற்றவாளிகளுடன் சாதாரண குற்றம் புரிந்தவர்களும் அடங்குவர்.

# தென்கொரியாவைத் தொடர்ந்து சீனா - பிரிட்டனில் அணுக் கதிர்வீச்சு

பீஜிங், மார்ச் 31

ஜப்பானில் கடந்த 11ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பம், ஆழிப் பேரலை ஆகியவற்றை தொடர்ந்து புகுஷிமா அணுஉலை வெடித்தது. அதிலிருந்து வெளியேறிய கதிர்வீச்சு அங்கு அதிர்ச்சியையும் பூகம்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பால், குடிதண்ணீர், கடல்நீர், அத்தியாவசிய பொருள்கள் ஆகியவற்றில் கதிர்வீச்சு பாதிப்பு உள்ளது. எனவே உணவுப் பொருள்கள் கிடைக்காமல் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

ஜப்பானில் வெளியேறும் கதிர் வீச்சு ஜப்பானின் அண்டை நாடான தென்கொரியாவிலும் பரவியது. அங்குள்ள கடலிலிருந்து பிடிக்கப்பட்ட மீனில் கதிர்வீச்சு பரவியுள்ளது.

மேலும் அந்த நாட்டில் 13 இடங்களில் காற்றில் நடத்தப்பட்ட ஆய்விலும் கதிர்வீச்சு தாக்கம் வழக்கத்தை விட அதிகமாக இருந்தது. இதனால் மக்களுக்கு பாதிப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கொரியாவை தொடர்ந்து தற்போது சீனா, பிலிப்பைன்ஸ், வியட்நாம், பிரிட்டன் ஆகிய நாடுகளிலும் அணுக் கதிர்வீச்சு பரவியுள்ளமை தெரியவந்துள்ளது. அங்கு காற்றில் அவை பரவியுள்ளது. இவை மிக குறைவான அளவுதான்.

எனவே பொது மக்கள் பீதி அடைய வேண்டாம் என பிலிப்பைன்ஸ் அணு ஆராய்ச்சி நிறுவனத்தின் செய்தித்தொடர்பாளர் டினா செர்போலிஸ் தெரிவித்துள்ளார்.

ஜப்பானிலிருந்து வெளியேறிய அணு கதிர்வீச்சு ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியுள்ளது. பிரிட்டனிலுள்ள ஸ்காட்லாந்து பகுதியில் கிளாஸ்கோவ் நகரில் வழக்கத்தை விட அதிகளவில் கதிர்வீச்சு உள்ளது.

அங்கு 131 இடங்களில் காற்றில் எடுக்கப்பட்ட மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. ஸ்கொட்டிஷ் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் துறை நடத்திய இந்த ஆய்வில் அணு கதிர்வீச்சு பாதிப்பு இருப்பது தெரிய வந்துள்ளது.

மேலும் இங்கிலாந்திலுள்ள லண்டன் உட்பட 92 இடங்களில் மணிக்கு ஒருமுறை காற்றிலிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு கதிர்வீச்சு சோதனை நடத்தப்படுகிறது. ஐரோப்பாவிலுள்ள ஐஸ்லாந்து, சுவிட்சர் [illegible] கதிர்வீச்சு பரவி வருகிறது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

## உலகின் உயரமான ஹோட்டல் ஹொங்கொங்கில்

ஹொங்கொங்கின் விக்டோரியா துறைமுகத்தில் உலகின் உயரமான ஹோட்டல் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இந்த ஹோட்டலின் உயரம் 490 மீற்றர் அதாவது சுமார் ஆயிரத்து 600 அடியாகும்.

கடந்த 2008ஆம் ஆண்டு தற்காலிகமாக இந்த ஹோட்டல் 2008ஆம் ஆண்டு மூடப்பட்டது. பின்னர் தற்போதுதான் திறக்கப்பட்டுள்ளது.

இந்த ஹோட்டலின் ஒருநாள் வாடகையாக 770 அமெரிக்க டொலர் வசூலிக்கப்படுகிறது.

# பீரங்கிக் குண்டு வெடித்து பாக்.இராணுவத்தினர் பலி

தலிபான்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குத் தயாரானபோது பீரங்கிக் குண்டு வெடித்தது. இதில் கேர்னல், கெப்டன் உட்பட பாகிஸ்தான் படைவீரர்கள் 14 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் வடமேற்கில் பழங்குடியினர் வசிக்கும் கைபர் மாகாணத்தில் தலிபான்களை ஒடுக்குவதற்காக பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதனிடையே, அகாகெல் இராணுவச் சோதனைச் சாவடி மீது 50இற்கும் மேற்பட்ட தலிபான் தீவிரவாதிகள் திடீரெனத் தாக்குதல் நடத்தத் தொடங்கினார்.

அவர்கள் மீது திருப்பித் தாக்குவதற்காக இராணுவத்தினர் குண்டு ஒன்றைப் பீரங்கியில் பொருத்தியபோது எதிர்பாராத விதமாக அது வெடித்துச் சிதறியது. இதில், அங்கிருந்த கேர்னல், கெப்டன் உட்பட 14 இராணுவத்தினர் இறந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# செலிங்கோ லைஃப்பின் வடக்கு, கிழக்கு காப்புறுதிதாரர்களும் இந்த முறை குடும்ப சவாரியில் சிங்கப்பூரில் கொண்டாட்டம்



செலிங்கோ லைஃப் குடும்ப சவாரி வெற்றியாளர்கள் சிங்கப்பூரில்.

செலிங்கோ லைஃப் நிறுவனம், அதன் 50 காப்புறுதி தாரர்களுக்கு தமது குடும்பத்தோடு சிங்கப்பூரில் சுற்றுலா மேற்கொள்ளும் வாய்ப்பை வழங்கியது. கம்பனியின் நான்காவது குடும்ப சவாரித் திட்டத்தின் முதலாவது கட்டமாக நான்கு நாள் சிங்கப்பூர் சுற்றுலாவுக்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட இந்தக் காப்புறுதிதாரர்கள் சிங்கப்பூரின் செந்தோஸாதீவு, மெர்லியோன் சிலை, சைனா டவுன், லிட்டில் இந்தியா, ரெட்டெம்பிள், தேசிய ஓர்கிட் தோட்டம் என்பன உட்பட சிங்கப்பூரின் கண்கவர் இடங்கள் பலவற்றைச் சுற்றிப் பார்வையிடும் வாய்ப்பைப் பெற்றனர்.

சிங்கப்பூரில் உல்லாசப் பயணிகளைக் கவர புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள கிரேன் ஷோ (Crane Show), சோங் ஒப் த சீ (Song of the Sea), லேஸர் ஷோ (Laser Show) ஆகிய வற்றைக் கண்டுகளித்ததோடு மொஸ்தபா ஷொப்பிங் மோல், சீனாடவுன் ஆகியவற்றில் மறக்க முடியாத பொருள் கொள்வனவு அனுபவத்தையும் பயணிகள் பெற்றுக்கொண்டனர்.

கோப்துரோன் கிங்ஸ் ஹோட்டலில் நட்சத்திர அந்தஸ்துடன் கூடிய தங்குமிட வசதி வழங்கப்பட்டது.

பல்வேறு கீர்த்திமிக்க சிற்றுண்டிச்சாலைகளில் வித்தியாசமான பல்வேறு வகை உணவுகளை உட்கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்பட்டதுஎன்று செலிங்கோ லைஃப் நிறுவனம் அறிவித்துள்ளது.

பயணம் மேற்கொண்டவர்களில் பௌதீக ரீதியாக உதவி தேவைப்பட்டவர்களுக்கு உதவியாளர்களின் சேவையும் வழங்கப்பட்டது. அத்தோடு இந்த ஆண்டு குடும்ப சவாரிக்குத் தெரிவான காப்புறுதிதாரர்களுள் வடக்கு, கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ளோரும் அடங்குவர்.

இந்த ஆண்டுத் திட்டத்தின் இரண்டாவதுகட்டமாக செலிங்கோ லைஃப் அதன் 500 காப்புறுதிதாரர்களை அவர்களின் குடும்பத்தவர்களோடு லெஷர் வேர்ள்ட் பொழுதுபோக்குப் பூங்காவுக்கு ஒருநாள் பயணமாக அழைத்துச் செல்லவுள்ளது. இந்தப் பயணத்தில் 2000 பேர் பங்கேற்கவுள்ளனர். இதன் மூன்றாவது கட்டமாக 150 குடும்பங்களைச் சேர்ந்த 600 பேர் ஏப்ரல் மாதத்தில் ஜெட்லைனர் கப்பலில் கொழும்புக் கடல் பகுதியில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

# எச்.என்.பியின் சீட்டிழுப்பில் நான்கு பேருக்குப் பரிசில்கள்

கிளிநொச்சி ஹற்றன் நஷனல் வங்கியின் 2010 ஆம் ஆண் டின் காலாண்டுக்குரிய பத்தும் விமன சீட்டிழுப்பில் வெற்றி யீட்டிய வாடிக்கையாளர்களுக்குரிய நான்கு பரிசில்கள் வழங் கப்பட்டுள்ளன.

கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் வங்கிக் கிளை முகாமையாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் பரிசில் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இதில் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் ரவி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக வங்கியின் நெல்லியடிக்கிளையின் முகாமையாளர் கே. முரளிதரன் கலந்து கொண்டார்.

முதலாவது பரிசான ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளை எஸ்.சபேசன் தட்டிச் சென்றார்.


இரண்டாவது பரிசான குளிர்சாதனப் பெட்டியை எஸ்.பரணிதரனும், மூன்றாவது பரிசான தொலைக்காட்சிப் பெட்டியை கே.அழகரத்தினமும், நான்காவது பரிசான டி.வி.டி பிளேயரை பி.கிருஷ்ணராஜாவும் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டுக்கான பத்தும் விமன சீட்டிழுப்பில் வழங்கப்படவுள்ள பரிசுப் பொருள்களான கார், உழவு இயந்திரம் என்பன வங்கிக்கு முன்பாக காட்சிப்படுத்தப்பட்ட பின்னர் கிளிநொச்சி வீதியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

(க-450)



கொமர்ஷல் வங்கியின் மானிப்பாய்க் கிளையின் அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்குக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி புதன்கிழமை மானிப்பாய்க் கிளையில் முகாமையாளர் எஸ்.கே.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட கொமர்ஷல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் ரஜீவன், சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி, மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ். சிவனேஸ்வரன் ஆகியோர் பரிசு பெற்ற மாணவர்களுடன் காணப்படுகின்றனர். (த)



ஹற்றன் நஷனல் வங்கியின் பத்தும் விமன 2010 ஆம் ஆண்டுக்கான கிளை ரீதியான சீட்டிழுப்பு மானிப்பாய் வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய பிரதி முகாமையாளர் ஆர்.ரவி கலந்துகொண்டு அதிர்ஷ்டசாலிகளுக்கான பரிசில்களை வழங்கினார்.

முதலாம் பரிசாகக் குளிர்சாதனப்பெட்டி ஒன்றும் 2 ஆம் பரிசாக தொலைக்காட்சிப் பெட்டியும் 3 ஆம் பரிசாக டி.வி.டி பிளேயரும் வழங்கப்பட்டன. (த)

# மலிபனுக்கு சிறந்த உணவுப் பண்ட குறியீட்டுக்கான மக்கள் விருது

மலிபன் பிஸ்கட்ஸ் நிறுவனத்துக்கு இதுவரை கிடைத்த விருதுகளின் வரிசையில் இப்போது புதியதொரு பெருமைக்குரிய விருதும் கிடைத்திருக்கிறது. அதுதான் சிறந்த உணவுப் பண்டக் குறியீட்டுக்கான FMCG Food Brand மக்கள் விருது. 2011 ஆம் ஆண்டுக்கு உரியது.

Slim Neilson Peoples Award வழங்கும் விழாவில் மலிபனுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஹினி அப்புஹாமி என்பவரால் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட மலிபன் பிஸ்கட் நிறுவனம் இன்று பெரு வளர்ச்சி கண்டு உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் மக்களின் பேரபிமானத்தைப் பெற்றுள்ளது.

விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய மலிபன் நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதம நிறைவேற்று அதிகாரி ரவி ஜெயவர்த்தன, மலிபன் பயணத்தில் இது குறிப்பிடத்தக்க சாதனை எனத் தெரிவித்தார். மலிபனின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஹஷாரின் ஹப்புதந்திரி கருத்துத் தெரிவிக்கும் போது, ''இந்த விருதையிட்டு நாம் பெருமை அடையலாம்.

தரத்தைப் பேணுவதிலும் புதுமையை அறிமுகப்படுத்துவதிலும் மலிபன் எடுத்துள்ள முயற்சியையும் அர்ப்பணிப்பையும் இந்த விருது அங்கீகரித்துள்ளதுடன் மலிபனுக்கு மக்கள் வழங்கிய அங்கீகாரத்தையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது'' என்றார்.

இலங்கை சந்தைப்படுத்தல் கற்கை நிறுவகமும் (SLIM) முன்னணி ஆராய்ச்சி நிறுவனமான நீல்சன் கம்பனி லங்கா நிறுவனமும் இணைந்து மேற்கொண்ட முன்னெடுப்பான இந்த மக்கள் விருது நாட்டில் குறிப்பிடப்பட்ட தாக்கத்தை உண்டு பண்ணிய பண்டக் குறிகளையும் தனி நபர்களையும் அங்கீகரிக்கும் விருதாகும்.

இந்த விருதில் முடிவுகள் செப்டெம்பர் 2010 முதல் ஜனவரி 2011 வரையான ஐந்து மாத காலப் பகுதியில் நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட பரந்துபட்ட ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். அங்கர், சன்லைட், லைவ் போய் மற்றும் சிக்னல் முதலான ஏனைய பண்டப் பெயர்களுடன் ஆண்டின் FMCG Brand of the Year விருதுக்காக மலிபனும் முன்மொழியப்பட்டிருந்தது.

# வடக்கு, கிழக்கில் புதிதாக 121 வங்கிக் கிளைகள்

வடக்கிலும் கிழக்கிலும் கடந்த 2010ஆம் ஆண்டில் 121 வங்கிக் கிளைகள் திறக்கப்பட் டுள்ளன.

இவற்றில் வங்கிச் சேவை நிலையங்களும் அடங்குகின்றன.

இவை சுயதொழில் முயற்சிகளுக்கு கடன் வழங்குவதில் முக்கிய கவனம் செலுத்தும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

முன்னாள் போராளிகளின் தொழில் முயற்சிகளுக்கு கடன் உதவி வழங்கும் வைபவத்தில் ஆளுநர் இதைக் கூறினார்.

மத்திய வங்கியின் ஓர் உதவித் திட்டத்துக்கு அமைய இலங்கை வங்கி மட்டக்களப்பில் 45 முன்னாள் போராளிகள் சுயமாகத் தொழில்களைத் தொடங்குவதற்கு 10 லட்சம் ரூபாவை வழங்கியது.

இவர்களுக்கு முன்னதாக 6 மாதத் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டது. அபிவிருத்தி ஏற்படுத்து வதற்கு நிதி உதவி கிடைக்கும் வாய்ப்பு அவசியம் தேவைப் படுகிறது.

அதையே வடக்கு, கிழக்கில் வங்கிக் கிளைகளும் சேவை நிலையங்களும் வழங்கி வருகின்றன என்றும் ஆளுநர் மேலும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டப் பேரவைத் தேர்தலுக்குப் பின் கூட்டணி ஆட்சி குறித்து முடிவு

## கருணாநிதி கூறுகிறார்


சென்னை, மார்ச் 31

சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பின்னர் தேவை ஏற்பட்டால் கூட்டணி ஆட்சி குறித்து பரிசீலித்து முடிவு எடுக்கப் படும் என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

பிரபல ஆங்கிலத் தொலைக் காட்சி ஒன்றுக்கு அவர் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், கலைஞர் தொலைக் காட்சிக்கும் தனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் அவர்கூறியுள்ளார். அதற்கு எனது பெயர் மட்டுமே சூட்டப்பட்டுள்ளது.

ஆனால், அதில் எனக்கு எந்த வித உரிமையும் கிடையாது. எனது மனைவி தயாளு அம்மாள் மற்றும் மகள் கனிமொழி, கலைஞர் தொலைக் காட்சியின் தலைமைச் செயல் அதிகாரி சரத்குமார் ஆகியோருக்குத்தான் அதில் பங்குகள் உள்ளன. என்றும் கருணாநிதி தெரிவித்தார்.



சினியுக் பிலிம்ஸ் நிறுவனத்திடம் இருந்து கலைஞர் தொலைக் காட்சி கடன் பெற்றது. இதை எப்படி ஊழலாகக் கூறமுடியும்? சில அரசியல்வாதிகள் 2ஜி விவகாரத்தை மிகவும் பெரிதுபடுத்திக் கூறி வருகின்றனர். என்றும் கருணாநிதி கூறினார்.

துணை முதல்வர் ஸ்ராலின் குறித்த கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையில்,

ஸ்ராலின், எனது அரசியல் வாரிசாக இருப்பதில் கட்சிக்குள் எந்த குழப்பமும் இல்லை. தி.மு.க.வின் மூத்த தலைவர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் என் மீது வைத்துள்ள அதே நம்பிக்கையை ஸ்ராலின் மீதும் வைத்துள்ளனர்- என்றார்.

(201)

# காங்கிரஸ் கட்சியை வீழ்த்துவது தமிழனின் கடமை : சீமான்



சென்னை, மார்ச் 31

காங்கிரஸ் கட்சியை வீழ்த்துவது ஒவ்வொரு தமிழனின் கடமை என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இராமேஸ்வரம், பரமக்குடி பகுதியில் நடைபெற்ற அந்தக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது:

மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்லும் தமிழக மீனவர்களை சித்திரவதை செய்து சுட்டுக் கொல்லும்சிங்களக் கடற்படையை கண்டுகொள்ளாமல் தமிழின அழிப்பிற்கு துணை போய் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியை நாம் வீழ்த்த வேண்டும்.

இனியும் ஒரு முறை இந்த மண்ணில் காங்கிரஸ் வெற்றி பெற்றால், எதிர்கால தமிழ்ச் சொந்தங்கள் அனைவருடைய வாழ்க்கையும் கேள்விக்குறியாக ஆகிவிடும்.

காங்கிரஸ் கட்சியை வீழ்த்துவது என்பது நாம் தமிழர் கட்சியின் குறிக்கோள் மட்டுமல்ல தமிழனாகப் பிறந்த ஒவ்வொரு தமிழனுக்குமான கடமை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(201)

## பிரசாரம்...



தஞ்சாவூர் கீழவாசல் காமராஜர் சிலை அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி பிரசாரம் செய்கின்றார். அருகில் தி.மு.க., வேட்பாளரும், அமைச்சருமான உபயதுல்லா நிற்கின்றார்.

# பரம்பரை அரசியல் தவறில்லை; நிதியமைச்சர் அன்பழகன் பேச்சு



தாம்பரம், மார்ச் 31

நம்பிக்கைக்குரிய தலைமை என்றால் அது கருணாநிதி தலைமைதான். பரம்பரை முறையில் அரசியலுக்கு வருவது தவறில்லை, திறமை இருந்தால் வரலாம் - என்று அமைச்சர் அன்பழகன் தெரிவித்தார்.

தாம்பரம், அனகாபுத்தூர் ஆகிய இடங்களில் தேர்தல் பிரசாரத்தில் ஈடு பட்டபோது அவர் மேலும் பேசியவை வருமாறு -

வேட்பாளர் எஸ்.ஆர். ராஜா, கடந்த ஐந்து ஆண்டுகளாக எம்.எல்.ஏவாக இருந்து மேம்பாலம், குடிதண்ணீர், வீதி, போக்குவரத்து உள்ளிட்ட வசதி களையும் செய்துள்ளார். தமிழகம் முழுவதும் கருணாநிதியின் சாதனைகள்தான் பேசப்படுகின்றன. ஆனால், தாம்பரத்தில் மட்டும் ராஜாவின் சாதனைகளையே பேசுகின்றனர்.

முதல்வர் கட்டளைப்படித்தான் துணை முதல்வர் ஸ்டாலின், அழகிரி உள்ளிட்ட அனைவருமே பணியாற்றுகின்றனர். அவர் உத்தரவு இல்லாமல் யாரும் செயல்பட முடியாது. தி.மு.க. ஆட்சி, பரம்பரை ஆட்சி என தவறாகக் கூறுகின்றனர். பரம்பரை என்பது அடையாளம் காட்டுவதே தவிர, அவரவருக்கு திறமை இருப்பதால் அரசியலுக்கு வருகின்றனர். முதல்வர் என்னை விட இரண்டு வயது சிறியவர். இருந்தாலும் நான் கலைஞர் என்றுதான் அவரை அழைக்கிறேன். ஆனால், கலைஞரை கருணாநிதி என்று பெயர் சொல்லித்தான் ஜெயலலிதா பேசுகிறார்; அரசியல் நாகரிகம் தெரியாதவர் அவர்; கம்யூனிஸ்ட்காரர்களை உண்டி குலுக்குபவர்கள் என்று கூறினார்.

# கச்சதீவை இலங்கைக்குத் தாரைவார்த்த கருணாநிதி மீனவர்கள் மீதான தாக்குதலையும் தட்டிக்கேளாதவர்

## சாடுகிறார் ஜெயலலிதா

கும்பகோணம், மார்ச் 31

வாழவைத்த தமிழர்களை வஞ்சிக்கும் கருணாநிதி, கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்தார்.

இவர் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குவதைத் தட்டிக் கேட்காதவர் - என்று என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அ.தி.மு.க. வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியவை வருமாறு -

நாம் ஆட்சிக்கு வந்தால் காவிரிப் பிரச்சினையில் தமிழர்களின் உரிமையை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நதிநீர்ப் பிரச்சினைகளில் தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்ட கருணாநிதி தவறிவிட்டார். 2-ஜி அலைக்கற்றை ஊழல் மூலம் தமிழகத்துக்குக் கருணாநிதி தலை குனிவு ஏற்படுத்திவிட்டார்.

2-ஜி அலைக்கற்றை ஊழல், மணல் கொள்ளை, கிரானைட் கொள்ளை, காலாவதி மருந்துப் பொருள்கள் விற்பனை ஆகியவற்றின் மூலம் கருணாநிதி குடும்பத்தினர் பல்லாயிரம் கோடி ரூபா சம்பாதித்துள்ளனர்.

மத்திய அரசில் அங்கம் வகித்தும், தமிழக நதிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்க கருணாநிதி முயற்சிக்கவில்லை.

விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள் உள்ளிட்டோர் கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் அனைத்துத் தரப்பினரின் தொழில் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்கப்படும்.

காவிரி டெல்டா விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கருவறை முதல் கல்லறை வரை விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய உழவர் பாதுகாப்புத் திட்டத்துக்கு மீண்டும் புத்துயிர் அளித்து, அதன் பலன்கள் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பிறரை வாழ வைத்தவர்கள் தமிழர்கள். வாழவைத்த தமிழர்களை வஞ்சிப்பவர் கருணாநிதி. இவர் கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்தார். தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவதைத் தட்டிக் கேட்காதவர் கருணாநிதி.

தன் குடும்ப வருமானம் பாதிக்கும் என்பதால், காவிரிப் பிரச்சினையில் கர்நாடகத்தின் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க கருணாநிதி வலியுறுத்தவில்லை.

கருணாநிதியின் செயல் இப்படியே தொடர்ந்தால் தமிழகத்தில் உள்ள அனைவரையும் விரட்டிவிடுவார்.

கருணாநிதியின் குடும்பத்தை அகற்ற ஒரே வழி தேர்தல். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கருணாநிதியின் குடும்பத்தை அகற்ற வேண்டும்

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மொஹாலி வந்த பாக். பிரதமரை மன்மோகன் வரவேற்றார்

புதுடில்லி,மார்ச் 31

இந்தியா-பாகிஸ்தான் இடையிலான உலகக் கிண்ணக் கிரிக்கெட் அரை இறுதி கிரிக்கெட் போட்டியைக் காண்பதற்கு நேற்று மொஹாலி வந்த பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானியை இந்திய பிரதமர் மன்மோகன் சிங் வரவேற்றார்.

கிலானி குழுவினரை மைதானத்தில் வரவேற்புப் பகுதிக்கு வெளியே சிங் வரவேற்றார். சிங்குடன் ஐசிசி தலைவர் சரத் பவார், பிசிசிஐ தலைவர் ஷஷாங்க் மனோகர் மற்றும் பஞ்சாப் கிரிக்கெட் சங்கத் தலைவர் ஐ.எஸ். பிந்த்ரா ஆகியோர் உடன் இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகச் சொற்பொழிவு

வடமராட்சி,மார்ச்31

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வாரந்தோறும் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'சிந்தனை செய்' என்னும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவு இடம்பெறும்.

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவை உறுப்பினர் அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் செஞ்சொற்செல்வர் இரா.செல்வவடிவேல் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

(த-236)

## பட்டிமன்றக் குழுவின் பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ்.பட்டிமன்றக் குழுவினர் நடத்தும் மாவட்டப் பேச்சுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

திறந்த போட்டியாக நடத்தப்படவுள்ள இந்தப் பேச்சுப் போட்டியில் பங்குபற்றவிரும்புபவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட தமது விண்ணப்பங்களை 'பொன் சுகந்தன், தலைவர், யாழ். பட்டிமன்றக் குழு, 5/2 வைமன் வீதி, நல்லூர்' என்ற முகவரிக்கு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ம-9)

## ஆசிரியருக்கான செயலமர்வு

தென்மராட்சி,மார்ச்31

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கேத்திர கணித உபகரணப் பாவனை தொடர்பான செயலமர்வு - தொகுதி II நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ளவுள்ள ஆசிரியர்களின் விவரங்களை அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(ம-207)

## கணினிப் பயிற்சிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்31

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினால் அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இலவச கணினிப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தக் கற்கைநெறிக்குப் பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதியில் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாதவர்கள் பேரவையின் உப தலைவர் செ.மார்க்கண்டுடன் தொடர்புகொண்டு விண்ணப்பிக்கலாம் என்று பேரவையின் செயலாளர் வே.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

(ம-313)

**உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம்**
**மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி**

**6வீரர்கள் 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட சுற்றுப்போட்டி**

இடம்:- இராமநாதன் கல்லூரி மைதானம், மருதனார்மடம்
விண்ணப்பப் படிவங்கள் பெற்றுக் கொள்ளும் இடங்கள்:-
லீலா புக்சொப் மருதனார்மடம், கழக மண்டபம்.
விண்ணப்ப முடிவுத்திகதி:- 10.04.2010.
போட்டிகள் யாவும் விடுமுறை நாள்களில் நடைபெறும்.
தொடர்பு இலக்கம்:-0776414300, 0776119540

**50ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்**



**K.தவம்**
(வள்ளம் செய்யும் ஆசாரியார்)
இன்று (31.03.2011) வியாழக்கிழமை தனது 50ஆவது பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடும் எமது அப்பா இன்னும் பல ஆண்டுகள் நீடூழிவாழ மடுமாதா துணை வேண்டி அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

மேரியோசப் றோட்,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
(2796) (28)
- பிள்ளைகள்

**க.பொ.த. உயர்தரம் - பிரிவு 2013 இற்கான அனுமதி**

எமது பாடசாலையில் க.பொ.த. உயர்தரம் - 2013 கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவில் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் விண்ணப்பப் படிவத்தினை பாடசாலையில் பெற்று 05.04.2011 அன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அதிபர்
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
(சி/5777076) (28)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 | 01 |
| ★ | ★ |
| 03 | 03 |
| ★ | ★ |
| 1969 | 2011 |

(35-27) (2793)

கடந்த (01.03.2011) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் தங்கராசா சிறிகரன்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 31.03.2011 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

59, லோட்டஸ் றோட்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 | 01 |
| ★ | ★ |
| 04 | 03 |
| ★ | ★ |
| 1922 | 2011 |

**அமரர் செல்லப்பா தம்பிஐயா**

ஐயா நீங்கள் எம்மை வீட்டுப் பிரிந்தாலும்
எம் மனதை விட்டுப் பிரியவில்லை
நேற்றுப்போலுள்ளதையா உம் பிரிவு - ஆனால்
திங்கள் ஒன்று கடந்தது இன்றுடன்
ஆறு பிள்ளைகளைப் பெற்றெடுத்த நீர் ஆண்டவருக்கு
அர்ப்பணித்தீர் தலைப்பிள்ளையை
நாமோ கடல் கடந்து உம் அன்புக்கு மட்டுமல்ல
உம் பூதவுடலையேனும் காணவில்லையே என ஏங்குகின்றோம்
அமைதியான முகம் கனிவான பேச்சு
ஆலமரமாய் பதிந்திருக்க தவிக்கும் எம்மனதை
நாமோ எம்மோடு... எமக்குள்ளே நீர் வாழ்வதாக
தேற்றிக் கொண்டோம் ஐயா,
உம் நினைவு நாள்கள் எத்தனை நகர்ந்தாலும்,
நாம் வாழும் வரை எம்மோடு நீர் வாழ்வீர் தெய்வமாக
பிரிந்தும் பிரியாத நினைவுகளுடன்

விமலாதேவி (கனடா),
சிவகுமார் (பிரான்ஸ்).
(35) (2735)
குடும்பத்தினர்,
சுன்னாகம்.

**TRAINEE BANKING ASSISTANT**

HNB வங்கி பயிலுனர் உதவியாளர் பதவி விண்ணப்பங்களை இணையத்தின் ஊடாக அனுப்பி கொள்ளலாம்

முடிவு திகதி 03.04.2011

ARRUL GLOBAL EXPRESS
T.P : 0212226113
01, பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.

**இந்தியா வீசா விண்ணப்பம்**

இந்திய வீசாவிற்கான விண்ணப்பங்களை (Online Visa Applications)இணையத்தளத்தின் ஊடாக உடனுக்குடன் அனுப்பி கொள்ளலாம்.

ARRUL GLOBAL EXPRESS
T.P : 0212226113
01, பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்,
இந்திய வீசா அலுவலகத்திற்கு அருகாமை

**தேவை**

கணினி அறிவுடைய
களஞ்சியக் காப்பாளர் தேவை.
சா.கலிஸ்ரஸ், குப்பிழான்,
T.P -0778996559

**தேவை**

டிமோ பட்டா Full body மாத வாடகைக்கு
டிரைவருடன் தேவை.
சா.கலிஸ்ரஸ், குப்பிழான்,
T.P -0778996559

**கார் விற்பனைக்கு**

நல்லநிலையில் உள்ள 8 Sri 5576 மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : கா.சந்திரகாந்தன்
கல்லூரி வீதி, பருத்தித்துறை.
தொ.பே. 0770760717

**கண்டுபிடிக்கப்பட்டுள்ளது**

எமது சம்மேளனத்தில் இரண்டு கட்டாக் காலி மாடுகள் பிடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் பெற்றுக் கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: [illegible] விவசாய சம்மேளனம்,
இணுவில் தெற்கு. தொ.இல:0778693445

**பணியாளர் தேவை**

தகுதி - அனுபவம் - திறமை மிக்க
கீழ்க்காணும் பணியாளர்கள் உடன் தேவை.

- ஓவ்செற் இயந்திர இயக்குநர்கள் (KORD, HAMADA)
- கணினி இயக்குநர்கள் (Photoshop, Corel Drow, Page Maker) இல் திறமையானவர்கள்.
- புத்தகம் கட்டுநர்கள் (Binders)

மேற்காணும் பணிகளில் பழக ஆர்வமுள்ளவர்களும் உடன் தொடர்புகொள்ளவும்.

அலுவலக நேரத்தில் உடனே தொடர்பு கொள்ளவும்.
நோபிள் பிறின்ரேர்ஸ்
817, ஆஸ்பத்திரி வீதி,
(முனைவைச்சந்திக்கும் கோவில் வீதி சந்திக்குமிடையில்)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 222 0386

**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்
1281 நீலம்
துலாம் 03 06 09 23
29-03-2011
ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 245,544 | 20/- | 4,910,880/- |
| 2 இலக்கங்கள் | 22,592 | 40/- | 903,680/- |
| 1 இல. + லக்கினம் | 22,363 | 60/- | 1,341,780/- |
| 2 இல. + லக்கினம் | 2,038 | 200/- | 407,600/- |
| 3 இலக்கங்கள் | 597 | 1000/- | 597,000/- |
| 3 இல. + லக்கினம் | 57 | 10,000/- | 570,000/- |
| 4 இலக்கங்கள் | 02 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 01 | 2,000,000/- | 2,000,000/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 11,130,940/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 661 | | 728,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 293,855 | | 11,859,440/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

**இரண்டாவது வாய்ப்பு**
வெற்றி இலக்கங்கள்
மீனம் 27 33 35 52
ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 657 | 500/- | 328,500/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 300,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 661 | | 728,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 400,000/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளையில் ஹொக்கி சுற்றுப்போட்டி; யாழ்ப்பாணப் பாடசாலைகள் பங்கேற்பு

## இன்று புறப்படுகின்றன அணிகள்

வலி.வடக்கு, மார்ச் 31

இலங்கை பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் அகில இலங்கை ரீதியில் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தவுள்ள 15 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் கலந்துகொள்வதற்கு யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகள் முதல் தடவையாகக் கலந்துகொள்கின்றன.

எதிர்வரும் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் மாத்தளையில் நடைபெறவுள்ள இச்சுற்றுப் போட்டியில், யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்குஇடையே நடைபெற்ற ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற பாடசாலை அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

ஆண்கள் பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியனவும்-

பெண்கள் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியனவும் கலந்துகொள்ளவுள்ளன.

மாத்தளையில் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ள இப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள அணிகள் இன்று தமது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளன. (ஐ-86)



யாழ். வலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சம்பியனான முத்துத்தம்பி மகா வித்தியாலய அணியினர் மற்றும் பயிற்றுநர். (23)

# யாழ்.பிரதேச உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி; சென்.அன்ரனிஸ் அரையிறுதிக்குள் நுழைந்தது



யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்.பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி அரை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு அரை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

இந்தப் போட்டிக்கு மத்தியஸ்தராக ஆனந்தராசாவும் உதவி மத்தியஸ்தர்களாக கிருபகரன், தமிழ்ச்செல்வன் ஆகியோரும் கடமையாற்றினர். (ஐ-23)

# விளையாட்டு விழா

நாவற்குழி, மார்ச் 31

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா எதிர்வரும் 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, என்ரிப் பிரதித் திட்டப் பணிப்பாளர் ச.குகதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் சு.கனகராஜா, யாழ்.மாட்ட விளையாட்டதிகாரி ஏ.எவ்.சிரூபசிங்கம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்துக்கும் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத்துக்கும் இடையிலான உதைபந்தாட்டத்தின் இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளது.

விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பும் நடைபெறவுள்ளது. (ம-121)

# மெய்வன்மைச் சங்க ஏற்பாட்டில் பாடசாலைகளுக்குத் தடகளப் போட்டி

வலி.வடக்கு, மார்ச் 31

இலங்கைப் பாடசாலைகள் மெய்வன்மைச் சங்கத்தினால் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படவுள்ள தடகளப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏற்கனவே இலங்கைப் பாடசாலைகள் மெய்வன்மைச் சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டு பாடசாலைகளுக்கான விண்ணப்பங்கள் பாடசாலைகள் மெய்வன்மைச் சங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பாடசாலைகள் மெய்வன்மைச் சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளாத பாடசாலைகளும் கூட இப்போட்டிகளில் கலந்து கொள்ளமுடியும் எனவும்-

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் பாடசாலைகள் இலங்கைப் பாடசாலைகள் மெய்வன்மைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு கலந்து கொள்ளமுடியும் எனவும் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ-86)

# பிரதேச செயலகங்களுக்கு இடையே பல்வேறு போட்டிகள் ஏப்.3 இல் ஆரம்பம்

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டம், பூப்பந்து, ஹொக்கி, கூடைப்பந்து போட்டிகள் எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

மேசைப்பந்தாட்டம் 3ஆம், 4ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியிலும் ஹொக்கி, பூப்பந்து 9ஆம், 10 ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் கூடைப்பந்தாட்டம் 16ஆம், 17ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன என்று யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி ஜே.எவ்.றூபசிங்க தெரிவித்துள்ளார். (ஐ-23)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் கந்தையா இராசதுரை

மண்ணில் மகிழ: 20.08.1943
மண்ணில் பதற: 13.03.2011

தந்தையே!
தங்கள் கடமை முடிந்ததென்று
பூவுலகு விட்டுச் சென்றீர்களோ!
எமக்கு எண்ணிலடங்கா
சேவை செய்த தங்களுக்கு
எந்நாளும் எம் கண்ணீர்ப்
பூக்கள் உரித்தாகும்.

கடந்த (13.03.2011) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் (28.03.2011) திங்கட்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம் பெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.03.2011) வியாழக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு. (சி/577067)(38-19-26)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்" வெளி. 14:13

I.C.M சபையின் தலைமைப் போதகர் Rev. டானியல் தம்பதியரின் அன்பு மகன் ஏதித்தியா 22.03.2011 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு பீலிவேஸ் சேச்சின் சார்பில் எமது கண்ணீர் அஞ்சலியைத் செலுத்துகின்றோம்.

கிறிஸ்துவின் பணியில்
Fr.P.Arumainayagam

(2776) (41-26-19)

## NET CABS

Call to 021 320 2202 or 077-5934168. Wedding Cars,Vans for hire. Cheap rates.Efficient Service.

FWC

## தொண்டமனாறு வெளிக்கள நிலையம் ஆண்டுப் பொதுக்கூட்டம் தீர்மானங்கள்

நடைபெறவிருக்கும், தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்குத் தீர்மானங்களை முன்மொழிந்து அனுப்ப விரும்புபவர்கள் அவற்றை 15.04.2011 ஆம் நாள் வெள்ளிக்கிழமைக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

ஆசிரியர்,
சென். ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

எம். எம். அல்போன்ஸ்
செயலாளர்,
தொண்டமனாறு
வெளிக்கள நிலையம்.

சி/577072) (45)

## தவறிவிட்டது

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த செல்லையா சோதிநாதன் என்பவரின் தேசிய அடையாள அட்டையும் (502141708V) மற்றும் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் என்பன அடங்கிய பேர்ஸ் அளவெட்டிக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. [illegible]

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும்
கௌரி அழகுமாடம் உரிமையாளருமாகிய
செல்லையா இராமேஸ்வரன்

அவர்களின் மறைவைக் கேள்வியுற்றுத் துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

(40)(சி/577073)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி நடராஜா ராஜேஸ்வரி

மலர்வு: 19.12.1936
உதிர்வு: 04.11.2010



அம்மா எப்படி இருக்கிறீர்கள்
அம்மா, உங்கள் கலகலத்த குரலைக்
கேட்பதற்கு ஆசையாக இருக்கிறது
அம்மா ஏனம்மா இவ்வளவு
சீக்கிரமாக எங்களை விட்டுப் பிரிந்து
போக மனம் வந்தது
நீங்கள் எதிர் பார்த்ததை நேரில் பார்க்க
கொடுத்து வைக்க வில்லையே!.
நீங்கள் ஆசையாக எதிர்பார்த்த உங்கள் மருமகனையும்
பேர்த்தியையும் பார்ப்பதற்கு
மூன்று மாதங்கள் இருக்க ஏனம்மா அவசரப்பட்டீர்கள்!
உங்கள் இரு பிள்ளைகளின் பேரன், பேர்த்தியைப்
பார்த்த நீங்கள் என்னுடைய பிள்ளையை
பார்க்காமல் போய் விட்டீர்கள்
உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சில்
அம்மா என்று உங்களை நாம் காண்போம்
அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

கணவர், பிள்ளைகள்,
பேரன், பேர்த்திமார்.

(40-26-19)(சி/577071)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையல் இயந்திரம் திருத்தும் சேவை நிலையம் ஆரம்பம்

பளை, மார்ச் 31

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையால் தையல் இயந்திரம் பழுது பார்த்தல் சேவை நிலையம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களின் நலன் கருதி இந்தச் சேவை நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக பேரவையின் செயலாளர் வே. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (ம-313)

## வங்கியியல் கற்கை நெறிகள்
## CBF, DBF

- வங்கியியல் துறையில் திறமைவாய்ந்த விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படும்.
- இக்கற்கை நெறிக்குரிய பரீட்சைக்கான பாடத்திட்டங்கள் யாவும் கற்பிக்கப்படும்.
- வங்கியியல் கற்கை நெறியைப் பதிவு செய்வதற்குரிய தகைமைகளாவன:

க.பொ.த. சாதாரண தரத்தில் ஆறு பாடம் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். இதில் கணிதம், வர்த்தகம், கணக்கியல், ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றில் திறமைச் சித்தி இருத்தல் வேண்டும்.

**முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.**

நிர்வாகி,
**புதிய உயர் கல்லூரி,**
ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 8148

## கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்தாபன உரிமையாளர்
பரராஜசிங்கம் சிறிகரன் அவர்களின் அன்பு மாமியார்
**திருமதி சௌந்தரராஜா மங்கையர்க்கரசி**
அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

Jaffna Traders,
J.T ரான்ஸ்போட் ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண விவசாயத் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளராகப் பணிபுரியும் அ.கிருபாகரன் அவர்களின் அன்புத் தந்தை

**சரவணமுத்து அருணாசலம்**

(30.03.2011) நேற்று புதன்கிழமை காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

வடமாகாண விவசாய அமைச்சு, திணைக்கள நண்பர்கள்.

## விருட்சத்தின் நிழல் சாய்ந்து எட்டாம் ஆண்டு


| மண்மகிழ | | மனம்நெகிழ |
|---|---|---|
| 1944 | | 2003 |
| ★ | | ★ |
| 05 | | 03 |
| ★ | | ★ |
| 19 | | 31 |



**அந்தோனிப்பிள்ளை செலஸ்தீன்** (இரணைப்பாலை)

ஆண்டுகள் எட்டு ஆனாலும்
ஆறாத்துயர்கள் எத்தனை அப்பா?
ஆறுதல் அளிக்க எங்களோடு
நீங்கள் இல்லை அப்பா
ஆயினும் உங்கள்
ஆத்ம சாந்திக்காக
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

பாசத்தின் பிரிவால் துயருறும்
இளவாலை. **குடும்பத்தினர்.**




யாழ்ப்பாணம், மார்ச் 31

மண்டைதீவு வழிப்பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. (ற-7)

***

அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திரு விழா எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 16 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

அத்துடன் திருவிழாக்காலங்களில் மாலை 6 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை 'விநாயகர் மகிமை'' எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவினை சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் நி.நித்தியதசீதரன் நிகழ்த்துவார். (ற-313)

***

நவாலி, மார்ச்.31

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய திருக்குளிர்த்தி வைபவம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ற-100)

***

அல்வாய், மார்ச் 31

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பூசை நிறைவு பெற்றதும் "மகாபாரதம்" தொடர் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இந்தச் சொற்பொழிவை பண்டிதர் பொன் சுகந்தன் நிகழ்த்தவுள்ளார். (ற-36)

***

யாழ்.அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராசா வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தின் பெருந்திருவிழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத்திருவிழாவும், 14 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-7)

## பல்கலை அனுமதி பெற தவறிய மாணவருக்கு விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 31

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் இலங்கைத் தேசிய மனித வள அபிவிருத்தி பேரவையின் ஏற்பாட்டில் விசேட கருத்தரங்கு ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஜி.சீ.ஈ. (உ/த) பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதியைப் பெறத் தவறிய மாணவர்களுக்காக நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் தேசிய மனித வள அபிவிருத்திப் பேரவையின் தலைவர் நிமால் பொப்பகே கலந்துகொண்டு சிறப்புரை வழங்குவார்.

கருத்தரங்கில் தொழில்நுட்பவியல் கல்லூரி தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, தொழிற்பயிற்சி அதிகார சபை, இளைஞர் சேவைகள் மன்றம், ஈ.சொவ்ற், ஏ.பி.எஸ்.எஸ்(A.P.S.S) சர்வதேச வலையத்தள நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் கலந்து தமது செயற்பாடுகள், கற்கை நெறிகள் தொடர்பில் கருத்துக்களை வழங்குவர். (ஒ-10)

## கண்ணீர்க் காணிக்கை

கருணையுள்ள பிள்ளைகளைப் பெற்று
சிரத்தையுடன் வளர்த்து
மண்ணின் சிறப்புக்காக வளர்த்துவிட்ட எம் சீமான்
மண்ணின் மடியதனில் வீழ்ந்த நிலை கண்டு
எம் மனம் துடிக்கின்றதே!

எமது நண்பர்களான காலஞ்சென்ற கமலகுமார் மற்றும் கிருபாகரன், தயாபரன் ஆகியோரின் அன்புத் தந்தை

**சரவணமுத்து அருணாசலம்**

நேற்று (30.03.2011) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயர் அடைவதோடு அவரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரார் விளையாட்டுக் கழகம்,
நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம்,
நெடுந்தீவு. செந்தமிழ் கல்வி நிலையம்.

## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் விசேட கல்வி ஆசிரியர்
**ச.சத்திதரன்**
அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

விசேட கல்வி ஆசிரியர்களும், ஆசிரிய ஆலோசகரும்,
**தென்மராட்சி கல்வி வலயம்.**

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து அருணாசலம் (ஆசாரி சரவணமுத்து)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் நெடுந்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து அருணாசலம் நேற்று (30.03.2011) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - நல்லம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் சோதிமலர், காலஞ்சென்ற கமலகுமார் மற்றும் கிருபாகரன், ஜெயமலர், தயாபரன், கவிமலர் ஆகியோரின் தந்தையும் பிரபாகரனின் அன்பு மாமனும் சண்முகம், காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் சாந்தலிங்கம், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் கௌரியம்மா, மயிலாம்பிகை, பரமலிங்கம், பத்மநாதன், சோமசுந்தரம், நீலாம்பிகை, தயாளேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஜெனப்பிரியா, சிந்துஜப்பிரியா, சுஜிப்பிரியா, யதுப்பிரியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2011) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நெடுந்தீவு கட்டராமன் சல்லி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெடுந்தீவு. **தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி சௌந்தரராஜா மங்கையர்க்கரசி



புங்குடுதீவு 08 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை மற்றும் கொழும்பை வதிவிடமாவும் கொண்ட திருமதி சௌந்தரராஜா மங்கையர்க்கரசி 28.03.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் - தங்கக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சௌந்தரராஜாவின் (கிளி, யாழ். கபே- திருகோணமலை) அன்பு மனைவியும் தயாபரன் (லண்டன்), தயாராஜினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிறிகரன் (உரிமையாளர், Jaffna Traders, யாழ். வணிக நிலையம்,), குமுதினி ஆகியோரின் அன்பு மாமியும் ஜாகவன், ஜாகுலன், நயனன், மேகலன், துருவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம், சண்முகலிங்கம், தனலட்சுமி மற்றும் திருநாவுக்கரசு, புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரோஜினிதேவி, ஜெயராஜசிங்கம், புலேந்திரன், கோணேஸ்வரன், சண்முகராஜா, சரோ ஜினிதேவி, திலதாவதி (சாந்தா), இராசலட்சுமி (நவம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.03.2011) வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு இறுதிக்கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு பி.ப. 3.30 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மனிங்பிளேஸ்,*
*வெள்ளவத்தை.* தகவல்:
*0112- 363547.* (35) (2798) குடும்பத்தினர்.

**வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை**

72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்

01.04.2011 தொடக்கம் 15.04.2011 வரை
புத்தாண்டு விசேட சலுகை



லண்டன் 1Kg 750 /=
கனடா, அமெரிக்கா, பிரான்ஸ்,சுவிஸ், டென்மார்க்
ஜேர்மனி, இத்தாலி, நோர்வே
1Kg 900 /=

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service
T.P : 021 222 6113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.தே.கவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டோம்.

அதிக சபைகளைக் கைப்பற்ற எம்மால் முடியாமல் போனாலும் வாக்குகளின் எண்ணிக்கையை எம்மால் அதிகரிக்க முடிந்தது. இதன் மூலம் கட்சிக்கான ஆதரவு மக்கள் மத்தியில் அதிகரித்திருப்பதை எம்மால் உணரமுடிகின்றது.

நாம் ஒற்றுமையாக செயற்படுகின்றோம். எம்மால் வெற்றிபெற முடியும். எனவேதான் எமது கட்சிக்குள் பிளவை ஏற்படுத்த சில சதி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு நான் ஒருபோதும் இடம்கொடுக்கமாட்டேன்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற எமது உறுப்பினர்கள் கிராமமட்டத்தில் கட்சியைக் கட்டி யெழுப்ப பாடுபடவேண்டும். ஊழல் மோசடிகள் இல்லாது வாழ்வதன் ஊடாக எமது உறுப்பினர்கள் ஏனைய சபைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும்.

அனைத்து நடவடிக்கைகளின் போதும் மிகவும் ஒற்றுமையாகச் செயற்பட்டு கட்சியின் நற்பெயரைக் கட்டிக் காக்க உறுப்பினர்கள் பாடுபடவேண்டும். தம்மை தெரிவுசெய்த மக்கள் நலன் களின் மீது அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் சிறப்பான வெற்றியை அடைவதற்கு எமது உறுப் பினர்கள் இப்போதிருந்தே செயலில் இறங்கவேண்டும். மக்களுடன் நெருங்கி செயலாற்றவேண்டும் - என்றார். (ஒ-சி)

## மாநகரசபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டம் பிற்போடப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடமைக்காக முதல்வர் கொழும்பு சென்றுள்ளதால் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என்று உறுப்பினர்களுக்குத் தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

மாநகர சபையால் பத்திரிகை அலு வலகங்களுக்கு அனுப்பப்பட்ட ஒரு குறிப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவித்தது. எதிர்வரும் 5ஆம் திகதி அது நடத்தப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

முதல்வர் இல்லாத சமயத்தில் பிரதி முதல்வர் தலைமையில் கூட்டங்களை நடத்த உள்ளூராட்சி சட்டவிதிகள் அனுமதி அளிக்கின்றன. ஆனால், முதல்வர் இல்லை என்பதைக் காரணம் காட்டி கூட்டத்தைப் பிற்போடுவது உள்நோக்கம் கொண்டது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர். (ஒ-02)

## யுத்தத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என நாம் எண்ணினோம். துரதிர்ஷ்ட வசமாக அவ்வாறு இடம்பெறவில்லை.

யுத்தத்தின் பின்னர் அரசு எம்து கிராமங்களை அபிவிருத்தி செய்வ தற்கு நடவடிக்கை எடுக்காமையானது எதிர்காலத்தில் பயங்கரவாதத்தை விட பெரும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என்பதைக் குறிப்பிடலாம்.

30 வருடகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாம் யுத்தம் நிறைவடைந்த பின்னர் நிம்மதியாக வாழலாம் என்று நினைத்தோம். வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்களுக்குத் தற்போது அந்த நம்பிக்கையும் அற்றுப்போயுள்ளது. யுத்தம் நடை பெற்ற காலத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட எமது விவசாய நிலங்கள் யுத்தம் நிறைவடைந்த பின்னர் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் ஊடாக அபகரிக்கப்படும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இது தொடர்பில் பல மக்கள் எம்மி டம் முறையிட்டுள்ளனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் மீளத் தமது சொந்த இடங்களில் குடியிருக்க முடியாதுபோயுள்ளது. அரசு அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. கொழும்பிலுள்ளவர்களுக்கு பொத்துவிலில் காணிகள் வழங்கப்படுகின்றன. கிழக்கின் உதயம் நிகழ்ச்சியில் எந்தவொரு அபிவிருத்தியும் இல்லை.

பயங்கரவாத யுத்தத்தின்போது இருந்த சூழ்நிலையே இன்றும் உள்ளது. யுத்தம் இன்று இருந்திருந்தால் பரவாயில்லை என்று மக்கள் கூறுகின்றனர். - என்றார் தேரர். (ஒ-சி)

## 3 சிப்பாய்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரும்பிராயைச் சேர்ந்தவரான வெற்றிவேலாயுதம் ரஜனி அல்லது ரஞ்சனி என்ற 24 வயதான இளம் பெண்ணை கோண்டாவிலில் வைத்துக் கடத்தி, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்தார்கள் என்று, இராணுவச் சிப்பாய்கள் மூவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

கொலை செய்தமைக்காக மூவருக்கும் மரண தண்டனை விதித்த நீதியரசர்கள் கடத்தல் மற்றும் பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டுக்களுக்காக மேலதிகமாகச் சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தனர்.

உரும்பிராயில் தமது மாமன், சகோதரனுடன் வசித்து வந்த ரஜனி, 1996 செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி காணாமற்போனார்.

கொழும்பு செல்வதற்கு ஆயத்தமான அவர், அது குறித்து உறவினர்களுக்குத் தெரிவிப்பதற்காக மானிப்பாய்க்குச் சென்றிருந்தார். பின்னர் அவர் வீடு திரும்பவில்லை.

மறுநாள் அவரைக் காணவில்லை என்று பெற்றோரும் உறவினர்களும் தேடினர். பொலிஸாரிடம் முறையிடப்பட்டது. எனினும் இரு வாரங்களாக அவர் பற்றிய தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை.

அதன் பின்னர், சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள் இந்த விவகாரத்தை குடாநாட்டு இராணுவத் தளபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். அப்போது தான் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா, உடனடியாக விசாரணை நடத்தியதன் விளைவாக 13 நாள்கள் கழிந்து கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு அருகில் இருந்த வீடு ஒன்றின் மலசலகூடக் குழிக்குள் இருந்து ரஜனியின் சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவச் சிப்பாய்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர். யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு அப்போதைய காலச் சூழல் காரணமாகப் பின்னர் கொழும்புக்கு மாற்றப்பட்டது.

அவர்களில் மூவருக்கே தற்போது மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்ய முடியாது என்று நீதிமன்றம் ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளது. இதனால் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கான உத்தரவில் ஜனாதிபதி கையெழுத்திட்டதும் அது நிறைவேற்றப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் ஏற்கனவே மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் பலர் இன்னும் தண்டனை நிறைவேற்றப்படாமல் சிறைகளில் உள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பாடசாலைச் சிறுமியான கிருஷாந்தியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின்னர் கொன்ற வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாயும் அவர்களில் அடங்குவார். (உ)

## இராணுவத் தலையீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போல் நட்சத்திரம் கருத்துத் தெரிவித்தார். ''அமைதி என்பது வெளிப்படையாகக் காணப்படும் மௌனம் அல்ல. மனித உள்ளங்களில் அது அனுபவிக்கப்பட வேண்டும். சமாதானம் இருக்கும் இடத்தில் ஒற்றுமையும் ஒன்றித்த நிலையும் இருக்கும்; பயம் இருக்காது. ஆனால், போர் முடிவடைந்து ஒன்றரை ஆண்டுகள் கடந்த போதும் வட பகுதி மக்கள் பயத்துடனேயே வாழ வேண்டியுள்ளது'' என்றார் அவர்.

குடாநாட்டு மக்களின் குடும்ப, சமூக விவகாரங்களில்கூட இராணுவத்தினர் மூக்கை நுழைத்துத் தலையிடுவதே பயத்துக்கான காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். குடும்பச் சண்டைகளில் கூட இராணுவத்தினர் தலையிடுகின்றனர் என்பதை அவர் அங்கு உதாரணமாகச் சுட்டிக்காட்டினார்.

பயம் இருக்கும் இடத்தில் உண்மை, நேர்மை, புரிந்துணர்வு என்பன இருக்காது என்பதையும் அவர் ஆணித்தரமாக அங்கு எடுத்துரைத்தார்.

''நாட்டில் அமைதி ஏற்படுத்தப்பட்டு விட்டதாகக் கூறப்படுகின்ற போதும் வடக்கில் மக்கள் அப்படி நினைக்கவில்லை. அவர்கள் அமைதியினைச் சுவைக்கவில்லை'' என்று அங்கு கருத் துத் தெரிவித்தார் ஊர்காவற்றுறை சென் மேரிஸ் பங்குத் தந்தை அருட்திரு சி.ஜி. ஜெயக்குமார்.

அமைதி ஏற்பட்டுவிட்டபோதும் மண்டைதீவில் 400க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளனர் என்பதை அவர் அங்கு சுட்டிக் காட்டினார்.

''அண்மையில் இளம் ஆசிரியர் ஒரு வரின் மரணத்தில் சந்தேகங்கள் ஏற்பட்டன. ஆனால், அது தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. தடுப்பு முகாம்களில் விசாரணை இன்றிப் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் திடீரென இறந்துள்ளனர். காரணம் தெரியவில்லை. அப்படி இருக்கும் போது தமிழ் மக்கள் எப்படி அமைதியை உணர, சுவைக்க முடி யும்?'' என்று கேள்வி எழுப்பினார் அருட் தந்தை.

சிங்கள - தமிழ் மக்கள் இடையே புரிந்துணர்வைக் கட்டி எழுப்ப பௌத்த மதம் அதிகம் பங்காற்ற முடியும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் பேசிய பௌத்த பிக்கு ஒருவர், ''30 வருடங்களாகப் போர் இடம்பெற்றுள் ளது. இப்போது அனைத்தும் 24 மணி நேரத்தில் சரியாகிவிடும் என்று எதிர்பார்க்க முடியாது'' என்றார். (உ-14)

## 22உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான வேட்பு மனுக்களைக் கோரும் வர்த்தமானி தேர்தல் ஆணையாளரால் நேற்று முன்தினம் வெளியிடப்படவிருந்தது.

இருந்தும், சக உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிக் காலத்தை மேலும் ஆறு மாதங்களால் நீடிப்பதாக அரசு தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்ததையடுத்து வர்த்தமானி வெளியிடுவது கைவிடப்பட்டது எனத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள 66 உள்ளூராட்சி சபைகளுக்கும் நீதிமன்றத் தீர்ப்பு வந்ததும் தேர்தல் நடத்தப்படும் எனவும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-சி)


## மரண அறிவித்தல்

### வினாசித்தம்பி செல்வரத்தினம்

(இளைப்பாறிய தபாலதிபர்)



வாரிவளவு, காரைநகரைப் பிறப்பிடமாகவும், 58, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி செல்வரத்தினம் (30.03.2011) அன்று காலமானார்.

அன்னார் பத்துமாதேவியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆசிரியர் வினாசித்தம்பி பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஐயம்பெருமாள் மற்றும் நாகம்மா ஆகியோரின் மருமகனும், டாக்டர் சாரதாதேவி, காலஞ்சென்ற ஆசிரியை சாவித்திரிதேவி மற்றம் சிவமணி, டாக்டர் சரோசினி, பத்துமநாதன் ஆகியோரின் சகோதரரும் டாக்டர் ராசாதன் மகேசன், டாக்டர் ரத்தினகுமார், சாரதா ஆகியோரின் மைத்துனரும், டாக்டர் கல்யாணி, சிறிஸ்கந்தன், காஞ்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், டாக்டர் கண்ணன், அக்னிஸ்கா, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், கஸ்தூரி, மயூரி, குணா, கேலணாதேவி, ஆகியோரின் பாசமிகுப் பேரனும், டாக்டர் தமயந்தி, டாக்டர் குமணன், ஆகியோரின் மாமனும், சுகந்தன், வசந்தன் ஆகியோரின் பெரியதந்தையும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், சுப்பிரமணியம், கந்தசாமி ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி அமிர்தவல்லி தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை அவர்களின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.04.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 58,பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.இல
0212223930.

தகவல்:
திருமதி பத்துமாவதி
செல்வரத்தினம் (மனைவி)



## உடன் தேவை

ஊர்ச்சேவல், கல்பேட், விறாத்துக்குஞ்சு என்பன
[illegible]
158/4, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்

### டேவிட் அற்புதம் (நோபேர்ட்)



குருநகர், டேவிட் றோட்டைப் பிறப்பிடமாகவும், திருநகர், ராஜசிங்கம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட டேவிட் அற்புதம் (நோபேர்ட்) நேற்று (30.03.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டேவிட்- பிலோமினா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மனுவேல்- அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திரேசாவின் அன்புக் கணவரும் லதா, சிறிகாந், ராஜா, லக்சன், மேகலா(பிரான்ஸ்), கொன்சலா ஆகியோரின் அருமைத் தந்தையும், பாமதேவன், ஜினா, ஜென்சி, விமலினி, டிங்குமார் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனும் பெனடிற், அல்பிறேற், காலஞ்சென்ற எட்வேட், மற்றும் யூலியற், பேனாட், ஜெராட் (பிரான்ஸ்), சந்தியாப்பிள்ளை, டோமினிக் (சுவிஸ்), சோபனா, தாத்தா, ரத்தினா, ராசாத்தி, யோகராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று 31.03.2011 வியாழக்கிழமை யாழ்.மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பிற்பகல் 4.30 மணியளவில் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

72/2,இராஜசிங்கம் வீதி,
திருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்: 021-5679933, 021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com
இணைய முகவரி: www.uthayan.com

# காவலிலுள்ள தமிழ் இளைஞர்களின் பட்டியலை வெளியிட அரசு தயக்கம் காட்டுவது ஏன்?

## விக்கிரமபாகு கருணாரத்ன கேட்கிறார்



கொழும்பு, மார்ச் 31

சரணடைந்த மற்றும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் பெயர் விவரங்களை அரசு வெளியிடத் தயங்குவது ஏன்? - என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன கேள்வி எழுப்புகிறார்.

வெளிநாடுகள் இவை தொடர்பான விவரங்களைக் கேட்டபோது அரசு இவை தம் வசம் இருக்கின்றன எனத் தெரிவித்தது. மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுகளின்போது இத்தகவல்கள் பயங்கரவாதப் புலனாய்வுத் திணைக்களத்தின் வவுனியா அலுவலகத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என அரசு உறுதியளித்தது.

ஆனால் உறுதியளித்தபடி பெயர் விவரங்கள் எதனையும் அரசு வெளியிடவில்லை. இதேவேளை, இவ்விவரங்களை வெளியிடுமாறு ஜே.வி.பியும் அரசை வலியுறுத்தி இருந்தது எனவும் விக்கிரமபாகு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பாக அரசு வெவ்வேறான கருத்துகளைத் தெரிவிக்கின்றது.

வெளிநாட்டவர்கள் கேட்கும்போது அனைத்து தகவல்களும் எம்மிடம் இருக்கின்றன எனக் கூறும் அரசு, அரசியல் கட்சிகள் கேட்கும் போது மட்டும் ஏன் மௌனம் சாதிக்கின்றது? இனியும் காலம் தாமதிக்காமல் அரசு பெயர்ப் பட்டியலை வெளியிடவேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பாகத் தம்மிடம் முழுமையான தகவல்கள் இல்லை என அரசு கூறுவது வேடிக்கைத் தனமாகும். ஏனெனில், கைதுசெய்யப்பட்டவர்கள் எந்தெந்த சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டார்கள் என்பது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் அறிக்கைகள் இருக்க வேண்டும்.

புலிச் சந்தேக நபர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களின் விவரங்கள் பாதுகாப்புச் செயலாளரிடம் இருக்க வேண்டும். அதேபோன்று சிறைச்சாலை ஆணையாளரிடமும் அனைத்து தகவல்களும் இருக்கும். குறிப்பாக வடக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்கள் வடமாகாணத்துக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி, பொலிஸ் ஆகியோரிடம் இருக்கும்.

இந்நிலையில், அரசு தங்களுக்குத் தெரியாது எனக் கூறுவது ஆச்சரியமான கதையாகும்.

மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர் விவரங்கள் எனக்கு முழுமையாகத் தெரியும். அது மட்டுமன்றி எமது சி.ஐ.டி.பிரிவினருக்குத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் உறவினர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 4 ஆயிரம் பேரின் விவரங்கள் எங்களிடம் உள்ளன.

- இப்படி அவர் தெரிவித்தார்.

அதேவேளை, அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றுக்கிடையில் அண்மையில் இடம்பெற்ற பேச்சின்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்கள் வவுனியா பயங்கரவாத புலனாய்வுத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ளன என அரசு கூறியபோதிலும் இதுவரை அங்கு எதுவித பட்டியலும் இல்லை என சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது படையினரிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் 11 ஆயிரத்து 900பேர் சரணடைந்தனர் என்றும் அவர்களுள் 7ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு புனர்வாழ்வுப் பயிற்சி வழங்கப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-சி)




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவும் சாத்தியம் உள்ளது

# பொன்சேகா சுகவீனம் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,மார்ச் 31

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சுகவீனம் காரணமாக நேற்று நீதிமன்றில் ஆஜராகாதபடியால் வெள்ளைக் கொடி விவகார வழக்கை ஏப்ரல் முதலாம் திகதிவரை மேல் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

வெள்ளைக்கொடி விவகார வழக்கு நேற்று மேல்நீதிமன்ற நீதிபதிகளான தீபாலி விஜேசுந்தர, வராவெவ, சர்பிக் ரஷீக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதன்போது பிரதிவாதியின் சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி, சரத் பொன்சேகா சுகவீனம் காரணமாக நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கவில்லை என்றும் வழக்கை ஒத்திவைக்குமாறும் கேட்டுக் கொண்டார். இதனைக் கவனத்தில் எடுத்த நீதிமன்றம் வழக்கை ஏப்ரல் முதலாம் திகதிவரை ஒத்திவைத்தது. (த-சி)

# தமிழ் மக்கள் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு வேண்டும்

## அரசிடம் திஸ்ஸ விதாரண கோரிக்கை

தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வைப் பெற்றுக் கொடுக்க அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு இலங்கை சமசமாஜக் கட்சியின் தலைவரும், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சித்துறை சிரேஷ்ட அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இதற்கென சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இடம்பெற்றுவரும் பேச்சுக்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

அரச லிகிதர் சேவைகள் சங்கத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசு முன்னெடுக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சமசமாஜக் கட்சி தொடர்ந்து ஆதரவு வழங்கும் - என்றார்.(த-சி)

# இலங்கைப் பணிப்பெண் மீது குவைத்தில் பாலியல் வல்லுறவு

கொழும்பு,மார்ச் 31

இலங்கைப் பணிப்பெண் ஒருவர் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் ஒன்று குவைத் நாட்டில் இடம் பெற்றுள்ளது.

பிரஸ்தாப பெண் தான் பணியாற்றும் வீட்டிலிருந்து வெளியே வந்தபோது இனந்தெரியாத நபர்கள் மூவர் அவரைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர் என்று குவைத் சிற்றி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் 28 வயது மதிக்கத்தக்க குறித்த பெண் அந்நாட்டுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் என்றும் பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் அந்தப் பத்திரிகை கூறுகின்றது.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புத் தேடிச் செல்லும் இலங்கைப் பெண்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்பதை இவ்வாறான சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.(த-சி)

# மாணவர்கள் ஆர்ப்பாட்டம் கிழக்குப் பல்கலை மூடப்பட்டது

மட்டக்களப்பு,மார்ச் 31

மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதை அடுத்து பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரும் வரை மூடப்பட்டுள்ளது.

சம்பவம் பற்றிக் கூறப்படுபவை வருமாறு:-

பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்த தமிழ் - சிங்கள மாணவர்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் இரவு வாக்குவாதம் ஏற்பட்டது. இருந்தபோதும், இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பல்கலைக்கழக வளாகத்தில் இருந்த பொலிஸார் திடீரென விடுதியில் நுழைந்து வாக்குவாதத்தில் ஈடுபட்ட தமிழ் மாணவர்கள் 5 பேரைத் தாக்கினராம்.

அதனையடுத்து, நேற்றுக் காலை 10 மணியளவில் மாணவர்கள் மீது பொலிஸார் மீண்டும் தாக்குதல் நடத்தினர். இதனைக் கண்டித்தும், பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து பொலிஸார் வெளியேற வேண்டுமென்று கோரியும், கிழக்குப் பல்கலைக்கழக அனைத்து வளாக மாணவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களைக் கலைக்கும் வகையில் பல்கலைக்கழக வளாகத்தைச் சுற்றி 400க்கும் அதிகமான பொலிஸார் நிறுத்தப்பட்டனர்.

இதன் பின்னர் பொலிஸாருக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்தினர்களுக்குமிடையில் பேச்சுகள் இடம்பெற்றன. உடனடியாக இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாதமையால் மறு அறிவித்தல் வரை பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதுடன், பல்கலைக்கழக வளாகத்தினுள் மாணவர்கள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (த-சி)

# நிகழ்வுகள்

### தந்தை செல்வா நினைவு வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 31

தந்தை சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் 113 ஆவது பிறந்த தினத்தில் வாழ்வுக்கும், சேவைக்கும் இறைவனுக்கும் நன்றி செலுத்தும் வழிபாடு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுண்டுக்குளி புனித யோவான் ஸ்நானகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் மாதகல் தோமையர் ஆலயத்தின் அருட்தந்தை எஸ்.எம்.பி ஆனந்தகுமார் அருளுரை நிகழ்த்தவுள்ளார். (ற-313)

### அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 31

அதிபர்களுக்கான தர முகாமைத்துவக் கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ள அதிபர்கள் அரச பாடசாலைகளின் பௌதிக வளங்கள் பற்றிய ஆய்வுப் படிவத்தையும் தம்முடன் [illegible] பணிப்பாளர் [illegible] அறிவித்துள்ளார். (ற-311)

### கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமான மார்ச் மாதத்துக்குரிய மாதாந்த மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வந்த சர்வமத சம்மேளனக் குழுவினர் தமிழ், முஸ்லிம் மக்களுடன் நேற்றுச் சந்திப்பு

## இடம்பெயர்ந்தவர்களின் அவலங்களைக் கேட்டறிந்தனர்




யாழ். வருகை தந்த சர்வ மதக் குழுவினர் நகரிலுள்ள மெதடிஸ்த திருச்சபையின் ரிம்மர் மண்டபத்தில் யாழ். மாவட்ட சர்வமதத் தலைவர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களுடன் கலந்துரையாடுவதற்கு முன்னர் இரு நிமிட மௌன வணக்கம் செலுத்துவதையும் -
யாழ். நகர் சின்னமுகைதீன் பள்ளி வீதியிலுள்ள முஸ்லிம் கலவன் பாடசாலைக்கு விஜயம் செய்து அங்கு தங்கியுள்ள முஸ்லிம் மக்களுடன் குழுவினர் கலந்துரையாடியதையும் படங்களில் காண்கிறீர்கள். (ஒ-14)

யாழ்ப்பாணம், மார்ச் 31

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையிலான சர்வமத சம்மேளனத்தின் உயர் மட்டக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு தமிழ், முஸ்லிம் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை நேரில் அவதானித்தும் கேட்டறிந்தும் கொண்டனர்.

நேற்றுக்காலை யாழ். நகரிலுள்ள கதியா முஸ்லிம் மகளிர் வித்தியாலயம், முஸ்லிம் கலவன் பாடசாலை ஆகியவற்றில் தங்கியுள்ள முஸ்லிம் மக்களை அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அதன் போது '' எமக்கு அரச காணிகளை வழங்கி வீடுகளை நிர்மாணித்துத் தாருங்கள் '' என அந்த மக்கள் கோரினர்.

அதனைத் தொடர்ந்து பொம்மைவெளிப்பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தமது பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

தங்களின் பகுதிகளுக்கு அமைச்சர்கள், அரச அதிகாரிகள் வந்து குறைகளைக் கேட்டுச் செல்கின்றனரே தவிர இதுவரையும் அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

இதன்போது மௌலவி சுபியானும் சமுகமளித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இணுவில் ரயில் நிலையப்பகுதியில் தங்கியுள்ள தமிழ்மக்களைச் சந்தித்துக் குறைநிறைகளைக் கேட்டறிந்தனர். வலி. வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டு மீளக்குடியமர முடியாததன் காரணமாகவே மக்கள் இங்கு தங்கியிருப்பதாகவும் எனவே தங்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்த மக்கள் சர்வமத சம்மேளனத்திடம் வேண்டிக்கொண்டனர். அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தருமாறும் கேட்டுக்கொண்டனர்.

இந்தச் சந்திப்புக்களைத் தொடர்ந்து யாழ். நாகவிகாரை பீடாதிபதியுடனான சந்திப்பு இடம்பெற்றது. பின்னர் யாழ். நகரில் உள்ள இராணுவத்தினரின் சிவில் அலுவலகத்தில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துறுசிங்கவைச் சர்வமதக் குழுவினர் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

இறுதியாகக் குழுவினர் யாழ். மாவட்ட சர்வ மதத் தலைவர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களுடன் கலந்துரையாடினர்.

கரித்தாஸ், தேசிய கிறிஸ்தவ மன்றம், இலங்கை மெதடிஸ்த திருச்சபை ஆகியவற்றின் ஏற்பாட்டிலேயே சர்வமத சம்மேளனக் குழுவின் விஜயம் இடம்பெற்றிருக்கிறது.

இந்தக் குழுவில் முன்னாள் பேராயர் கலாநிதி ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை, தெமட்டகொட சீவலி தேரர், கொட்டாவ தம்ம அலங்கார தேரர், இந்து கலாசார விடயங்களுக்கான ஜனாதிபதியின் இணைப்பாளர் இராமச்சந்திரபாபு சர்மா, மௌலவி ஆதம்பாவா மற்றும் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் உள்ளிட்டவர்கள் இடம்பெற்றிருந்தனர். (ஒ-14)

## நேற்றுமுன்தினம் ஏற்பட்ட திடீர்த் தீ நாசகாரச்செயலா?

# யாழ். முனீஸ்வரன் வீதி வியாபாரிகள் நேற்று கடைகளைப்பூட்டி எதிர்ப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். நகர் முனீஸ்வரன் வீதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு திடீரென ஏற்பட்ட தீயினால் கடைகள் சில எரிந்து நாசமாகி இருந்தன. இந்தச் சம்பவத்தை நாசகாரச் செயல் என வியாபாரிகள் கூறுகின்றனர்.

இந்த அசம்பாவிதத்தைக் கண்டித்து நேற்று அந்த வீதியில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட வியாபாரிகள் கடைகளை மூடி தமது எதிர்ப்பை - கண்டனத்தை வெளிப்படுத்தினர். மின் ஒழுக்கினால் இந்தச் சம்பவம் ஏற்படவில்லை எனவும் இது பற்றி உரிய விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் ஏற்பட்ட இந்தத் திடீர் தீயினால் மூன்று கடைகள் முற்றாக எரிந்து நாசமாகின. அருகில் இருந்த வேறு சில கடைகளும் பாதிக் கப்பட்டன. இதனால் வியாபாரிகளுக்கு பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கடைகள் எரிந்து கொண்டிருந்த வேளையில் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் தலை காட்டாத போதும் இராணுவத்தினரும் பொதுமக்களும் பெரும்பாடுபட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் என்பது தெரிந்ததே.

வியாபாரிகளின் முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் தொடர்ந்து தீவிர விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ-4-26)

# மன்னாரில் தனியார் பஸ் வேலைநிறுத்தம்

## நேரக் கணிப்பாளர் தாக்கப்பட்டதன் விளைவு

மன்னார், மார்ச் 31

மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் நேரக் கணிப்பாளர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய நபருக்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் நேற்று முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபரை கைதுசெய்து அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் வரை பணிப் பகிஷ்கரிப்பு தொடரும் என அச் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் நேற்று முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதால் பிரயாணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்றும் மன்னாரிலிருந்து வெளி மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்படுபவை வருமாறு:-

மன்னார் தனியார் போக்குவரத்து நிலையத்தில் நேரக் கணிப்பாளராகப் பணிபுரியும் பிரஸ்தாப நபர் நேற்று முன்தினம் இரவு மன்னார் நகரில் வைத்து கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த நபரும் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினரும் அன்றைய தினமே மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். எனினும், பொலிஸார் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனைக் கண்டித்தே இந்த பணிப் பகிஷ்கரிப்பு இடம்பெறுகின்றது. (த-சி)

# ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து பிளேக்கிடம் தமிழர் பேரவை முறையீடு

வொஷிங்டன், மார்ச் 30

இலங்கைத் தமிழ் மக்களின் [illegible]னை குறித்து உலகத் தமி[illegible] பேரவை உறுப்பினர்களுக்[illegible] அமெரிக்க துணை இரா[illegible] செயலாளர் றொபர்ட் ஓ[illegible]க்குக்கும் இடையிலான [illegible] வொஷிங்டனில் இடம் [illegible]து.

அமெரிக்கத் தமிழ்அரசியற் செயலவை ஒழுங்கு செய்திருந்த இச்சந்திப்பு வொஷிங்டனில் அரச திணைக்களத்தில் இடம்பெற்றிருந்தது.

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் வண. சீ.யோ. இமானுவேல் அடிகளாரின் தலைமையில் அமெரிக்கத் தமிழ் அரசியற் செயலவைத் தலைவர் டாக்டர் எலயஸ் ஜெயராசா, திருமதி கிறேஸ் விலியம்ஸ், சுரேன் சுரேந்திரன் ஆகியோர் உலகத் தமிழர் பேரவையின் குழுவில் சார்பில் கலந்து கொண்டனர்.

வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களின் இன்றைய இன்னல்களைச்சுட்டிக் காட்டியதாகவும் தமிழ் மக்களின் [illegible] கள் பற்றியும் அவர்களின் [illegible] குறைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பிடமிருந்து வந்த அண்மைய அறிக்கை பற்றியும் துணைச்செயலாளருடனும் தாம் கலந்துரையாடியதாக உலகத் தமிழர் பேரவை அறிவித்துள்ளது. (ஒ-10)

## செங்குந்தவுக்கு விருது

யாழ்ப்பாணம், மார்ச் 31

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையில் பாடசாலைகளின் செயற்றிறன் மதிப்பீட்டில் யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

வடக்கு மாகாணத்தில் 'பி' பிரிவின் கீழ் இந்தப் பாடசாலை விருதைப் பெற்றுக் கொண்டது என்று பாடசாலையின் அதிபர் ஆர்.பாலகுமார் தெரிவித்துள்ளார். (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் 5ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

கொழும்பு, மார்ச் 31

உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் 5ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் படவுள்ளது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா நேற்றுத் தெரிவித்தார்.

நடந்துமுடிந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தேசிய காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற 29 உறுப்பினர்கள் நேற்று அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர். இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு -

மக்களுக்கு மேலும்பல நன்மைகளை செய்துகொடுக்கும் வகையிலும், ஏற்கனவே காணப்பட்ட சில குறைபாடுகளை நிவர்த்தி செய்தும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்வரும் 5ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றத்துக்கு இந்தத் திருத்தச்சட்டமூலம் கொண்டுவரப்படும்.

ஏற்கனவே இருந்த விருப்பு வாக்கு முறைமை சீர்ப்படுத்தப்பட்டு, அதற்குப் பதிலாக தொகுதி முறைமை கொண்டுவரப்படவுள்ளது. இதன் ஊடாக விருப்பு வாக்குகளினால் ஏற்படுகின்ற மோதல்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.

- இப்படி அவர் தெரிவித்தார். (ஒ-சி)

# கடுமையான எச்சரிக்கையுடன் நேற்று முகிழ்நிலை ஆசிரியர்களுக்குப் பிணை

யாழ்ப்பாணம், மார்ச் 31

எதிர்காலத்தில் மாணவ சமுதாயத்தை வழிநடத்தப்போகின்ற ஆசிரியர்கள் இவ்வாறு 'ராக்கிங்'கில் ஈடுபடக்கூடாது என்று கடுமையாக எச்சரித்த யாழ்.நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா 15 கல்வியியற் கல்லூரி மாணவர்களையும் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

கடந்த திங்கட்கிழமை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கிலமொழி பாட முகிழ்நிலை புதுமுக மாணவர்கள் மூத்த மாணவர்களால் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் 15 மாணவர்களைக் கோப்பாய்ப் பொலிஸார் கைதுசெய்து யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

நேற்றுமுன்தினம் விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா அவர்களைத் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார்.

இருப்பினும் குறிப்பிட்ட மாணவர்களை நேற்று முன்தினம் பிணை எடுக்காதமையினால் நீதிமன்றக் காவலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இது சம்பந்தமான விசாரணைகளை நேற்றைய தினமும் மேற்கொண்ட யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா இனிவரும் காலங்களில் இது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என்று அவர்களைக் கடுமையாக எச்சரித்ததுடன் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் பிணைக்கான கையொப்பமிட்டு 15 மாணவர்களையும் அழைத்துச் சென்றார்.

இதேவேளை - விடுதலையான 15 மாணவர்களுக்கும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட தேசிய கல்வியியற் கல்லூரி நிர்வாகத்தினர் தடைவிதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதன்படி இந்த மாணவர்கள் 15 பேரும் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட முடியாது என்று அதன் பீடாதிபதி தெரிவித்துள்ளார். இதற்கிடையில் விடுதலையான மாணவனான அசோக்குமார் என்பவர் வீடு செல்வதற்குத் தயாரானபோது மயக்கமுற்றதாகவும் அவர் கோப்பாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-10-9)

## விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் படுகாயமடைந்ததுடன் ரங்காவும் அவரது சாரதியும் சிறுகாயங்களுக்கு உள்ளானார்கள்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா நேற்று மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கி வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தார் அவர் பயணித்த வாகனம் நேற்று மாலை 5 மணியளவில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து செட்டிகுளம் வைத்தியசாலைக்கு முன்பாக மதில் ஒன்றுடன் மோதி அதனை உடைத்துக்கொண்டு உள்ளே நின்ற மரத்துடன் மோதிச் சிதைவடைந்தது. இந்த விபத்துச் சம்பவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரங்காவின் மெய்ப் பாதுகாவலர் ஒருவர் படுகாயமடைந்து செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இதில் ரங்காவுக்கும் அவரது சாரதிக்கும் சிறுகாயங்கள் ஏற்பட்டன. அவர்கள் செட்டிகுளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

**BIT வகுப்புகள்**

கொழும்பு பல்கலைக்கழகத்தின்
BIT Semester 2,4,6 புதிய பிரிவுகள்
ஆரம்பம் BIT கற்பித்தலில் 9 வருட
தொடர்ச்சியான அனுபவம்.
*By R.Kumaran B.Sc.*
MIS,74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.- 0776577359

**C.T.C**

பிறவுண் வீதி, , யாழ்ப்பாணம்.
**O/L DAY CLASS**
யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர்களினால்
ஆரம்பம் :- 02.04.2011 (காலை 9 மணி)
*அனுமதிகள் வழங்கப்படுகின்றன.*
நிர்வாகி

**கணினி வகுப்புகள்**

Java, JSP, Servlet, Linux, PHP,
MySQL, Joomla, WordPress, Drupal
ASP.Net, SQL Server, VB.Net, SCJP,
RHCE, CEH, BIT, ICT 10, 11, A/L.
*By R.Kumaran B.Sc.*
MIS,74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்.

**MyWay** யின்
**Complete English**
Volume 1 - Spoken English
Volume 2 - Grammar With CD/DVD
Volume 3 - Fluency Development
தனியாரும் பெற்றுக்கொள்ளலாம்
விலை ரூபா 1500/- மட்டும்
**MyWay** 182 - 1/5, Stanley Road, Jaffna
Tel : 021 222 95 05 Mobile : 077 33 63 456

**MyWay** யின் அதிபர், ஆசிரியர்
அலுவலர்களுக்கான சனி ஞாயிறு
3 மாத பயிற்சிநெறி
புதிய பிரிவுகள் ஆரம்பம்
காலம் : 3 மாதம் கட்டணம் : 8000/-
2ஆம் 3ஆம் திகதிகளில் பயிற்சியில்
சேருவோருக்கு சலுகை கட்டணம்
ரூபா 3000/- மட்டும்
**MyWay** 182 - 1/5, Stanley Road, Jaffna
Tel : 021 222 95 05 Mobile : 077 33 63 456

## மரண அறிவித்தல்



### கந்தையா சண்முகலிங்கம்

(முன்னாள் லிங்கம் ஹவுஸ் - உரிமையாளர்)

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகலிங்கம் நேற்று முன்தினம் (29.03.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் மீனாட்சியின் மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், குகனேஸ்வரி (கணக்காளர் - நகர சபை, வவுனியா), சிவசோதி (பொறியியலாளர் - பிரான்ஸ்), கெங்காதரா (பொறியியலாளர், சிங்கப்பூர்), பத்மலோசனா (போதனாசிரியர் - கணினி அலகு, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, நல்லதம்பி மற்றும் நடராசாவின் சகோதரரும் திருமதி சபாநாயகத்தின் சம்பந்தியும், அருட்செல்வியின் மாமனும் தனிஷிகாவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2011) வியாழக்கிழமை மு.ப.10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.57, கே.கே.எஸ் வீதி,
வேல் மிக்சர் அருகில்,
கொக்குவில், யாழ்ப்பாணம். (2759) (37)

தகவல்:
குடும்பத்தினர்.

**STUDY AND WORK in New Zealand, Cyprus, Singapore & UK**
VISA க்குப் பின்னர் பல்கலைக்கழக / கல்லூரிக் கட்டணம் செலுத்தும் வாய்ப்பு
**India- Courses offered**
**Engineering**
BE - Electronics and Communication
BE - Electrical and Electronics
BE - Computer Science
BE - Information Science
BE - Mechanical
BE - Civil
For Placement 0770767114 0750398686
**Medical Courses**
B.Pharmacy
BSc-Nursing
BPT-Physiotherapy
MBBS, BDS
EASY ACCESS CONSULTANCY
INTERNATIONAL STUDENT PLACEMENT & IMMIGRATION CONSULTANTS
RAIL ROAD LANE, KOKUVIL EAST KOKUVIL,
e-mail: candae015@hotmail.com
Tel: 0770767114 / 0750398686

**Deutsch, Dutch, French, Italian**
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடை பெறுகின்றன.
Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
குறிப்பு I:- யூன் மாத ஜேர்மன் எம்பசி பரீட்சைகளுக்கான ஜேர்மன், Deutsch புதிய வகுப்புக்கள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
குறிப்பு II:- நெதர்லாந்து டச், ஜேர்மன் டொச் புதிய வகுப்புக்கள் எதிர்வரும் சனிக்கிழமை 02.04.2011 ஆரம்பமாகின்றது.
GOV.Reg.No W/A 76795 T.P: 0774842464, 0213216928, 0779927117

## நன்றி செலுத்தும் வழிபாடு

மண்ணில் 31 . 03 . 1898



விண்ணில் 26 . 04 . 1977

மறைந்த தந்தை செல்வா அவர்களின் 113ஆவது பிறந்த தினத்தில் வாழ்க்கைக்கும், சேவைக்கும் நன்றி செலுத்தும் வழிபாடு.

இடம் - புனித.யோவான்ஸ்நானகன் ஆலயம் (சுண்டுக்குளி)
காலம் - இன்று (31.03.2011) வியாழக்கிழமை
நேரம் - பிற்பகல் 4.00 மணி
அருளுரை - அருட்தந்தை S.M.P. ஆனந்தகுமார்
(புனித தோமாவின் ஆலயம், மாதகல்)

இந்த நிகழ்வுக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர், யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம் (J.C.U)

**A/L 2013 தமிழ் வகுப்புகள்**
01.04.2011 இல் ஆரம்பம் முந்துங்கள் அனுமதிக்கு
தமிழியற் கல்லூரியின் பிரபல தமிழ் ஆசான்
க.சந்திரலிங்கம்
வகுப்புகள் நடைபெறும் இடங்கள்
இல. 39, செட்டித்தெரு, நல்லூர். - பி.ப. 2.00
மாதா கோயிலடி, பருத்தித்துறைச் சாலை, கோப்பாய். - காலை 7.00
கோட்டக்காட்டுலேன், பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு. - பி.ப. 3.00
ஆட்ஸ் அக்கடமி, பருத்தித்துறை வீதி, புத்தூர். - காலை 6.00
"ஏழைகளின் மூலதனம் கல்வி"

**Quick Learning Course**
**Spoken English with Grammar**
Duration 1 Month Rs. 3000.00
உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
18-04-2011
Batch 14 : 09.00 AM - 01.00 PM
Batch 15 : 01.30 PM - 05.30 PM
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.03.2011 அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org